R & C PROPERTY LAWYERS LLP
& NOTARY PUBLIC
10a Upper Tooting Road, London SW17 7PG
Telephone: 02087724920
Conveyancing Services:
Residential, Commercial Conveyancing,
Notarial Services:
Notarisation & Legalisation of Documents
Power of Attorneys,
SENTHURAN THAVARAJA LLB (Hons) Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor

A Freely Circulated Monthly
# புதினம்
PUTHINAM
FEBRUARY 2019
மலர் 24
இதழ் 1

For all your legal requirements
1. Immigration and Asylum
2. Human Rights Act challenges and European Law
3. Family Law
4. Criminal Law
5. Landlord and Tenants
6. Civil Litigation
7. Public Law
46 High street
Colliers wood
London SW19 2BY.
Tel: 020 8544 9285
Fax: 020 8542 9530
Email:llsolicitors@hotmail.com
Although this is a new firm of solicitors, it is run by experienced legal practitioners of over 25 years standing.

லண்டனில் முதலாவது தமிழர் நகை மாளிகை
WESTERN Jewellers
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
Tooting Branch:
230 Upper Tooting Road, London Sw17 7EW
Tel : 02087673445
Wembley Branch:
5, Plaza Parade, 29-33 Ealing Road, Wembley, MiddX HAO 4YA
Tel : 02089030909

THARANI JEWELLERY
அதி குறைந்த வட்டி வீதத்தில்
அடைவு பிடிக்கும் நகை மாளிகை
54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ.
Tel: 020 8902 7111, 020 8902 6777

# தலைவர்... பராக்!

தேர்தல் அரசியலிற்குள் மூழ்கிப்போயுள்ளது தமிழ்த் தேசிய அரசியல் வெளி.

மேய்ப்பனைத் தேடும் அரசியல் ஆய்வுகள் ஊடகங்களை நிரப்புகின்றன.

மக்கள் திரள் அரசியல் பற்றி யாருக்கும் அக்கறை இல்லை.

பிம்பக் கட்டமைப்பின் ஊடாக புதிய தலைவர்கள் உருவாக்கப்படுகிறார்கள்.

இதுதான் இன்றைய ஈழ தேசத்தின் அரசியல் நிலைமை.

சுமந்திரன் குறித்து ஒருவகையான 'தலைமைப்பிம்பம்' கட்டமைக்கப்படுகிறது.

இணையவெளிகளிலும், அச்சு ஊடகப்பரப்பிலும், திட்டமிட்டவகையில் இவை வடிவமைக்கப்படுகின்றன.

தமிழ்த் தேசிய அரசியலை, பௌத்த சிங்கள பேரினவாத கொழும்பு அரசியலுடன் இணைக்கும் சுமந்திரனின் அரசியல் நகர்வு, தொடர் சறுக்கலை சந்தித்தவாறே நகர்கிறது.

புதிய அரசியலமைப்பு வரைபு குறித்து 'ஜனநாயகப் பேரொளி'(!) ரணில் கொடுத்த ஒற்றையாட்சி விளக்கத்தால், சிங்களத்தோடான உறவுப் பாலம் உடைந்துவிட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பும் அறுந்துவிட்டது.

இதனால் சினமடைந்த நாடாளுமன்ற தமிழ்த் தலைவர்களை, சில அனைத்துலக பிராந்திய மேய்ப்பர்கள் சந்தித்து ஆறுதல் வார்த்தைகள் கூறுகின்றனர்.

எப்படியாவது அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் ரணில் கூட்டுக்கு சென்றுவிட வேண்டுமென்பதே இந்த சர்வதேச மேய்ப்பர்களின் எதிர்ப்பார்ப்பு.

ஆனாலும் எந்த தீபாவளித் தீர்வு வாக்குறுதியை வழங்கி, ரணிலுக்கு வாக்களிக்கச் சொல்வார்கள் என்ற கேள்வியும் எழுகிறது.

இருக்கவே இருக்கிறார் மகிந்தர்.

அநேகமாக 'மகிந்தர் வரக்கூடாது' என்பதனை முன்வைத்து, 'ரணிலுக்கு வாக்களியுங்கள்' என்று மட்டுமே கூட்டமைப்பால் சொல்ல முடியும் என்று நம்பலாம்.

அதுதான் நடக்கும்.

பாவம் மக்கள்!

வியாபாரத்துக்கு பணம் தேவையா?
Need Money For Your Business?
வியாபார உரிமையாளருக்கு
ஒரே நாளில் கடன் கிடைக்கும்
24 மணி நேரத்துக்குள் கடன் பெறலாம்
Working Captial For Business Owners Only
No Bank Statement Needed
Same day Service
Easy and Fast approval Within 24 Hours or less
Pay off early with a discount Option is available
'புதினம் இதழில் பார்த்ததாக குறிப்பிட்டு பேசுங்கள்':
07414817455

செல்வராஜா கோல்டு ஹவுஸ்
Tooting Broadway
அனைத்து ஆடைகளும் ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம்
Buy 1 GET 1 FREE
162 B, MITCHAM ROAD, LONDON SW17 9NJ
TEL: 020 87673795

டயபட்டிஸ் சலன்ஜ்
ஹோமியோபதி மருத்துவம் + உங்கள் ஒத்துழைப்பு
100% கட்டுபடுத்தலாம்
HOMOEO CARE
30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்
மருத்துவ ஆலோசனைக்கு: 02081441553
Viber: 0044 7833341693 skype: homoeocare
வெப்சைட்: www.homoeocare.com இமெயில்: homoeocare@rediffmail.com

தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448

Lyca TV

# உலகின் மிகப் பிரமாண்டமான தொலைக்காட்சி நிலையம்

ஒருவருட இணைப்புச் சந்தா

£89

SET TOP BOX INCLUDED

புதுப்பித்தல்

£69


13 மாதங்கள்



70க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்

TENT KOTTA

1000க்கும் அதிகமான தமிழ்த் திரைப்படங்கள்



+

EROS NOW

4000க்கும் அதிகமான தமிழ் & ஹிந்தித் திரைப்படங்கள்



DOWNLOAD VIDEOS

Look for this symbol to Download TV episodes to watch on the go without using data

MOBILE & TABLET

Download on the App Store

GET IT ON Google Play

OFFLINE VIEWING FEATURES

நிகழ்ச்சிகளை DOWNLOAD செய்து, INTERNET இணைப்பின்றி உங்களுக்கு விரும்பிய நேரத்தில் பார்க்கும் வசதி

* Selected channels only

SUBSCRIBE NOW!

0207 132 2727

FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCAMEDIA LTD. ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCAMEDIA LTD, THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THEREOF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.

www.lycatv.tv



# ஒருபுறம் வேடன்! மறுபுறம் நாகம்!



# இரண்டுக்கும் நடுவே தாயகத் தமிழர்

**இந்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ரணிலின் ஏஜன்டாகச் செயற்பட்டு தமிழர் வாக்குகளைப் பெற்றுக்கொடுக்க கூட்டமைப்பின் சுமந்திரன் ஆரம்பித்துள்ளார். இத்தேர்தலில் மைத்திரியின் முகவராக செயற்படவென நியமிக்கப்பட்ட ஆளுனர் ராகவன் தமது செயற்பாடுகளை அத்திசை நோக்கி ஆரம்பித்துள்ளார். இருவரும் ஏட்டிக்குப் போட்டியாக நாளொரு வண்ணம் விடும் அறிக்கைகளும், மலர்மாலை மேளவாத்திய ஊர்வலங்களும் வடக்கை ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டன.**

இலங்கைத் தமிழரின் அரசியல் போராட்டம், அரசியல் தீர்வு முயற்சி, அரசியல் விடிவுக்கான செயற்பாடு என்பவை எத்திசை நோக்கி இப்போது செல்கின்றன என்ற கேள்வி கடந்த சில நாட்களாக மேலோங்கி வருகிறது.

தமிழ் மக்கள் சார்பில் குரல் கொடுப்பவர்கள், பேச்சுவார்த்தை நடத்துபவர்கள், தீர்வை நோக்கி காய்களை நகர்த்துபவர்கள் இப்போது யார்?

தாம் சார்ந்த சமூகம், தாம் பிரதிநிதித்துவம் செய்யும் இனம், தாம் சார்ந்த அரசியல் கட்சி என்பவற்றைவிட யாரோ ஒருவருக்காக அவர்களின் இயந்திரத்தின் சக்கரமாக சிலர் செயற்படுவது கண்கூடாகத் தெரிகிறது.

கடந்த சில நாட்களாக பொன்னாடைகள் (பன்னாடைகள்), மலர்மாலைகள், சந்தன மாலைகள், மேளதாள வாத்திய சமேத ஊர்வலங்கள் என்ற முன்னைய அரசியல் கலாசாரம் மீண்டும் மெதுமெதுவாக தலையெடுக்க ஆரம்பித்துள்ளது.

வழிபாட்டுத் தலங்களையும், விளையாட்டு மைதானங்களையும், வெள்ளம் வழிந்த திடல்களையும் மையப்படுத்தி ஒளிப்பட பரப்புரைகள் ஒருபுறம். தங்களுக்குத் தாங்களே கூட்டங்களை ஏற்பாடு செய்து அட்டகாச அறிவிப்புகளை வெளிப்படுத்துவது இன்னொருபுறம். விரைவில் தேர்தல்கள் வரப்போகின்றன என்பதை வடக்கு மக்கள் அறிய ஆரம்பித்து விட்டனர்.

இந்தத் திருவிளையாடல்களுக்கு மத்தியில் சில ஊடகங்கள் அகப்பட்டு நெரிபடுவதையும் காண முடிகிறது. இந்த வகையில், வடக்கில் பவனி வரும் இரண்டு பிரதானிகளை இங்கு அலச வேண்டியுள்ளது.

ஒருவர், வடமாகாண ஆளுனராக கடந்த மாதம் நியமனம் பெற்ற கலாநிதி சுரேன் ராகவன். அடுத்தவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எல்லாமாகத் தம்மை முன்னிலைப்படுத்தி வரும் சுமந்திரன் என்னும் நாடாளுமன்ற உறுப்பினர்.

ஆளுனர் ராகவன் இதுகாலம்வரை இலங்கை அரசியலில் அறியப்படாத, பேசப்படாத ஒருவர். அதனாற்தான் போலும் இதுவரை இலங்கையின் அரசியல் விவகாரங்கள் பற்றி வாயே திறக்கவில்லை. அதற்காக அவர் இனியும் அவ்வாறு இருப்பாரென நிச்சயமாகச் சொல்ல முடியாது.

வீழ்ந்திருக்கும் தேசத்தைக் கட்டியெழுப்புவதோடு, வடமாகாணத்தை முன்னேற்றமடைய பாடுபடுவேனென அறிவித்துள்ளார். வடக்கையும் தெற்கையும் இணைக்கும் பாலக் கட்டுமானத்தின் ஓர் அணிலாகவேனும் செயற்பட விரும்புகிறாராம்.

ஒப்பந்தம் செய்யக்கூடிய ஆளுமை, சட்டத்தின் ஆட்சியிருத்தல், சுதந்திரத்துக்கான தாகமும் அதற்கான தேவையும் ஜனநாயகத்தின் (?) முக்கியமெனவும் கூறியுள்ளார். யுத்தம் முடிவுற்று பத்து வருடங்களாகியும் வடக்கு மாகாணத்தில் தமிழ் மொழிக்குரிய இடம் இன்னும் கிடைக்கவில்லையென்றும் அழுகிறார் (தமிழரசுக்கட்சி எம்.பியாகவிருந்த கா.பொ. இரத்தினம், அப்போது ஒவ்வொரு நாடாளுமன்ற அமர்விலும், பேருந்துகளிலும், வீதிப்பலகைகளிலும், தபால் நிலையங்களிலும் தமிழ்மொழி புறக்கணிக்கப்படுவதாக கூறி வந்ததுமே இங்கு ஞாபகம் வருகிறது).

மேற்சொன்ன கருத்துகள் ஆளுனர் ராகவனால் அவரது பதவியேற்பின்போது கூறப்பட்டவைகளில் சில.

அன்றிலிருந்து இன்றுவரை பத்திரிகைகளின் முன்பக்கத்தை தமது அதிரடி அறிவிப்புகளால் அலங்கரித்து வருகிறார் இவர்.

தமிழ்ப் பகுதிகளில் அரசியல் நோக்கத்துடன் முன்னெடுக்கப்படும் பௌத்த மயமாக்கல் நிறுத்தப்பட வேண்டுமென்ற இவரது அறிவிப்பு, சிங்கள தேசத்தை சிலிர்த்தெழ வைத்துள்ளது.

இது தொடர்பாக மகாசங்கத்துடன் பேசுவேன் என்ற இவரது ஒரு வசனம், பௌத்த மயமாக்கலை இவரால் ஒன்றும் செய்ய முடியாதென்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

யாழ்ப்பாணத்தின் கல்வி நிலை குன்றியுள்ளது, தமிழர்களிடையே ஒற்றுமை இல்லாதிருப்பதே அவர்களின் கடந்தகால தோல்விக்குக் காரணமென்று கூறியவையும், வெள்ளம் பெருக்கெடுத்த இரணைமடு செயற்பாட்டுக்கு விசாரணைக் குழுவை நியமித்ததும், பொங்கல் நாளன்று தம் விருப்பப்படி வடபகுதி பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கியதும் போன்று இவர் இதுவரை மேற்கொண்ட செயற்பாடுகளால் பலரும் வியப்படைந்துள்ளனர்.

சகல நிறைவேற்று அதிகாரங்களையும் கொண்ட ஜனாதிபதியால்கூட செய்ய முடியாதவைகளை ஆளுனர் ராகவன் செய்து விடுவாரோ?

ராகவனின் நியமனம் அரசாங்கத்தின் தெரிவன்று. நேரடியாக ஜனாதிபதியின் தெரிவு. எனவே இவரை பரமசிவன் கழுத்திலிருக்கும் பாம்பு என்றும் பார்க்கலாம்.

திடுதிப்பென ஆளுனர் கதிரையில் ஏற்றப்பட்ட ராகவன், படபடவென என்னென்னவோ சொல்கிறார், என்னென்னவோ செய்கிறார் என்றால் அதற்கு மைத்திரியின் கடைக்கண் பார்வை கட்டாயம் இருக்க வேண்டும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் வடபகுதித் தமிழரின் வாக்குகளை கூட்டமைப்பினரே மைத்திரிக்கும் ரணிலுக்கும் பெற்றுக் கொடுத்தனர் என்று அவர்களே பலதடவை கூறியுள்ளனர்.

இப்போது கூட்டமைப்பினர் மைத்திரி பக்கம் இல்லை. ரணிலுடன் அவர்கள் இரண்டறக் கலந்துவிட்டனர்.

இந்த நிலையில் இந்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு வாக்குகளின் ஒரு பகுதியையாவது தம் பக்கம் இழுக்க ராகவனை மைத்திரி ஆளுனராக நியமித்து அங்கு அனுப்பியுள்ளாரென்று நம்புவதற்கு இடமுண்டு. இயலுமானவரை தமிழர் வாக்குகளை பிளந்திட ராகவன் மைத்திரிக்கு உதவக்கூடும்.

இவ்விடத்தில் ராகவன் பற்றிய இன்னொரு குறிப்பையும் தெரிவிக்க வேண்டும். இவர் ஒட்டாவா பல்கலைக்கழகமொன்றில் பேராசிரியராகப் பணியாற்றியதாக இவரது நியமனத்தின்போது ஜனாதிபதி அலுவலகத்தின் ஊடக அறிக்கை தெரிவித்தது. ஆனால், இவர் அவ்வாறு எந்தப் பதவியும் வகிக்கவில்லையென்றும், அப்பல்கலைக்கழகத்தின் கருத்தரங்கொன்றில் உரையாற்றியது மட்டுமே அப்பல்கலைக்கழகத்துக்கும் இவருக்குமுள்ள தொடர்பு என்றும் தெரிய வந்துள்ளது.

சந்திரிகா பண்டாரநாயக்கா ஜனாதிபதியாக வந்தபோது அவர் பிரான்ஸ் பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரியென்று பொய் கூறி அகப்பட்ட கதை போன்றதாக ராகவனின் கதையும் இருக்கலாம். அரசியலில் இதுவெல்லாம் சகஜம் போலும்.

அடுத்து, சுமந்திரனின் அண்மைக்கால செயற்பாடுகளை அணுகலாம். இவரது அரசியல் வாழ்க்கை முதல் பத்தாண்டை இன்னமும் பூர்த்தி செய்யவில்லையென்பதை இங்கு முதலிலேயே குறிப்பிட வேண்டும்.

கூட்டமைப்பில் எல்லோரும் தமக்குப் பின்னால் தானென்று படம் காட்டும் போக்கில் இவரது அரசியல் வியாக்கியானங்கள் அமைந்துள்ளன. கூட்டமைப்புக்கு சம்பந்தன் என்றொரு தலைவர் இருப்பதை மறக்கும் வகையில் இவருக்கு கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

ஒற்றையாட்சிக்கும் ஒருமித்த நாட்டுக்கும் ரணிலுக்கோ, மைத்திரிக்கோ, மகிந்தாவுக்கோ தெரியாத அல்லது புரியாத அரசியல் விளக்கங்களை அதிமேதாவித்தனமாகக் கூறி வருகிறார்.

இந்த மாதம் (பெப்ரவரி)-4ம் திகதிக்கு முன்னர் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு வரப்போவதாக செல்லுமிடமெங்கும் சொல்லி தமிழர் காதுகளில் பூ வைக்கிறார். அது சாத்தியமில்லையென்பதை சிங்களவர் மட்டுமன்றி தமிழரும் நன்கறிவர்.

மூன்றரை ஆண்டுகளாக தைப்பொங்கல், தீபாவளி, புதுவருடம் ஒவ்வொன்றின்போதும் நம்பிக்கை கூறி வந்த சம்பந்தனின் அறிவிப்புகள் காற்றோடு பறந்து விட்டன. இப்போது சுமந்திரன் சிங்கள தேசத்தின் சுதந்திர நாளை நம்பிக்கை நாளாக பிரகடனம் செய்துள்ளார்.

ஆனால், அவரது வட்டத்துக்குள்ளிருந்தே கருத்துகள் மோதுகின்றன. அரசாங்கம் தங்களை ஏமாற்றுகிறது என்று குழம்புகிறார் மாவை சேனாதிராஜா. புதிய அரசியலமைப்பு ஒருபோதும் சரிவராது என்கிறார் புளொட் சித்தார்த்தன். ரெலோவின் செல்வம் அடைக்கலநாதன் கள்ள மௌனம் மேற்கொள்கிறார்.

ரணில் பின்வாங்க மாட்டாரென்று இன்னும் குருட்டு ஆரூடம் கூறுகிறார் சம்பந்தன்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டபோது நாடாளுமன்றத்தின் 225 உறுப்பினர்களும் ஆதரவளித்தனர். இம்மாதம் முற்பகுதியில் இதன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோது 56 உறுப்பினர்கள் மட்டுமே பங்குபற்றினர் என்றால் இதன் எதிர்காலத்தை உய்த்துணரலாம்.

இதற்கிடையில் கடந்த மாதம் தமக்கான கூட்டமொன்றை சுமந்திரன் யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்தார். இதில் உரையாற்றிய காலைக்கதிர் பத்திரிகை ஆசிரியர் வித்தியாதரன் அடுத்தடுத்து தொடுத்த கேள்விகள் சுமந்திரனை திக்குமுக்காடச் செய்தது.

தமிழரசுக் கட்சியின் ஆண்டுக் கணக்குகள் காட்டப்படாதமை, சிங்கள தேசப் பிரச்சனையில் ரணிலுக்கு ஆதரவு வழங்கியமை, தமிழரசுக் கட்சியினரை விடுதலைப் புலிகள் கொலை செய்ததால்தான் அவர்களுடன் டீல் செய்யப்பட்டதாக கூறப்படுவது, தனது கையாட்களை வைத்து விடுதலைப் புலிகள் தொடர்பான பிரச்சனைக்குரிய அம்சங்களை வெளிப்படுத்துவது போன்ற குற்றச்சாட்டுகள் சுமந்திரன் மீது வித்தியாதரனால் சுமத்தப்பட்டது.

நடிகர் வடிவேலுவின் உரையாடலொன்றை வித்தியாதரன் சரியான சந்தர்ப்பத்தில் பயன்படுத்தி சுமந்திரனை நிலைதடுமாறச் செய்தார். இவரது கேள்விகள் எதற்கும் சுமந்திரன் இதுவரை பதில் சொல்லவில்லை. ஆனால், பருத்தித்துறையில் தாமே ஏற்பாடு செய்த தமக்கான கூட்டமொன்றில் காலைக்கதிரை கறுப்புப் பத்திரிகை என்பது போலவும், வித்தியாதரனை மகிந்தவின் சகா என்பது போலவும் குறிப்பிட்டு தமது அரைகுறை அரசியல் பார்வையை வெளிப்படுத்தினார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலின் ஏஜன்டாக செயற்படுவதற்கு தமக்குள்ள தகுதிகளை மக்கள் முன்னால் நிலைநாட்ட சுமந்திரன் முயற்சிக்கிறார். மைத்திரியின் வெற்றிக்காக தம்மால் வடக்கில் தமிழருக்கு ஆதரவாக செயற்படுவது போன்ற தோற்றத்தை நிலைநாட்டுவதில் ஆளுனர் ராகவன் முயன்று வருகிறார். இது எதுவும் தமிழருக்கு தெரியாதவையல்ல.

ஒருபுறம் வேடன் மறுபுறம் நாகம் என்பதுபோல, தாயகத்தமிழர் இருவருக்குமிடையே நசிபடும் நிலைமை இப்போது வியாபித்து வருவது பரிதாபத்துக்குரியது. ●

# புதினம்
PUTHINAM

லண்டன் தமிழர்களின்
அபிமான இலவச இதழ்

ஆசிரியர்:
ஈ.கே.ராஜகோபால்
E.K.Rajagopal

வடிவமைப்பு
சத்யன் லே-அவுட்
9551395516

அலுவலக முகவரி:
PUTHINAM
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk


முக்கிய அறிவிப்பு

அடுத்த **புதினம்** இதழ்
மார்ச் - ஏப்ரல் இணைந்த
ஒரே இதழாக
ஏப்ரல் 2019இல்
வெளிவரும் என்பதை
அறியத் தருகிறோம்.

- நிர்வாகி

## Chemistry Tuition for GCSE and A-Level in South London



**Dr.M.Murugesan M.Sc.,Ph.D.**

- More than 25 years experience in research and teaching
- All Exam Boards Covered
- 100% Guarantee to achieve higher grades
- Separate revision class for exams

One-to-one or group seasons

**Contact: 078675 25165**

## *You Will Always Be With Us*

13th March 1937



3rd January 2019

### Our Beloved
## Noel Rajiv Manikkawasagan

A loving, faithful, loyal husband and
father who worked tirelessly
to provide a secure new life in London.
We deeply admire and value the sacrifices
he made for us
and thank Jesus for blessing us
with such a hardworking.
God fearing man.
We will see you one day
With the lord jesus in Heaven.

-Shanti, Naomi and Rex (Tooting)



## பகுதி நேர வேலைக்கு
## பெண் பணியாளர் தேவை



பகுதி நேரமாக லண்டனில்
வீடொன்றில் பணியாற்றுவதற்கு
பெண் பணியாளர் ஒருவர்
தேவைப்படுகிறார். சிறு சமையல்,
வீடு துப்பரவாக்குதல், போன்ற மற்றும்
சில வேலைகளைச் செய்வதே.
முக்கிய கடமையாகும் சம்பளம்
நேரில் பேசித் தீர்க்கப்படும்.

PART TIME HELP REQUIRED

**தொடர்புகளுக்கு: 01737355858**

Part Time help Required for light Cooking, cleaning ETC.
Please Call: 01737 355858

## உயர்வாசற்குன்று முருகன் கோவில்
## HIGHGATEHILL MURUGAN TEMPLE

200A, Archway Road, London N6 5BA Tel: 020 8348 9835 Fax: 020 8482 6508

### திருவிழாக்களும் விசேட பூசைகளும்
### Aupicious Days, Special Poojahs & Festivals - 2018

### February - 2019 நடைபெறும் நிகழ்வுகள்

| | | | |
|---|---|---|---|
| 01 | Friday | Pirathosha Viratham | பிரதோச விரதம் |
| 04 | Monday | Amaavaasai Viratham | அமாவாசை விரதம் |
| 08 | Friday | Chathurthi Viratham* Thai Last Friday | சதுர்த்தி விரதம், கடைசி வெள்ளி |
| | | Thiruvilakku Pooja 7 pm | திருவிளக்குப் பூசை இரவு 7 மணி |
| 10 | Sunday | Shasdi Viratham | சஷ்டி விரதம் |
| 12 | Tuesday | Karthikai Viratham* | கார்த்திகை விரதம் |
| 15 | Friday | Ekathasi Viratham | ஏகாதசி விரதம் |
| 17 | Sunday | Perathosa Viratham | பிரதோச விரதம் |
| 18 | Monday | Sri Nadesar Abishakam 1 | நடேசர் அபிசேகம் |
| 19 | Tuesday | Full Moon, Masi Magam* | பூரணை, மாசி மகம் |
| | | Eve. Chandrasekar & Umalambal Veethi Ula | சந்திரசேகர் உமையம்மாள் வீதியுலா |
| 22 | Friday | Sankadakara Chathurthi | சங்கடகர சதுர்த்தி |

# விமலின் பக்கம்



தமிழ் சினிமாப் படங்களில் பயங்கரமான நோய்கள் கதாநாயனுக்கோ, கதாநாயகிக்கோ அல்லது அவர்களது அப்பா அம்மாவுக்கோ வந்து அவர்கள் அவஸ்தைப்படுவதை நாம் நிறையவே கண்டிருக்கிறோம்.

வெள்ளைக் கோட்டு அணிந்த ஒருவர் தமது முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு "உங்கள் கணவருக்கு வந்திருப்பது 'லிம்போ சார்க்கோமா' (இரத்தப் புற்றுநோய்) என்பார். பூமி வெடிக்கும்! மின்னல் இடிக் காட்சிகள் திரையில் ஓடும்! 'கமெராமன் (படப்பிடிப்பாளர்) தமது கமெராவை மூன்று தரம் தலைகீழாகச் சுழற்றிவிடுவார்! கதாபாத்திரங்களின் அதிர்ச்சியை பட ரசிகர்களுக்குத் தெரிவிக்க இந்த உத்திகள்!

அடுத்த காட்சியில் கதாநாயகனை ஒரு சக்கர நாற்காலியில் வைத்து தள்ளிச் சென்று கொண்டிருப்பாள் சோகமே உருவான மனைவி! ஒரு சோகப் பாடல் வானில் இருந்து அசரீரியாக ஒலிக்கும்.

இப்படியாக தமிழக சினிமாவில் வெள்ளித் திரையில் மட்டும் காட்சி தந்து 3 மணி நேரம் எங்களை மிரள வைத்த இந்த மரண பயங்கர வியாதிகள் இன்று வெள்ளித் திரையில் இருந்து வெளியே குதித்து எங்கள் நண்பர்கள், உறவினர்கள் குடும்பத்தினருக்கு நிரந்தர அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றன. எங்கள் அருகில் வந்து நின்று தோள் மேலாக எட்டிப் பார்த்து எங்கள் காதுகளில் அவை கிசுகிசுக்கின்றன!

அப்படி என்ன கிசுகிசுக்கின்றன?



"அடுத்தது நீங்களாகவும் இருக்கலாம்!" என்ற எச்சரிக்கைதான்!

ஒரு சனிக்கிழமை இரவு மகளின் பிறந்த நாள் விழாவை மிகவும் குதூகலமாக - பிரமாண்டமான அளவில் கொண்டாடிய எங்கள் நண்பர் - அன்று கண்மண் தெரியாமல் பிரமாண்டமான போத்தல்களை நண்பர்களுடன் சேர்ந்து காலி செய்த நண்பர் - மறுநாள் காலையில் மாரடைப்பினால் விடை பெற்றுக் கொள்கிறார். அந்த விழாவுக்கு வந்த நண்பர்களுக்கும் மற்றவர்களுக்கும் இரத்தத்தை உறைய வைத்த செய்தி இது!

மறு வாரம் சனிக்கிழமை காலையில் இலண்டன் மயானத்தில் 'கறுப்பு சூட்' அணிந்த நான்கு வெள்ளையர்களின் தோளில் ஏறி சவப்பெட்டியில் அந்த நண்பர் பயணம் செய்த காட்சி எல்லோரையும் அதிர வைத்தது.

இப்படியாக மயானங்களில் வழி அனுப்பும் பிரியாவிடை சம்பவங்களில், எம்மவர்கள் பெரும்பாலானவர்களுக்கு ஒரு 'ஞானம்' பிறக்கும்! அதன் பெயர் 'சுடலை ஞானம்!'

"இனிமேல் நான் 'விஸ்கியைத் தொடமாட்டேன்'என்றும் பலர் உறுதி மொழி அளிப்பார்கள்.

இதெல்லாம் அநாவசியம். உங்கள் குடும்ப வைத்தியரை ஒழுங்காகப் போய் சந்தித்து அவர் சொல்வதைச் செய்தாலே போதும்!

மாரடைப்பு, புற்றுநோய், இரத்த அழுத்தம், சர்க்கரை அதிகரிப்பு ஆகியன இங்கு புலம்பெயர் நாடுகளில் தாயகத்தில் இருந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் வாழும் எம்மவர்களை நிரந்தர அச்சத்தில் தள்ளி பீதியை ஏற்படுத்தி வரும் நோய்கள். எனது இந்தக் கட்டுரையைப் படித்துக் கொண்டிருக்கும் சொந்தங்களில் ஒரு குறிப்பிட்ட தொகையானோர் என்னைப் போல அறுபதைத் தாண்டியவர்கள். அதாவது வாழ்க்கை என்ற கடிகாரத்தில், மாலை நேரத்தைக் கடந்து கொண்டிருப்பவர்கள். மாலையும் இரவும் சந்திக்கும் நேரம் ஒரு மயக்கமான நேரம் என்று சொல்வார்கள்.

ஏனென்றால், மாலை நேரம் மறைந்து விட்டதும் இருளின் ஆட்சி ஆரம்பமாகிறது. நாம் விரும்பியோ, விரும்பாமலோ இரவு என்பது நாம் தூங்க வேண்டிய நேரம். அது நிரந்தரத் தூக்கமாகவும் இருக்கலாம்!

நான் முன் சொன்ன நோய்களை விட அறுபது வயதைத் தாண்டியதும் எம்மவர்கள் பலர் மத்தியில் நான் இப்போது அச்சப்படும் ஒரு நோய் 'அல்சைமர்' எனப்படும் 'மூளைத் தேய்வு' நோய்!

மருத்துவ நிபுணர் அலோயஸ் அல்சைமர் என்ற ஜெர்மன் மனநல மருத்துவர் 1906-ம் ஆண்டில் இந்த நோய் பற்றி முதன் முதலாக எழுதியபடியால் இந்த மூளை பற்றிய நோய்க்கு 'அல்சைமர்' நோய் என்றே பெயரிடப்பட்டுள்ளது.

பெரும்பாலும் மூத்த தலைமுறையினர் மத்தியில் ஏற்படும் ஞாபக மறதி (டிமென்சியா என்ற நிலை) மூளையில் ஏற்படும் பல்வேறு நோய்களினால் விளைகிறது. இந்த நோய்களில் மிகவும் மோசமானது 'அல்சைமர்.'



மனித மூளை என்பது பல கோடிக் கணக்கான நரம்புக் கலங்களினால் ஆனது. ஒன்றோடு ஒன்று நிரந்தரமான தொடர்பு வைத்திருக்கும் இந்த நரம்புக் கலங்களில் தொடர்புகள் துண்டிக்கப்படும்போது மூளை தடுமாறுகிறது. தொடர்புகள் துண்டிக்கப்படும் மூளைத் தடுமாற்றத்தினால் ஏற்படும் 'ஞாபக மறதி' என்பது மிகவும் சாதாரண விஷயத்தை நினைவில் வைத்திருக்க முடியாத நிலை ஏற்படுவதை 'அல்சைமர்' நோயின் ஆரம்பக் குறி என்று மருத்துவ நிபுணர்கள் விபரிக்கிறார்கள்.

- சாவியை எங்கே வைத்தேன்? -
- மூக்குக் கண்ணாடி தொலைந்து விட்டது என்று வீடு முழுக்கத் தேடுதல் -
- நண்பர்களுடனான சாதாரண உரையாடலின்போது ஒரு பொருத்தமான வார்த்தையைத் தேடுதல் அல்லது ஒருவரின் பெயரை மறந்து போதல் -
- மிக அண்மையில் சம்பவங்களை அல்லது உரையாடல்களை முற்றாக மறந்து விடல் -
- மிக மிக பழக்கமான இடத்திற்குப் போய் அங்கிருந்து வீடு திரும்ப வழி தெரியாமல் தடுமாறல் -
- மருத்துவரிடம் அல்லது வழக்கறிஞரிடம் முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்பு திகதி அல்லது நேரத்தை மறந்து விடுதல்

இவை 'அல்சைமர்' நோயின் ஆரம்ப அறிகுறிகள் எனக் கூறப்படுகின்றன.

நோய் மோசமடையும்போது மொழி ஆற்றல் குறையலாம்; உரையாடல்களைத் தொடர்புபடுத்த தவறலாம்; ஏற்கனவே சொன்ன விஷயத்தை மீண்டும் மீண்டும் பேசக்கூடும்; திட்டமிட்டு ஒழுங்காகச் செய்ய வேண்டிய விஷயத்தை (உதாரணமாக சமையல் செய்தல்) திட்டமிட்டு ஒழுங்காகச் செய்ய முடியாமல் போகக் கூடும்!

என் வாழ்வில் நான் மதிக்கும் ஒரு நண்பர் - அவருக்கும் என் மீது அளப்பரிய அபிமானம், பிரியம். 'அல்சைமர்' நோய் தாக்கி மோசமடைந்த காலத்தில் நான் அவரைப் பார்க்கப் போன சமயம் வழக்கமான கம்பீரத் தோற்றத்துடன் வீட்டில் அமர்ந்திருந்தார். என்னைக் கண்டதும் நகைச்சுவையாகப் பேசும் என் இனிய நண்பர், என் முகத்தையே மறந்து என்னை உற்று உற்று நோக்கியமை என் உள்ளத்தை சுக்கு நூறாக்கியது!

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் றொனால்ட் றேகன் பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பின் 'அல்சைமர்' நோயினால் பாதிக்கப்பட்டு முடங்கிப் போய் இருந்தார். ஓய்வுபெற்ற அதிபர்களைப் பாதுகாக்கும் சீ.ஐ.ஏ. மெய்க்காப்பாளர்களைப் பார்த்து "நீங்கள் யார்? ஏன் இங்கே நிற்கிறீர்கள்?" என்று கேட்பாராம். அவரது மனைவி நான்சி றேகன் கணவருக்கு ஞாபக சக்தியைத் தூண்டிவிட பழைய அமெரிக்கச் செய்திப் படங்களை வீடியோவில் போட்டுக் காட்டுவாராம்.

உலங்கு வானூர்தியில் அதிபர் அரச பவனி மேற்கொள்ளல்; சீன ரஷ்ய தலைவர்களுடன் றேகன் சந்திப்பு.

இப்படி வரலாற்று முக்கியத்துவம் மிக்க சம்பவங்களை வீடியோவில் பார்க்கும்போது எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் முறைத்துப் பார்த்தபடி இருப்பாராம் றேகன்.

இந்த 'அல்சைமர்' நோய் பற்றிய பரிபூரண அறிவு எம்மவர்கள் மத்தியில் மிகக் குறைவு என்பது வருத்தத்திற்குரிய விஷயம். தமிழக கோடம்பாக்க திரை உலகம் இந்த விஷயத்தில் தன் பங்களிப்பைச் செய்திருக்கிறது.

"60 வயது மாநிறம்" என்று ஒரு தமிழ் படம் எழுதி இயக்கியிருப்பவர் ராதா மோகன். மொழி, அபியும் நானும், காற்றின் மொழி ஆகிய படங்களைப் போலவே இதுவும் ராதா மோகனுக்கு பிரமாத வெற்றியையும் புகழையும் குவிக்கக் கூடிய ஒரு படம்.

பிரகாஷ்ராஜ் நிறையப் படித்த ஒரு பட்டதாரி பேராசிரியர். தான் காதலித்த பெண்ணைத் திருமணம் செய்து ஒரு மகனையும் பெற்றெடுக்கிறார். மனைவி புற்று நோயினால் உயிரிழந்ததும் நிறையப் படித்த அவரது மூளை குழம்புகிறது. மருத்துவரிடம் போனால் அவர் 'அல்சைமர்' நோய் என்று கண்டுபிடித்து - அந்த நோய் பற்றிய எல்லா விபரங்களையும் கொடுக்கிறார்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் பேரனும் நடிகர் பிரபுவின் புதல்வருமான விக்ரம் பிரபு, அமெரிக்கா போக ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் புதல்வராக நடிக்கிறார்.

பிரகாஷ்ராஜின் நோய் ஒரு கட்டத்தைத் தாண்டியதால் 'முழு நேர கவனிப்பு' அவசியமாகிறது. இதனால் ஒரு காப்பகத்தில் சேர்க்கப்படுகிறார்.

எங்கள் ஊர் மொழியில் 'விசர் ஆசுப்பத்திரி' என்று விபரிக்கப்படும் மருத்துவமனை வேறு! 'அல்சைமர்' நோயினால் தம்மையும் தமது நினைவுகளையும் இழந்தவர்களுக்கான காப்பகம் வேறு!

**(30ம் பக்கம் பார்க்க)**

# Sky Wings Travel

*Your Travel Is Our Passion...*

24

# Talk to our Specialist

## 0208 672 9111

## COLOMBO SPECIALS

**Easter Sale from £580.00** | **Summer sale from £696**

**Book now for Easter**
with a deposit of £150.00 and pay monthly without any additional cost.






## SECURE YOUR BOOKING BY PAYING A £150 DEPOSIT

## WORLDWIDE SPECIALS

| | | | |
|---|---|---|---|
| MELBOURNE | Fr £588 | CHENNAI | Fr £377 |
| AUKLAND | Fr £420 | TRICHY | Fr £381 |
| NEW YORK | Fr £380 | DELHI | Fr £369 |
| SYNDEY | Fr £591 | KUALA LUMPUR | Fr £441 |
| TORONTO | Fr £344 | SINGAPORE | Fr £447 |

**119 Tooting High Street, London, SW17 0SY**

IATA

*Above fares are subject to availablity - T&Cs apply*

5766 ATOL PROTECTED





# பிரெக்ஸிட்: திசை கெட்டு நிற்கும் பிரித்தானியா

பிரெக்ஸிட் என்பதற்கான தமிழ்ப்பதத்தை பிரிவெளியேற்றம் என முதலில் எடுத்துக்கொள்வோம். பிரித்தானியா ஐரோப்பியத்தில் இருந்து வெளியேறவேண்டும் என்ற கருத்துக்கான வாக்கெடுப்பு 2016-ம் ஆண்டு ஜூன் மாதம் 23-ம் திகதி செய்யப்பட்டது. அக் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் வாக்களித்தவர்களில் 51.9விழுக்காட்டினர் பிரித்தானியா வெளியேறவேண்டும் என்றும் 48.1 விழுக்காட்டினர் வெளியேறக் கூடாது என்றும் வாக்களித்தனர். ஆனால், பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து எப்படி வெளியேற வேண்டும் என்பது தொடர்பாக எந்த ஒரு விவாதமும் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பின் போது முன்வைக்கப்படவில்லை. தற்போது ஆளும் கட்சியின் அமைச்சரவைக்குள் எப்படி வெளியேற வேண்டும் என்பது தொடர்பாக கடும் முரண்பாடு நிலவுகின்றது.

ஆத்தைவிட்டுப் போகணும் என்று தோணுது எப்படிப் போகணும்னு தோணலையே!

பிரித்தானியா எப்படி ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேற வேண்டும் என்பது தொடர்பான முடிவை அதன் பாராளுமன்றம்தான் எடுக்க வேண்டும் என்ற நிலையை பாராளுமன்ற உறுப்பினர்கள் எடுத்துள்ளனர். ஆளும் கட்சிக்குள் எப்படி வெளியேற வேண்டும் என்பது தொடர்பாக பல முரண்பட்ட கருத்துக்கள் இருக்கின்றன. இப்போது மென்வெளியேற்றம் (*Soft Exit*), வன்வெளியேற்றம் (*Hard Exit*), உடன்பாடில்லா வெளியேற்றம் (*No-deal exit*) என மூன்று முக்கிய வெளியேற்றத்திற்கான வழிகள் முன்வைக்கப்படுகின்றன.

பிரித்தானியத் தலைமை அமைச்சர் தெரெசா மே அவர்களும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரிவெளியேற்றம் தொடர்பான அதிகாரியான பிரான்சைச் சேர்ந்த மைக்கேல் பாணியரும் முன்வைத்தனர். அந்த திட்டம் -நோர்வேப்பாணி பங்காண்மை என விபரிக்கப்பட்டது. அதை பிரித்தானியப் பாராளுமன்றம் நிராகரித்தது.

### மென்வெளியேற்றம் - நோர்வேப்பாணி பங்காண்மை

ஐரோப்பியத்துடன் தொடர்ந்தும் உறுதியான தொடர்புகளைப் பேணிக் கொண்டு அதனுடன் ஒரு உடன்பாட்டுடன் வெளியேறவேண்டும் என்பதே மென்வெளியேற்றமாகும். வெளியேறிய பின்னர் தற்போது நோர்வேயுடன் இருக்கும் தொடர்பைப் போல பிரித்தானியாவிற்கும் ஒன்றியத்திற்கும் இடையிலான உறவு இருக்க வேண்டும். அதற்கு பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தின் இரு முக்கிய அமைப்புக்களான 1. ஐரோப்பிய சுதந்திர வர்த்தக அமைப்பு *-European Free Trade Association (EFTA)* இதை *CUSTOM UNION* எனவும் அழைப்பர். 2. ஐரோப்பிய பொருளாதார வலயம்*-European Economic Area (EEA)* இதை *SINGLE MARKET* எனவும் அழைப்பர். இவற்றில் EEAஇல் உறுப்புரிமையை தொடர்ந்து பேணவேண்டும். தற்போது பிரித்தானியா இரண்டிலும் உறுப்பினராக உள்ளது. அப்படி இருப்பதால் பொருட்களும் சேவைகளும் பிரித்தானியாவிற்கும் மற்ற ஒன்றிய நாடுகளுக்கும் இடையில் தங்கு தடையின்றி வர்த்தகம் செய்யப்படும். இந்த வெளியேற்றம் பிரித்தானியப் பொருளாதாரத்திற்கு மிகவும் குறைந்த பாதிப்பை ஏற்படுத்தும் என இதன் ஆதரவாளர்கள் கருதுகின்றார்கள். ஸ்கொட்லாந்து மக்கள் எதிர்க்கும் பொது மீன்பிடிக் கொள்கை இதில் இருக்காது. பல இலண்டன் வலது சாரிகள் கடுமையாக எதிர்க்கும் ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தின் நியாய ஆதிக்கம் பிரித்தானியா மீது இருக்காது. ஆனால், *EFTA* நீதிமன்றத்திற்கு பிரித்தானியா கட்டுப்பட்டதாக இருக்கும். ஐரோப்பிய ஒன்றியம் நிறைவேற்றிய சட்டங்களில் *75%* நோர்வேச் சட்டங்களாகவும் இருக்கின்றது. ஐரோப்பிய பொருளாதார வலயத்தில்*-European Economic Area (EEA)* உறுப்பினராக இருந்தால் மக்கள், பொருட்கள், சேவைகள், முதலீடுகள் ஆகியவை தங்கு தடையின்றி ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டிற்கு செல்லக் கூடியதாக இருக்க வேண்டும். ஐரோப்பிய ஒன்றியத்தின் முழு உறுப்பினராக இருக்கும் போது அதன் சட்டவாக்கங்களில் பிரித்தானியாவின் பங்களிப்பும் இருந்தது. ஆனால், நோர்வேப்பாணி பங்காண்மையில் அப்பங்களிப்பு இருக்காது. அதனால் குடிவரவுக் கட்டுப்பாடுகள் இருக்காது. இவற்றால் நோர்வேப்பாணி பங்காண்மை முழுமையான உறுப்புரிமையுடன் இருப்பதிலும் மோசமானது என்பது ஐரோப்பிய ஒன்றியத்தில் நம்பிக்கையற்றோரின் வாதம்.

### ஒற்றைச் சந்தையும் கஷ்டமான யூனியனும்

*EFTA* உறுப்புரிமை ஐரோப்பிய ஒன்றியம் மற்ற நாடுகளுடன் செய்யும் வர்த்தக உடன்படிக்கைகளில் நன்மையை பிரித்தானியாவும் பெற முடியும் ஆனால், பிரித்தானியா தனியே எந்த ஒரு நாட்டுடனும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை செய்ய முடியாது. இப்படிப்பட்ட பிரித்தானியாவின் கைகளை கட்டிப் போடும் நிபந்தனைகளை ஐரோப்பிய ஒன்றியத்தின் நம்பிக்கையற்றோர் வெறுக்கின்றனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பினராக பிரித்தானியா இருப்பதால் மற்ற ஐரோப்பிய நாடுகளில் இருந்து பெருமளவு மக்கள் பிரித்தானியாவில் குடியேறுவதை ஐரோப்பிய ஒன்றியத்தில் நம்பிக்கையற்றோர் கடுமையாக எதிர்த்தார்கள். அதிலும் வேறு நாடுகளில் இருந்து ஐரோப்பியாவில் குடியேறியவர்கள் பிரித்தானியாவிற்குள் வருவதற்கு கடும் எதிர்ப்பு இருக்கின்றது.

ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் *EEA(single Market)* உறுப்புரிமை பிரித்தானியாவிற்கு உகந்தது என நினைக்கின்றார்கள். *Article 102* இன் படி ஐரோப்பிய ஒன்றியத்தின் சட்டங்களை அவசியம் ஏற்படுமிடத்து நோர்வே நிராகரிக்க முடியும் ஆனால், அது இதுவரை அப்படிச் செய்ததில்லை. ஆனால், பிரித்தானியா பல இரத்துக்களைச் செய்யும் எனப் பலரும் எதிர்பார்க்கின்றார்கள். பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறிய பின்னர் *EFTA* உறுப்புரிமை பெற இரண்டு ஆண்டுகள் காலதாமதம் ஏற்படலாம்.

### பெரிய வெள்ளி பெரிய பிரச்சனை

அயர்லாந்து எல்லைப் பிரச்சனையைத் தீர்க்கும். உடன்பாடில்லாமல் வன்வெளியேற்றம் மேற்கொண்டால் வட அயர்லாந்திற்கும் அயர்லாந்து குடியரசுக்கும் இடையிலான எல்லையில் தடை விதிக்க வேண்டியிருக்கும். வட அயர்லாந்திற்கும் அயர்லாந்திற்கும் இடையிலான எல்லை ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் பிரித்தானியாவிற்கும் இடையிலான ஒரே தரை வழி எல்லையாகும். பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வன்வெளியேற்றம் மேற்கொண்டால் அந்த எல்லையை ஐரோப்பிய ஒன்றியம் மூடச்சொல்லும். அல்லாவிடில் பிரித்தானியாவில் இருந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு பொருட்கள் தடையின்றி ஏற்றுமதி செய்யப்படும். ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் இருந்து பிரித்தானியாவில் குடியேற விரும்புபவர்கள் அந்த எல்லையூடாகப் பயணிப்பதை தடை செய்ய பிரித்தானியாவில் இருக்கும் குடிவரவுக்கு எதிரான கருத்துக் கொண்டவர்கள் வலியுறுத்துவர். அந்த எல்லை திறந்து இருக்க வேண்டும் என்பது வட அயர்லாந்து மக்களுக்கும் பிரித்தானிய அரசுக்கும் இடையில் 1998 ஏப்ரல் 10-ம் திகதி வெள்ளிக்கிழமை செய்து கொள்ளப்பட்ட பெரிய வெள்ளி உடன்படிக்கையின் முக்கிய அம்சமாகும். இது பிரிவெளியேற்றத்தில் மிகவும் சிக்கலான பிரச்சனையாக இருக்கின்றது. அதனால் பெரிய வெள்ளி உடன்படிக்கையை மீள் வரைபு செய்ய தெரெசா மே அவர்கள் முயற்சிக்கின்றார் என உறுதிப்படுத்த முடியாத செய்திகள் வெளிவந்தன. அது வெற்றியளிக்கும் சாத்தியம் குறைவாகும்.

### இரண்டாம் திட்டம்: சிக்கல்கள் தொடரலாம்

முதலாம் திட்டத்தை பாராளுமன்றம் நிராகரித்த பின்னர் இரண்டாம் திட்டத்தை 2019 ஜனவரி 21-ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். பாராளுமன்ற உறுப்பினர்கள் அதில் திருத்தங்கள் கொண்டு வரலாம். ஏற்றுக் கொள்ளப்பட்ட திருத்தங்களை உள்ளடக்கிய இரண்டாம் திட்டத்தின் மீதான வாக்கெடுப்பு 2019 ஜனவரி 29-ம் திகதி பாராளுமன்றத்தில் நடக்கும். ஆளும் கூட்டணியில் உள்ள 110 பாராளுமன்ற உறுப்பினர்கள் முதலாம் திட்டத்திற்கு எதிராக வாக்களித்தனர். அவர்களின் மனதை மாற்றக் கூடிய வகையில் இரண்டாம் திட்டம் இல்லை என்றே சொல்ல வேண்டும். பிரித்தானியப் பாராளுமன்றம் ஒரு திட்டத்தை ஏற்றுக் கொண்ட பின்னர் அதைக் கொண்டு வந்தால் தாம் அதைப் பரிசீலிப்போம் என்கின்றது ஐரோப்பிய ஒன்றியம். தலைமை அமைச்சர் பிரிவெளியேற்றத்திற்கான பிரிவெளியேற்றவாதிகள் உடன்பாடில்லாமல் வெளியேறுங்கள் என உறுதியாகச் சொல்கின்றார். இரண்டாம் திட்டம் தோல்வியடைந்தால் உடன்பாடில்லாத வெளியேற்றம் நடக்கலாம் அல்லது வெளியேறும் திகதியை பிரித்தானியா ஒருதலைப் பட்சமாக பிற்போடலாம். இரண்டாம் கருத்துக் கணிப்பிற்கான ஆதரவு பிரித்தானியாவில் அதிகரிக்கின்றது. அது நடக்கலாம். அதில் மீண்டும் வெளியேற்றத்திற்கு ஆதரவு என மக்கள் முடிவெடுத்தால் சிக்கல்கள் மீண்டும் முதலில் இருந்து ஆரம்பிக்கும். வெளியேறக் கூடாது என்று மக்கள் விரும்பினால் மீண்டும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கட்டுப்பாடுகளை ஏற்கும் கடப்பாடு தொடரலாம்.

### இரண்டாம் கருத்துக்கணிப்பு

வெளியேற்றத்தை தொழிற்கட்சி கடுமையாக எதிர்க்கின்றது. இரண்டாம் திட்டத்துடன் இரண்டாம் கருத்துக்கணிப்பும் ஒரு மாற்றுத் தெரிவாக இருக்க வேண்டும் என்கின்றது தொழிற்கட்சி. பிரித்தானியா வெளியேறுவது தொடர்பான எந்தத் தீர்மானத்தையும் தாராண்மைவாதிகளும் ஸ்கொட்லாந்து தேசியவாதிகளும் எதிர்ப்பார்கள். டொமோக்கிறசிக் யூனியனிஸ்ற் வட அயர்லாந்து எல்லைப் பிரச்சனையில் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். தொழிற்கட்சியின் முன்னாள் அமைச்சர் இவற் கூப்பரும் பழமைவாதக் கட்சியின் முன்னாள் அமைச்சர் நிக் போல்சும் இணைந்து இரண்டாம் திட்டத்தில் ஒரு மாற்றத்தை முன்மொழிந்துள்ளனர். ஐந்து முன்னணிக் கட்சிகளின் 30 உறுப்பினர்கள் ஒப்பமிட்டுள்ள அத்திருத்தம் உடன்பாடில்லாமல் பிரித்தானியா வெளியேறக் கூடாது என்கின்றது. அத் திருத்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டால் பிரிவெளியேற்றம் தாமதிக்கப்படலாம்.

எல்லாக் கட்சிகளும் ஒன்றுபட்டு நிறைவேற்ற வேண்டிய ஒரு செயல்முறைக்கு கட்சிகளுக்கு உள்ளேயே பல முரண்பாடுகள் இருப்பதால் எத்திசையில் நகர்வது என முடிவெடுக்க முடியாமல் பிரித்தானியா தடுமாறுகின்றது. ஆனாலும் பாராளுமன்றத்திலும் கட்சிகளுக்குள்ளும் மக்களாட்சி முறைமைக்கு குந்தகம் விளையாமல் இருப்பது மெச்சத் தக்க ஒன்றே. ●



# World Tour Store

எங்கள் பயண முகவர்களுடன் தமிழிலும் பேசலாம்

## SERVING THE COMMUNITY FOR 14 YEARS

## Flights to COLOMBO fr £458

### Worldwide Flight Deals

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Chennai | fr £388 | Delhi | fr £333 | Toronto | fr £352 |
| Trichy | fr £756 | Goa | fr £503 | Bangkok | fr £401 |
| Kochi | fr £415 | Dubai | fr £324 | Singapore | fr £373 |
| Mumbai | fr £378 | Abu Dhabi | fr £328 | New York | fr £292 |

### HOLIDAY OFFERS










**FLY NOW PAY LATER OR BOOK WITH A DEPOSIT**

**HURRY ! CALL NOW 020 3970 4141**

**Visit Us - 111b, Loampit Vale, Lewisham SE13 7TG**

*Above fares are subject to availability. T&C's Apply.

3550 ATOL PROTECTED



ப.வை. ஜெயபாலன்



# எதையோ இழந்துவிட்டது போன்ற வெறுமை

# நிலைப்பு இங்கு; நினைப்பு அங்கு!

ஊர்தான் உலகம் என்று வாழ்ந்த பள்ளிப்பருவம். இயற்கையின் சிரிப்பு. எளிமையின் சிறப்பு இணைந்த எம் தாயகம் - இன்றும் நினைக்கும் போதே இனிமை ஊறும் எமது பசுமை பீறும் எங்கள் சிறிய ஊர். பண்டங்கள் வாங்க சங்கக்கடை; மரக்கறி மீனுக்கு தெருச்சந்தை; கும்பிடக் கோயில்; படிக்கப் பள்ளி; அதில் படிப்பிக்கிற ஒவ்வொரு மாணவனின் குடும்ப வரலாறும் தெரிந்த ஊர் உபாத்தியாயர்கள். சில வேளை குடும்பமாகச் சென்று சினிமாப் பார்க்க பட்டின திரை அரங்குகள், ஆலயங்களில் ஆண்டுதோறும் கொண்டாட்டம் தரும் திருவிழாக்கள், வேள்விகள். அன்றாட உணவுத்தயாரிப்பு; உடை துவைப்பு; தோட்டப் பராமரிப்பு என உடல் உழைப்புக்கள். நாளாந்தம் நித்தம் சுற்றிவரும் வாழ்க்கைச் சக்கரம்.

ஒட்டுறவாக ஒரே அறையில் தாய் தந்தை சகோதரங்கள் படுத்து எழும்புகின்ற தாயக குடும்ப பந்தம். குடும்பமாக குசினிக்குள் பலகையில் குந்தி பந்தியில் இருந்து அம்மா பரிமாற உண்ணும் உணவு. இட்டலி, குண்டுத் தோசை என இடையிலே வீடுகள் காணும் விசேட ஆகாரங்கள், அடுத்த வீட்டுக்கும் பரிமாறப்படும் ஒட்டுறவு. பொங்கல், தீபாவளி, வருடப்பிறப்பு, திவசம் என உறவுகள் ஒன்றுகூடிக் களிக்கும் உல்லாசம்.

இங்கே இப்பொழுது லண்டன் நகர வாழ்வு, அடுக்கு மாடி வீடு, ஆயிரம் நவீன வசதிகள் இருப்போடு, எல்லாமே இருப்பது போன்ற வெளித்தோற்றம். ஆனாலும் எதையோ இழந்துவிட்டது போன்ற வெறுமை- விரக்தி-வேதனை கலந்த உள் மனத்தாக்கம். வசதிகளை எம் வசம் வைத்துக்கொண்டு வேலை தலத்தில் உழைப்பே வாழ்வாக உடலைத் தேய்த்து, வசதிகளுக்கான கட்டணத்தை தவணைக்கு தவணை சிட்டைகளுக்கு கட்டும் இயந்திர ஓட்டம்.

கட்டிலை விட்டு எழுந்ததும் வேலைக்கு ஓட்டம். தேவைப்படின் இரண்டு வேலை. இருப்பது சொற்ப இடைவேளை. தூக்கம் தாக்கும் ஆளை. ஒரே வீட்டில் இருந்தும் பிள்ளைகள் கண்ணில்படார் பலவேளை. குடும்பமாகக் கூடி பசிக்கு ருசித்து புசிக்க முடியாத நிலைப்பாடு. விடுமுறையிலும் இரட்டைச்சம்பளம் தரும் வேலைச்சோலி. அடுத்த வீட்டில் திருட்டோ, சாவோ நடந்தாலும் அறியாத ஓட்டம், சொந்தம், சகோதரம், தாய் தந்தை என்ற பந்தங்கள் இங்கு இருந்தாலும் அவ்வப்போது தொலைபேசி உரையாடலோடு நிறைவு காணுகின்ற பாச நிலை...

தாயகத்துக்கு மீள மனம் நாடினாலும் கால்களைக் கட்டிப்போடும் இளசுகளின் எதிர்காலம் பற்றிய ஏக்கம். நிலைப்பு இங்கு; நினைப்பு அங்கு! ஆற்றாமையாலே மாற்றான் வீட்டில் வாழ்வதான தாழ்வு மனப்பாங்கு. ஏன் எதனால் இந்த மனப்பாங்கு ஈங்கு?

பழக்கம், வாழ்ந்த வாழ்வுநெறியே ஒழுக்கம் என்ற மன உணர்வு. பரம்பரை பரம்பரையாக மனத்தில் நிலைநிறுத்தப்பட்ட பண்பாடு. ஊரின் வாசனையில் ஊறி தேறி உணர்வு பீறி நிற்கும் உள்ளம். சோறு மதியம் தாமதித்தாலும் சீறி கொதிக்கும் வயிறு. கூழுக்கு நாளாந்தம் ஏங்கும் பழகிப்போன நாக்கு. மனது நினைக்கும் தோறும் மகிழ்வு பிரவாகிக்கின்ற தாயக மண்.

வேலி அடைப்புக்குள் சங்கடப் படலையை நுழைவாயிலாக கொண்டு; வாழை, கமுகு, தென்னை, பலா தோடை, மாதுளை என்று மரச்செடிகளுக்கு மத்தியில் நினைவில் தெறிக்கின்ற பிறந்த வீடு. நினைக்கும் போதே கண்ணை நனைக்கின்ற... பாசத்தை உதிரமாக பிழிந்து ஊட்டி வளர்த்த பெற்ற தாய். கண்டிப்போடும் கனிவோடும் குடும்பத்தை கொண்டு செலுத்திக் கொண்டிருந்த தந்தை; வழிகாட்டிகளாக குடும்பங்களுடன் ஒன்றி நின்ற அப்பம்மா, அம்மம்மா, தாத்தா, அப்பப்பா, என்ற உறவுக்கிட்டி விளையாடிய மாமரத்தடி, வளவு மூலையில் அமைந்த மலகூடம், மாட்டுக் கொட்டில், கோழிகள் படுத்துறங்கும் தோடை நினைக்கும் தோறும் நெஞ்சில் மலர்ச்சி பீறும்.

ஆலய தரிசனம்... ஆண்டவன் மீதான அன்றாட வழிபாடு என்பன இன்றும் எங்கும் மாறாத பண்பாடு. தாயகத்திலும் புலம்பெயர் நாட்டிலும் இதிலும் பல வித்தியாசங்கள் கண்கூடு. காலை எழுந்ததும் கிணற்றடியில் பல்துலக்கி முகம் கழுவி, குளிக்கும் கழிவுநீர் ஓட செழித்து வளரும் சிரம்பரத்தம் செடியில் சில பூப்பறித்து சாமி அறையில் உள்ள படங்களுக்கு சாத்தி, விபூதி பூசி, தேவார பாராயனம் செய்து வந்தால் தான் காலைக்கோப்பி



அம்மா கையால் கிடைக்கும். இது எங்களின் பால்ய பருவ தாயக வழமை. இன்று இங்கு அது படுக்கை கோப்பி ஆகி படுக்கையில் தாய்தர பருகி உடலை பிள்ளை சூடேற்றி பின் ஒவ்வொன்றாக காலைக்கடன் என்று ஆகிய நிலை. சாமிப் படங்களை ஒரு மூலையில் வைத்து பராமரிக்கக்கூட அறையில் இடம் இல்லாத சங்கடம். மாலை வேளை விளையாடி வீடு மீள கைகால் அலம்பி கடவுளை வணங்கி படிக்க போகும் பிறந்த ஊர் வழமை. வெளியே போய் வந்தால்கூட வீட்டுக்குள் நுழையும்முன் உடல் சுத்தம். சாவீடு, பிள்ளை பிறந்த வீடு, வைத்தியசாலை என்று போய் வந்தால் வீட்டில் உள்ளோர் மூன்று வாளி கிணற்றில் அள்ளித்தர முழுகி கடமைகளை தொடரும் மரபு. துடக்குக்காரர் முற்றத்தில் நின்று பேசிப் போகின்ற; துடக்குக்காரர் பாவித்த குவளையும் தனித்து பேணி கழுவப்படுகின்ற வழமை. சுத்தம் சுகாதாரத்தை சமயதத்துவத்துக்குள் அடக்கி; காரியங்களை மரபு வழி வரவு கடமைகளாக காத்து வந்த கட்டுப்பாடு.

மொழிப்பாவனை மறக்கப்படுகின்ற வழமையிலும் சமயச்சடங்குகள் பேணப்படுகின்ற நிலமையை புலம்பெயர் நாடுகளிலும் பார்க்கிறோம். துயருக்கு கைதருகின்ற; பிரிவுக்கு ஒன்று கூடுகின்ற சா சடங்குகளை சமய வழிமுறையில் காக்கின்ற வழிமுறைகளை,



திருமண பந்தங்களையும் நாள் நட்சத்திரம் பார்த்து சமயச்சடங்குகளுடன் பெரியோரின் ஆசிகளினை பெற்றுச் செய்கின்ற தன்மைகள். புலம் பெயர் நாடுகளில் கலப்பு திருமணங்களில் கூட சடங்குகளை காத்துப் பேணுகின்ற முறைமைகளை இன்றும் எங்கும் தமிழ் சமூகம் கொண்டிருக்கின்றது. தமிழ் மொழி பேச, எழுத தெரியாத இங்குள்ள எம் சந்ததிகள் சமய நெறிகளில், பரதம் போன்ற பண்டை கலை கலாசார நடனங்கள், பல்லின வாத்தியங்களை பயிலுகின்ற ஆர்வத்தினை மெச்சத்தக்க உச்ச நிலையில் உள்ளன.

மொறிசியஸ் தமிழர்கள், தமிழ்நாட்டில் பாண்டிச்சேரி பரம்பரைகள். 1615இல் நல்லதம்பி என்று ஒரு தமிழர் இடம்பெயர, பலர் பாண்டிச்சேரியில் இருந்து புலம்பெயராமல் பலர் இன்று தனித்துவ கலாச்சார அடையாளங்களை பேணி, தமிழ் பெயர்களுடன் தமிழர் என்ற பெயருடன் உலாவி, தமிழ் மகா சபை என்று ஒன்றையும் புலி இலட்சணையோடு நிறுவி, மொறிசியஸ் பாஷைக்கு உரியவராகி வாழ்கின்ற தமிழர்கள். வள்ளி, தெய்வானை, சின்னப்பிள்ளை, அரசன் என்ற அழகு தமிழ்ப்பெயர்கள், நெற்றிக் குங்குமம், கழுத்தில் தாலியுடன் தம்கடவுள் முருகன் என்று இன்றும் சொல்லும் தமிழ் தெரியாத சைவத் தமிழர்கள்.

இங்கு புலம் பெயர்ந்து வாழும் நாம் இதே பாதையில் செல்கின்றோமா? எமது மொழியை பேணும் வல்லமை எமக்கு இல்லையா? எம் சந்ததிகள் தமிழர் என்ற அடையாளத்துடன் வந்த நாட்டில் நிலைப்பார்களா? காலம் பதில் சொல்லும். ●

# வடமாகாண ஆங்கில ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சி



சமீபத்தில் EDFSL கல்லூரி அரங்கத்தில் கருத்துப்பரிமாற்றம் பேராசிரியர் நடராசா ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நடைபெற்றது. இக் கருத்தரங்கில் பல கல்விமான்களும், முன்னாள் யாழ்.பல்கலைக்கழக உபவேந்தர், பேராசிரியர் பொன் பாலசுந்தரம் பிள்ளை பிரதம பேச்சாளராகவும் கலந்து கொண்டனர். இக் கருத்தரங்கினை நடராசா சச்சிதானந்தனும், வி.சிவலிங்கமும் ஒழுங்கு செய்திருந்தனர்.



வடமாகாண கல்வி அபிவிருத்தி அரங்கம் (UK) வடமாகாணத்தில் ஆங்கிலக் கல்வி புகட்டி வரும் ஆங்கில ஆசிரியர்களுக்கு பிரிட்டிஷ் கவுன்சில் மூலம் விசேட பயிற்சி வழங்கி வருகின்றது. 2016ம் ஆண்டு 20 ஆசிரியர்களுக்கும் 2017ம் ஆண்டு 20 ஆசிரியர்களுக்கும் 2018ம் ஆண்டு 40 ஆசிரியர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

வடமாகாண கல்விப் பணிப்பாளர் சத்தியசீலனும், கல்வி அரங்கத்தின் செயலர் மயில்வாகனம் சூரியசேகரமும் பிரிட்டிஷ் கவுன்சில் பயிற்சியாளரும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுடன் காணப்படுகின்றனர்.

## லண்டனில் பரிமாறல்

இலண்டன் உயர்வாசற்குன்று முருகன் ஆலயத்தில் வட மாகாண கல்வி நிலை குறித்து இலங்கை கல்வி அபிவிருத்தி அரங்கத்தினால் (EDFSL) கருத்துப் பரிமாறல் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இக் கல்வி அபிவிருத்தி அரங்கம் கடந்த நான்கு ஆண்டுகளில் 80 இற்கு மேற்பட்ட ஆங்கில ஆசிரியர்களுக்கு சுமார் 50,000 ஸ்ரேர்லிங் பவுண்கள் செலவில் பிரிட்டிஷ் கவுன்சில் மூலமாக விசேட ஆங்கில பயிற்சிகளை அளித்து வருகிறது. இதன் பின்னணியில் மேலும் அதன் தேவைகளை விளக்குமுகமாக முன்னாள் யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பொன். பாலசுந்தரம்பிள்ளை பிரதம பேச்சாளராக அழைக்கப்பட்டிருந்தார். இக் கூட்டத்திற்கு பிரித்தானியாவில் செயற்படும் கல்வி நிறுவனங்கள், ஆலய நிர்வாகிகள், சுய அடிப்படையில் கல்வித் தொண்டுகளை வட பகுதியில் மேற்கொள்வோர், நவீன தொழில்நுட்ப முறையில் கல்விப் போதனை மேற்கொள்ளும் போதனாசிரியர்கள், பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய சுவீடன் நாட்டின் பல்கலைக்கழகத்தில் சூழலியல் போதிக்கும் பேராசிரியர் சிறீஸ்கந்தராஜா தனது பன்னாட்டு அனுபவங்களைப் பகிர்ந்தார். வட பகுதியின் கல்வி நிலை குறித்துப் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை பல புள்ளிவிபரங்களுடன் விபரித்தார். புலம் பெயர் நாடுகளில் வாழும் மக்கள் தாயகத்து, அங்குள்ள மாணவர்களுக்கு விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தொழில்நுட்ப கல்வி போதனை போன்றவற்றில் ஊக்கமளித்து உதவ வேண்டும் என்றார்.

இக் கூட்டத்தில் லீட்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த செல்வி. மிருஷாயினி ராம்ராஜ் மாணவர்களின் கண்ணோட்டத்திலிருந்து கல்வியை ஆரம்பித்தல் தொடர்பாகவும், தனியார் பாடசாலை அதிபரான சின்னத்துரை பத்மமோகன் பின்தங்கிய பாடசாலைகளில் விஞ்ஞானக் கல்வியைப் போதிப்பது எப்படி? என்பது பற்றியும், இலண்டன் இம்பீரியல் கல்லூரியைச் சேர்ந்த செல்வி. அஞ்சலி விக்னகுமார் கல்வி வளர்ச்சியில் மத நிறுவனங்களின் பங்களிப்பின் அவசியம் பற்றியும், டாக்டர் பகீரதன் அமிர்தலிங்கம் கல்வி பின்தங்கிச் செல்வதற்கான சமூகக் காரணிகள் பற்றியும் உரையாற்றினர்.

இவ் உரைகளைத் தொடர்ந்து பிரித்தானியாவில் தமிழ் மூல உயர் பட்டதாரிக் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புகள் பற்றி ஆபிரிக்க, மற்றும் கீழைத்தேய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சார்லின் ஜோர்ஜ், வட பகுதிக் கல்வியை மேற்படுத்துவதற்கான நிதி ஏற்பாடுகளை மேற்கொள்ளும் வழிமுறைகள் குறித்து ஸ்கொட் அமைப்பைச் சார்ந்த ராஜ் ருத்ரன் ஆகியோரும் விபரித்தனர்.

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

## நடராஜர் ஆலய கும்பாபிஷேகம்

சைவ முன்னேற்றச் சங்கம் (UK) ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேகம் வரும் 10.02.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 7.40 மணி முதல் 8.34 மணிக்குள் அமைந்துள்ள சுபமுகூர்த்த வேளையில் (2, SALISBURY ROAD, MANOR PARK, LONDON E12 6AB) நடைபெறவுள்ளது.

எண்ணெய்க்காப்பும், உற்சவர் விக்கிரகங்களுக்கு பால் அபிஷேகமும் செய்யும் காலம்: 08.02.2019 வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை; 09.02.2019 சனிக்கிழமை காலை 9 மணி முதல் இரவு 7 மணி வரை.

மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாள்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும். இப்புண்ணிய நாள்களில் தினமும் திருமுறைப் பாராயணம், கூட்டு வழிபாடு, கிரியை விளக்க உரை, நாதஸ்வர இசைக் கச்சேரி என்பன இடம்பெறும்.

தாயகத்தின் நயினை நாகபூஷணி அம்மன் ஆலய பிரதம குரு கயிலை வாமதேவன் குருக்கள், லண்டன் முருகன் கோயில் பிரதம குரு கயிலை நாகநாத சிவம் குருக்கள், நடராஜர் ஆலய பிரதம குரு ரமேஷ் குருக்கள் மற்றும் லண்டன் ஆலய சிவாசாரியார்கள் பங்குகொண்டு மகா கும்பாபிஷேகத்தை நடாத்தி வைப்பார்கள். ஆலய சிற்ப நிர்மாணம்; சிற்பக்கலை மாமணி சரவணமுத்து ஜெயகாந்தன்.



அன்பர்கள் யாவரும் கலந்து சிறப்பித்து வணங்கி மகிழ்ந்து பேரானந்தப் பெரு வாழ்வு பெற வேண்டுமென அன்புடன் அழைக்கிறது சைவ முன்னேற்றசங்கம் (UK).

**விபரங்களுக்கு: 02085144732**




## இளவாலை அமுது நூல் வெளியீடு பிற்போடப்பட்டது

ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் 23.02.2019 சனிக்கிழமை பிற்பகல் 2.30- 9.00 மணி வரை நடைபெறவிருந்த சிவ தணிகாசலம் எழுதிய 'செவாலியர் இளவாலை அமுது' நூல் வெளியீட்டு விழா பிற்போடப்பட்டுள்ளது.


## 'தமிழ் இருக்கை' பொங்கல் விழா



இலண்டன் பல்கலைக்கழகத்தில் SOAS 'தமிழ் இருக்கை' ஏற்பாட்டாளர்களும், தமிழ் மன்ற அங்கத்தவர்களும் கடந்த 16ம் திகதி பொங்கல் விழாவை ஒழுங்கு செய்திருந்தனர். அச்சமயம் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து உரையாடல்களும் நடைபெற்றன. செயின் ஜோர்ஜ் இந்நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தார்.



வவுனியூர் இரா.உதயணன்



# இவர்கள்தான் பைத்தியங்கள்!

மாலை நான்கு மணியைத் தாண்டியிருந்தது. அந்த ஆஸ்பத்திரியில் தனி அறையொன்றில் சுரேனும் மனைவி ஆரண்யாவும் அமர்ந்திருந்தார்கள்.

இரண்டாம் மாடியில் நீளமாக அகன்ற ஒரு வார்ட்டில்தான் அந்தத் தனியறை இருந்தது.

இருவரும் இருபுறமும் அமர்ந்திருக்க, நடுவில் இருந்த கட்டிலில் ஆர்த்தி படுத்திருந்தாள். மூக்கிலும் கைகளிலும் டியூப்புக்கள் செருகப்பட்டு இரண்டு மெசின்களுடன் இணைக்கப்பட்டிருந்தது.

ஆரண்யா அழுது களைத்துவிட்ட நிலையில், ஆர்த்தியின் தலையை வருடிய வண்ணம் சுரேனையே பார்த்தவண்ணமிருந்தாள். கண்கள் அழுதழுது சிவந்திருந்தன.

சுரேனோ சில மணி நேரமாக ஆரண்யாவை நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை. ஏதும் கோபத்தில் பேசிவிட்டால் அது விவாதத்தில் போய் முடிய வார்ட்டே அமர்க்களமாகிவிடும் என்று அமைதியாக இருந்தான். ஆனால், மனதில் ஆத்திரமும் கோபமும் பொங்கிக்கொண்டு வந்தது.

நேர்ஸ் ஒருத்தி கதவைத் திறந்து உள்ளே வந்து, கையில் குத்தி இரத்தத்தை எடுத்துச் சென்றாள்.

‘இன்று மாத்திரம் ஆறாவது முறையாக அவள் கையில் இருந்து எடுத்துச் செல்கிறார்களே, பிள்ளைக்கு வலிக்காதா?’ என்று நினைக்க ஆரண்யாவுக்கு கண்களிலிருந்து பொலபொலவென கண்ணீர் வழிந்து காதோரத்தை நனைத்தது.

சுரேன் அப்படியே அமர்ந்திருந்தான். கண்கள் வீங்கியிருந்தன. மனதும் கனத்திருந்தது. வாழ்க்கையே வெறுத்துவிட்டது போல அவன் உணர்ந்தான்.

மன்னிக்கும் பக்குவம் உள்ளவர்கள் இடத்தில்தான் வாய்த்தகராறு வராது. ஆனால், சுரேனால் மனைவி ஆரண்யாவை மன்னிக்க முடியவில்லை. அதற்கு நிறைய காரணங்கள் இருந்தன.

ஒரு சிறிய சூட்கேசுடன் பிளேன் ஏறி, லண்டனுக்கு வந்து, அகதி அந்தஸ்துக் கேட்டு, ஏற்கனவே அகதியாக பெற்றோருடன் வந்திருந்த ஆரண்யாவை திருமணம் முடித்து, இருபத்தைந்து வருடங்கள் ஆகிவிட்டன.

நீண்டகால இடைவெளியின் பின்பு, அதாவது ஒன்பது வருடங்களின் பின்புதான் ஆர்த்தி பிறந்தாள்.

ஆர்த்தி பிறந்த பின்பு ஆரண்யாவும் வேலைக்குப் போவதை நிறுத்திக் கொண்டாள். ஆர்த்தியை முழுமையாகக் கவனிக்க வேண்டும் என்பதே அவளது நோக்கம். நன்றாகப் படிப்பித்து நல்ல நிலைக்குக் கொண்டு வந்து ஒரு நல்லவன் கையில் கொடுக்க வேண்டும் என்பதே அவளது கனவும் ஆசையும். சுரேனும் அவளது ஆசைக்கு உடன்பட்டவனாய் அவள் விருப்பப்படியே விட்டுவிட்டான். எல்லாப் பெற்றோருக்கும் இருக்கும் ஆசைகள்தானே அவர்களுக்கும். பிள்ளையில்லாது இருந்த அந்த ஒன்பது வருடங்களும் எத்தனை கோயில் கோயிலாக இருவரும் ஏறி இறங்கி இருப்பார்கள்.

எத்தனை உறவுகள் புறம் கதைப்பது ஆரண்யாவின் காதுகளை வந்து எட்டியிருந்தது. அப்போதெல்லாம் சுரேனின் மடியில் படுத்திருந்து அழுதது திரும்பத் திரும்ப மனக்கண் முன் வந்து போனது.

ஆர்த்தியின் தலையைத் தடவுவதை நிறுத்திவிட்டு விரல்களை தடவிக் கொடுத்தாள்.

‘எல்லாம் என்னாலதான். சுரேன் அடிக்கடி சொல்லுவதைக் கேட்டிருந்தால் இவளுக்கு இப்படியொரு நிலை வந்திராது’- மனச்சாட்சி அவளை உறுத்தியது.

நிமிர்ந்து சுரேனைப் பார்த்தாள். அவனோ எதிரேயிருந்த சுவரை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆரண்யாவுக்கு சுரேன் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் அமர்ந்திருப்பது மேலும் சோகத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியது.

“சுரேன்...” அவனைப் பார்த்துக் கூப்பிட்டாள். அவனோ அவளைப் பார்க்கவில்லை. பார்த்தால் உரக்கக் கத்திவிடுவான் என்ற பயத்தில் அப்படியே அமர்ந்திருந்தான். மீண்டும் விக்கி விக்கி அழுதவண்ணம் “சுரேன்” என்று கூப்பிட்டாள். அவனோ பார்க்கவில்லை.

“நான் என்ன சுரேன் பிழைவிட்டனான். அவள் நல்லா வரவேணும் என்றுதானே...கஸ்ரப்பட்டனான்.”

சுரேனுக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

“நீ இவளின்ர இளம் பராயத்தில எவ்வளவு தாக்கத்தை உண்டு பண்ணிவிட்டாய் எண்டு உனக்குத் தெரியுமே?” சத்தம் போட்டுக் கேட்டான்.

ஆரண்யா பதில் ஒன்றும் சொல்லாமல் விக்கி விக்கி அழுதாள்.

“அவளின்ர இந்த நிலைக்கு நீதான் காரணம். அதாவது உனக்கு விளங்குதா?” கலங்கிய கண்களைத் துடைத்துக்கொண்டு ஆரண்யாவைப் பார்த்தான் சுரேன்.

சுரேனின் கண்களில் இருந்து கண்ணீர் வழிவதைக் கண்ட ஆரண்யா,

“என்னை மன்னிச்சுக்கொள்ளுங்கோ சுரேன்” என்றாள்.

உதடுகளைக் கடித்துக்கொண்ட சுரேன், “பிள்ளையைப் போட்டுக் கஸ்ட்டப்படுத்தாதை என்று எத்தனை தரம் உனக்கு சொல்லியிருப்பன். இப்ப என்ன சொல்லப்போறாய்?” ஆரண்யா ஒன்றும் சொல்லாமல் சுரேனையே பார்த்தாள். “எங்கட நாட்டில ஸ்கொலசிப் சோதனை என்று மாத்திரம்தான் கூடுதலாக தாய் தகப்பன்மார் பிள்ளையளைக் கஸ்ரப்படுத்துதுகள். இங்க ஒரு சூட்கேசோட அகதியாய் வந்த நாங்கள் என்னவெல்லாம் செய்யிறம்.

பொய், புரட்டு, பொறாமை, களவு இப்படி நிறையவே.

நீ என்ன செய்யிறாய் என்று உனக்கு பல தடவை சொல்லியிருக்கிறேன். நாங்கள் எப்பவும் எங்களுக்காக வாழப்பழக வேணும். மற்றவர்களுக்காக வாழவெளிக்கிட்டால் இப்படித்தான் நடக்கும்.

உனக்கு உன்ர சொந்த மூளையைப் பாவிக்கத் தெரியாமல் மற்ற ஒருசிலர் செய்யும் போலித்தனங்களைப் போல நீயும் செய்ய வெளிக்கிட்டதின்ர விளைவுதான் இது. போலிக்கௌரவங்கள் என்றால் உனக்கு என்ன எண்டு தெரியுமே? அதைத்தான் நீயும் இதுவரை செய்துகொண்டு இருந்தனி.

நீ எவ்வளவு நல்லதை அல்லது கெட்டதைச் செய்தாலும் உன்னையும் என்னையும் பற்றிக் கதைக்க இதுக்கென்று வெளியில கனசனம் காத்துக்கொண்டிருக்கு. அதுகளின்ர வாயை உன்னால அடைக்க முடியாது. இப்ப அதுகளின்ர வாயில அவலை போட்டுவிட்டிருக்கிறாய்.

எப்பவும் உன்ர பிள்ள என்ன வழியில படிக்க விரும்புதோ அந்த வழியில படிக்க விடவேணும். மற்றப் பிள்ளைகளோட ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது. இதுக்குத்தான் படி படி என்று வற்புறுத்தக்கூடாது. எந்தப் பிள்ளையும் ஏதோ ஒரு துறையில சிறந்து விளங்கும். அந்தத் துறையைக் கண்டுபிடித்து அதில முன்னுக்கு வருகிறதுக்கு ஊக்குவிக்க வேணுமே தவிர உன்ன மாதிரி பாடசாலை முடிந்து வந்ததும் தொடர்ந்து படிப்போட சம்பந்தப்பட்ட ஏதாவது ஒரு வேலையை மாத்திரம் கொடுத்து வற்புறுத்தினால் இப்படித்தான் நடக்கும்.

ஆர்த்தியை ஒரு நாளாவது வெளியில போய் மற்ற பிள்ளைகளோட விளையாட விட்டிருக்கிறாயே. அவளுக்கென்று சினேகிதிகள் யார் இருக்கினம். கிணற்றுத் தவளை போல வெளிஉலகு காட்டாமல் படிப்பு படிப்பு என்று வளர்த்ததால் நடந்ததைப் பார்த்தியே.

என்ர சொல்லுக்கு எப்ப மதிப்புத் தந்திருக்கிறாய். உனக்கு எல்லாம் தெரியும் என்று நான் சொல்லுற ஒன்றையும் காதில கூட வாங்காமல் உன்ரபடி நடந்ததின்ர விளைவைப் பார்த்தியே”

கதவைத் தட்டிவிட்டு இரண்டு டாக்டர்கள் உள்ளே வந்தார்கள். இருவரும் சுரேனையும் ஆரண்யாவையும் மாறி மாறிப் பார்த்தார்கள். “இவருக்கு மனச்சோர்வு (Depression) ஏற்பட்டிருக்கிறது. இன்னும் இரண்டு கிழமைகள் இங்கேயே இருக்க வேண்டும். இதை ஒரு நோய் என்று சொல்ல முடியாது. ஆனால், தனது உயிரை எடுத்துக்கொள்ள இவர் முயன்றதிற்கு காரணம் மனச்சோர்வுதான். கவுன்சிலிங் முடிந்த பின்புதான் இவரை உங்களோட வீட்டிற்கு அனுப்ப முடியும்.”

சொல்லிவிட்டு இரு டாக்டர்களும் அறையைவிட்டு வெளியே போனார்கள். “ஐயோ என்ர பிள்ளையை பைத்தியம் என்று சொல்லப் போறாங்களே” ஆரண்யா கத்தி அழுதாள். “நீதாண்டி பைத்தியம். உனக்குத்தான் பைத்தியம் பிடிச்சிருக்கு. மனச்சோர்வுக்கும் பைத்தியத்திற்கும் வித்தியாசம் தெரியாமல் இன்னும் உன்ர பிள்ளையை விட்டுவிட்டு மற்றவர்கள் என்ன சொல்வார்கள் என்று நினைக்கிறியே, நீ தாண்டி பைத்தியக்காரி” என்று மீண்டும் கத்தினான் சுரேன். ●

## ரஜினி ஜோடியாக ‘பேட்ட’வில் நடித்த சிம்ரன் அனுபவம்



திருமணம், குழந்தைகள் என்றான பிறகு சினிமாவில் இருந்து சில காலம் தள்ளி இருந்த சிம்ரன் மீண்டும் நடிக்க வந்தார். முதல் இன்னிங்ஸை போன்று அவருக்கு இரண்டாவது இன்னிங்ஸ் அமையவில்லை. இந்நிலையில் தான் அவருக்கு ரஜினிகாந்த் ஜோடியாக ‘பேட்ட’ படத்தில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. இது குறித்து அவர் பிரபல ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டியில், ‘பேட்ட’ படம் என்னை மீண்டும் ரசிகர்கள் முன் நிமிர வைத்துள்ளது. இதற்காக நான் கார்த்திக் சுப்புராஜ், ரஜினி சார் மற்றும் தயாரிப்பாளர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த சில ஆண்டுகளாக என் கெரியர் எப்படியோ இருந்தது. பல பொறுப்புகள் இருந்ததால் எந்த வகை படங்களை தேர்வு செய்வது என்று தெரியவில்லை. ரஜினி ‘பேட்ட’ படத்தில் நான் மிகவும் அழகாக இருப்பதாக கூறுகிறார்கள். “டயட், யோகா ஆகியவற்றால் நான் இப்படி இருக்கிறேன். ரஜினி சாருடன் வேலை செய்ததால் அழகாக தெரிகிறேன்” என்று நினைக்கிறேன். கார்த்திக் சுப்புராஜுக்கு, நடிகரிடம் இருந்து எப்படி வேலை வாங்குவது என்பது அவருக்கு நன்கு தெரிந்துள்ளது. நான் பல காலமாக ரஜினி ரசிகை. பல முறை நான் அவரை போன்று நடக்க, கண்ணாடி அணிய முயற்சி செய்துள்ளேன். முதல் நாள் ஷூட்டிங்கில் பதட்டமாக இருந்தது. ரஜினி சாரை பார்த்ததும் வசனத்தை மறந்து விடுவேன் என்று நினைத்தேன். டென்ஷன் ஆக வேண்டாம், நாம் ரசிகர்களுக்காக படம் பண்ணுகிறோம் என்று கூறி ரிலாக்ஸ் செய்ய வைத்தார் ரஜினி சார் என்று சிம்ரன் தெரிவித்துள்ளார்.

## படத்திலாவது ரஜினி முதல்வராக வரட்டும்!

ஏ.ஆர்.முருகதாஸ் படத்தில் ரஜினி முதல்வராவது போன்று கதை அமைக்கப்பட்டுள்ளதாம். கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடித்துள்ள ‘பேட்ட’ படம் ரிலீஸானது. இந்த படத்தை அடுத்து அவர் ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் நடிக்க உள்ளார். படத்தின் கதை குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் முருகதாஸ் படத்தில் அரசியல் பேசப் போகிறாராம் ரஜினி. ஒரு சாதாரண ஆள் படிப்படியாக முன்னேறி மாநில முதல்வர் ஆவது தான் கதை என்று கூறப்படுகிறது. அந்த முதல்வர் வேறு யாரும் அல்ல, நம்ம ரஜினியேதான்!



எந்த கட்சி நம்ம கட்சி என்று ரஜினியிடம் கேட்டால், கட்சி எல்லாம் இப்போ நமக்கெதற்கு, காலத்தின் கையில் அது இருக்கு என்று கூறி வந்தார். ‘கட்சி ஆரம்பிக்கிறேன்’ என்று அறிவித்து ஓராண்டு ஆகியுள்ள நிலையில், முதலில் படத்தில் அரசியல் பேசி முதல்வர் நாற்காலியை பிடிக்கப் போகிறாராம்.

ரஜினி முதல்வராகும் படத்திற்கு ‘நாற்காலி’ என்று பெயர் வைக்கலாமா என யோசனையில் உள்ளாராம் முருகதாஸ். படத்திற்கு வேறு பெயர்களையும் தேடிக் கொண்டிருக்கிறாராம். படத்தில் ஒத்திகை பார்த்துவிட்டு, நிஜத்தில் முழுவீச்சில் அரசியல் செய்வார் ரஜினி என்று எதிர்பார்க்கப்படுகிறது. ரஜினிக்கு தேர்தலில் போட்டியிட விருப்பம் இல்லை. அதனால் கட்சி துவங்கும் பணியை ஒத்தி வைத்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளது. ஏற்கனவே அறிவிப்பு வெளியிட்டு ஓராண்டாகிவிட்டது. சினிமாவிலாவது முதல்வராவதை அவரது ரசிகர்கள் பார்த்து மகிழட்டும்!

## விக்ரம் மகன் துருவ் நடிக்கும் கவர்ச்சி படம்

தமிழ் சினிமாவில் அனைவராலும் விரும்பப்படும் நடிகர் விக்ரம். இவர் மகன் துருவ் அறிமுகமாகும் படம் வர்மா. சியான் விக்ரமின் குருநாதரான பாலா இயக்கும் இப்படம், அர்ஜுன் ரெட்டி படத்தின் ரீமேக்காகும். வன்முறை, கவர்ச்சி என அனைத்துமே அதிகமாக இந்தப்படத்தில் உள்ளது.





## 40 வயதிலும் கவர்ச்சி குறையாத பூமிகா!

தமிழ் சினிமாவில் ரோஜா கூட்டம், சில்லுன்னு ஒரு காதல் ஆகிய படங்களில் நடித்தவர் பூமிகா. கடந்த 2007இல் நீண்ட நாள் காதலன் யோகா மாஸ்டரான பரத் என்பவரை கைப்பிடித்தார். ஹிந்தி படங்கள் இரண்டில் நடித்தார். தெலுங்கில் ஒரு படத்தில் நடித்தார்.

இப்போது 40 வயதிலும் மிகக் கவர்ச்சியாகத் தோற்றமளிக்கும் இவர், சினிமாவில் நடிக்கத் தயாராக இருக்கிறார். விரைவில் ஒரு தமிழ்ப்படத்தில் நடிக்கப்போவதாக அறிவித்துள்ளார்.

## வாயுள்ள பிள்ளை பிழைத்துக் கொள்ளும்!




தொகுப்பாளினியான டிடிக்கு வாழ்த்துக்கள் வந்து குவிகின்றது. விஜய் ரிவி நிகழ்ச்சி தொகுப்பாளினி ‘டிடி’ என்றாலே அவர் படபடவென பேசுவதுதான் நினைவுக்கு வரும். வாய் உள்ள பிள்ளை பிழைத்துக் கொள்ளும் என்று கூறுவது அவர் விஷயத்தில் மிகச் சரி. திரையுலக பிரபலங்களை போன்றே அவருக்கும் ஏகப்பட்ட ரசிகர்கள். ‘டிடி’ விஜய் தொலைக்காட்சியில் சேர்ந்து 20 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார். டிடி என்றால் திவ்யதர்ஷினி.

## போதையில் கார் ஓட்டி கைதான இயக்குனர் வாசுவின் மகன் நடிகர் சக்தி!

இயக்குனர் பி.வாசுவின் மகனான நடிகர் சக்தி, மதுபோதையில் கார் ஓட்டி மற்றொரு கார் மீது மோதிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் சினிமாவில் முன்னணி ஹீரோக்களை வைத்து படம் இயக்கியவர் பி.வாசு. இவரது மகன் சக்தி. தொட்டால் பூ மலரும், நினைத்தாலே இனிக்கும் உள்ளிட்ட படங்களில் ஹீரோவாக நடித்தார். பிக் பாஸ் முதல் சீசனில் கலந்துகொண்ட இவர், விமர்சனத்துக்கு ஆளானார். ஓவியாவுடன் சண்டை, காயத்ரியுடன் சேர்ந்து அவர் பல பிரச்சினைகளில் ஈடுபட்டது என பிக் பாஸ் நிகழ்ச்சியால் பல சர்ச்சைகளில் சிக்கினார் அவர்.

சென்னை கோபாலபுரத்தில் வசித்து வரும் சக்தி மதியம் சூளைமேடு இளங்கோவடிகள் தெருவில் தனது நண்பர் ஒருவரைப் பார்க்க தனது சொகுசு காரில் சென்றிருந்தார். அப்போது அவருடன் நண்பர் ஒருவரும் சென்றுள்ளார். குறுகிய சாலை ஒன்றில் சென்ற போது, சக்தியின் கார் மற்றொரு கார் மீது எதிர்பாராதவிதமாக மோதியது. விபத்தை ஏற்படுத்திய சக்தி, தனது காரை நிறுத்தாமல் அங்கிருந்து தப்பிச்செல்ல முயற்சித்துள்ளார். இதனால் அங்கிருந்த மக்கள் அவரது காரை சுற்றிவளைத்து பிடித்தனர். விபத்து தொடர்பாக சூளைமேடு போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். அவர்கள், குடிபோதையில் தள்ளாடிய சக்தியை கைது செய்தனர்.



காவல் நிலையம் அழைத்துச் சென்ற போலீசார், அவரிடமிருந்த கார், லைசென்ஸ், காரின் சாவி உள்ளிட்டவற்றை பறிமுதல் செய்தனர். வழக்குப்பதிவு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஜாமீனில் சக்தி விடுவிக்கப்பட்டார். நீதிமன்றத்தில் ஆஜராகி அபராதத்தை கட்டி காரை பொற்றுக்கொள்ளலாம் என போலீசார் சக்தியிடம் கூறியுள்ளனர். மது போதையில் காரை ஓட்டி விபத்து ஏற்படுத்தியதால் அவரது ஓட்டுநர் உரிமம் ஆறு மாதம் ரத்து செய்யப்படும் எனத் தெரிகிறது.

பிக்பாஸ் வீட்டில் சக்தியின் நெருங்கிய தோழியாக வலம் வந்த நடன இயக்குனர் காயத்திரியும் இதேபோன்று குடித்துவிட்டு காரை ஓட்டியதாக சர்ச்சையில் சிக்கினார். நடிகர் சக்தியும் அந்தப் பட்டியலில் சேர்ந்திருக்கிறார்.

# நடிகை சாய் பல்லவிக்கு பெரிய மனசு!



தான் நடித்த படத்திற்கான சம்பள பாக்கியை வாங்க மறுத்துள்ளார் சாய் பல்லவி. சாய் பல்லவி நடிப்பில் கடந்த டிசம்பர் மாதம் இரண்டு படங்கள் ரிலீஸானது. ஒன்று 'மாரி-2', மற்றொன்று ஷர்வானந்துடன் சேர்ந்து அவர் நடித்த தெலுங்கு படம் 'படி படி லேச்சு மனசு'. எதிர்பார்த்தபடி இது ஓடவில்லை. இதனால் தயாரிப்பாளருக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. படத்தில் நடித்த சாய் பல்லவிக்கு முன்பணம் கொடுத்துவிட்டு மீதித்தொகையை பின்னர் தருகிறோம் என்று கூறியிருக்கிறார்கள். இந்நிலையில் படம் ரிலீஸான பிறகு சம்பள பாக்கி ரூ.40 லட்சத்தை தயாரிப்பாளர் அவரிடம் கொடுக்க, அவரோ வாங்க மறுத்துவிட்டாராம். படம் ரூ.22 கோடிக்கு வியாபாரம் செய்யப்பட்ட நிலையில் வெறும் 8 கோடி மட்டும் தான் வசூல் ஆகியது. சம்பளத்தை சாய் பல்லவி விட்டுக் கொடுத்தது குறித்து அறிந்த தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள் அவரை பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த பொண்ணுக்கு பெரிய மனசு என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். தேவையில்லாத விஷயங்களில் அடிபட்டு அவர் திமிர்பிடித்தவர் என்ற பேச்சு கிளம்பியது. இந்நிலையில் அவர் தற்போது செய்துள்ள காரியத்தால் அவரின் நல்ல குணம் திரையுலகினருக்கு தெரிய வந்துள்ளது.

## ஏன் இந்த படு கவர்ச்சி?

பிரபல மாத இதழில் காலண்டருக்காக கடல்கன்னி போன்ற தோற்றத்தில் மேலாடை இல்லாமல் கவர்ச்சியாக போஸ் கொடுத்துள்ளார் ஆண்ட்ரியா. தமிழில் பச்சைக்கிளி முத்துச்சரம் படம் மூலம் அறிமுகமானவர் நடிகை ஆண்ட்ரியா. தொடர்ந்து தனது கதாபாத்திரத்திற்கு முக்கியத்துவம் உள்ள படங்களாக மட்டுமே அவர் தேர்வு செய்து நடித்து வருகிறார். இதனால் திறமையான நடிகை என பேர் எடுத்திருக்கிறார். 'விஸ்வாசம்-2', 'வடசென்னை' என கடந்தாண்டு இவரது நடிப்பில் இரண்டு படங்கள் வெளியாகின. இரண்டிலுமே ஆண்ட்ரியாவின் நடிப்பு பெரிதும் பேசப்பட்டது. இந்நிலையில் பிரபல மாத இதழின் காலண்டருக்காக படு கவர்ச்சியாக போஸ் கொடுத்துள்ளார் ஆண்ட்ரியா. மேலாடை இல்லாமல் கடல் கன்னி போல் அவர் நீருக்கடியில் இருப்பது போல் அந்தப் புகைப்படம் உள்ளது.



## விஜய் நடிக்கும் அடுத்த படத்துக்கும் அதே பிரச்சினை!

அட்லி இயக்கத்தில் விஜய் நடிக்கவுள்ள 63-வது படத்தின் கதை தன்னுடையது என உதவி இயக்குநர் ஒருவர் கூறியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தெறி, மெர்சல் ஆகிய படங்களை அடுத்து அட்லி இயக்கத்தில் விஜய் புதிய படமொன்றில் நடிக்க இருக்கிறார். இன்னும் பெயரிடப்படாத இப்படத்தின் பூஜை நடைபெறுகிறது. படப்பிடிப்பு துவங்குகிறது. மெர்சல், சர்கார் வரிசையில் இந்த படத்தையும் தீபாவளிக்கு ரிலீஸ் செய்ய திட்டமிட்டுள்ளனர். இப்படம் பெண்கள் கால்பந்தாட்ட அணியை பற்றிய கதை. பயிற்சியாளராக நடிக்கும் விஜய், அதற்கென தனது உடல் அமைப்பை மாற்றத் தேவையான பயிற்சிகள் செய்து கொண்டிருக்கிறார். இது ஒருபுறம் இருக்க, இப்படம் பற்றிய எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் எதிர்ப்பும் இப்போதே கிளம்பி விட்டது. பெண்கள் விளையாட்டையும், அதன் பின்னணியில் உள்ள அரசியலையும் வைத்து உருவாகும் இப்படத்தின் கதை தன்னுடையது என உதவி இயக்குநர் ஒருவர் புகார் தெரிவித்துள்ளார்.



இப்படக்கதை தன்னுடையது தான் என்பதற்கு தன்னிடம் ஆதாரம் இருப்பதாகத் தெரிவித்துள்ள செல்வா, விஜயின் தீவிர ரசிகனான தான் இந்தக் கதையை விஜயை வைத்தே இயக்குவேன் எனக் கூறுகிறார். அதோடு, இந்தப் பிரச்சினையை சட்டரீதியாக சந்திக்க இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். ஏற்கனவே, முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடித்த சர்கார் படம் இதே போன்று பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்தது நினைவுக் கூரத்தக்கது.

## கமலுக்குப் பேரனாக 'இந்தியன்-2'ல் சிம்பு!

இந்தியன்-2 படத்தில் கமலுக்குப் பேரனாக சிம்பு நடிக்கிறார். 2.0 பட வெற்றியைத் தொடர்ந்து கமலை வைத்து இந்தியன் படத்தின் இரண்டாம் பாகத்தை எடுக்கும் வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார் இயக்குநர் ஷங்கர். முதல் படத்தில் லஞ்சத்திற்கு எதிராக குரல் கொடுத்த இந்தியன் தாத்தா, இப்படத்தில் சமகால அரசியலுக்கு எதிராகப் போராடுவாராம். கட்சி ஆரம்பித்து அரசியல் பிரவேசம் செய்துள்ள கமலுக்கு உதவும் வகையில் இப்படம் நிச்சயம் அரசியல் பேசும். இப்படத்தில் கமலின் ஜோடியாக காஜல் அகர்வால் நடிக்க இருக்கிறார். முக்கிய கதாபாத்திரத்தில் சிம்பு நடிக்கிறார். இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இப்படத்தை லைகா தயாரிக்கிறது. கமல் நடிப்பில் ஷங்கர் இயக்கத்தில் 1996-ம் ஆண்டு வெளியான படம் இந்தியன். இப்படத்தில் அப்பா, மகன் என இரண்டு வேடங்களில் கமல் நடித்திருந்தார். தற்போது சுமார் 22 ஆண்டுகளுக்குப் பின்னர் எடுக்கப்படும் இப்படத்தில் பேரன் கதாபாத்திரமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. படத்தில் தாத்தா கமலுக்கு சிம்பு பேரனாக நடிக்கிறார். ஆனால், இத்தகவலை படக்குழு இன்னும் உறுதி செய்யவில்லை. சமீபத்தில் காஜல் அகர்வாலுக்கு வெளிநாட்டில் மேக்கப் டெஸ்ட் நடந்ததாக அவரே கூறியிருந்தார். இதன்மூலம் முதல் பாகத்தில் சுகன்யா நடித்தது போன்று, தாத்தா கமலுக்கு ஜோடியாக காஜல் நடிக்க இருக்கிறார். அப்படியானால் சிம்புவுக்கு பாட்டியாக அவர் நடிக்கிறாரா என்ற கேள்வி ரசிகர்களிடையே எழுந்துள்ளது. சிம்புவுக்கு பாட்டியாக நடிக்க எப்படி சம்மதித்தார் காஜல்? இப்படத்தில் தென்கொரியாவின் பிரபல நடிகையும் பாடகியுமான சுஜி பே என்பவர் சிம்புவுக்கு ஜோடியாக நடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



## நடிகை எமி ஜாக்சனுக்கு கோடீஸ்வரருடன் திருமணம்

எமி ஜாக்சனை திருமணம் செய்யப் போகும் ஜோர்ஜின் சொத்து மதிப்பு ரூ.3,600 கோடி ஆகும். நடிகை எமி ஜாக்சனுக்கும், இங்கிலாந்தை சேர்ந்த தொழில் அதிபர் ஜோர்ஜ் பனியியோட்டுவுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது. இருவரும் சேர்ந்து எடுக்கும் புகைப்படங்களை எமி சமூக வளைதலங்களில் வெளியிட்டு வருகிறார். எமியை திருமணம் செய்யப் போகும் ஜோர்ஜ் யார், அவரின் சொத்து மதிப்பு என்ன என்பது தெரியவந்துள்ளது. 2018ம் ஆண்டின் பெஸ்ட் இயக்குநர் கோடீஸ்வரர், இங்கிலாந்தின் மிகப்பெரும் பணக்காரர்களில் ஒருவரான ஆன்ட்ரியஸ் பனயியோட்டுவின் மகன் ஜோர்ஜ்.



ஜோர்ஜ், எபிலிட்டி குரூப்பின் தலைவராக உள்ளார். அவரின் குடும்பத்திற்கு சொந்தமாக பல சொகுசு ஹோட்டல்கள் உள்ளன. அதில் டன்பிளேன் ஹைட்ரோ, ஹில்டன் லிவர்பூல், ஹில்டன் கேம்பிரிட்ஜ், டபுள்ட்ரீ அபெர்டீன் ஆகியவை அடக்கம்.

## வரலட்சுமி பழைய கதை விஷாலுக்கு புதுசு அனுஷா!

நடிகர் விஷாலுக்கும், தெலுங்கு நடிகை அனிஷா ரெட்டிக்கும் திருமணம் நடைபெற உள்ளது. அனிஷாவை தான் திருமணம் செய்யப் போகிறேன் என்று விஷாலும் தெரிவித்துள்ளார். இந்நிலையில் அனிதா தான் விஷாலுடன் இருக்கும் புகைப்படத்தை இன்ஸ்டாகிராமில் வெளியிட்டார். பணத்தை வைத்து யாரை வேண்டுமானாலும் வாங்கலாம். உங்களை நினைத்தால் வெட்கமாக உள்ளது என்று ஒருவர் அனிஷாவை விளாசினார். தனனை விளாசிய நபரை பார்த்து கோபப்படாமல் பொறுமையாக பதில் அளித்துள்ளார் அனிஷா. பணத்திற்காக விஷால் தன்னை காதலிக்கவில்லை என்கிறார் அனிஷா. இன்ஸ்டாகிராமில் அனிஷாவுக்கு வாழ்த்துக்கள் வந்து குவிகின்றது.



விஷாலும் உறுதி செய்துள்ளார். இது தொடர்பாக தனது டிவிட்டர் பக்கத்தில் அவர் புகைப்படத்துடன் கூடிய பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர், 'ஆமாம், மகிழ்ச்சி. பெருமகிழ்ச்சி. மகிழ்ச்சியோ மகிழ்ச்சி. அவள் பெயர் அனிஷா. ஆமாம், அவள் சம்மதம் தெரிவித்து விட்டார். இப்போது அது உறுதியாகிவிட்டது. என் வாழ்க்கையில் மிகப்பெரிய அடுத்த கட்டம். விரைவில் தேதியை அறிவிக்கிறேன்' என விஷால் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

## மனம் திறந்து பேசுகிறார் ஹோமியோபதி வைத்திய நிபுணர் ஆர்.தியாகராஜன்



# Hormones

‘அவனன்றி அணுவும் அசையாது - அண்டத்தில் உள்ளது பிண்டத்தில்’ என்பது திருமூலரின் திருமந்திரம். உலகம் இயங்க இறைவனும் இயற்கையும்தான் காரணம். உலக இயக்கங்கள், அனைத்துமே பரம்பொருளின் அசைவுக்குக் கட்டுப்பட்டது. பரம்பொருள் என்பது உருவம் அற்றது, அருவம் ஆனது. அண்டத்தைப் போல் நம் உடல் என்னும் பிண்டத்திலும், உடல் மன இயக்கங்களை உருவமற்று இருந்து இயக்குவது அற்புதமான ஹோமோன்களாகும் (HORMONES). ஹோமோன் என்ற வார்த்தைக்கு To Excite (உணர்வூட்டல்) என்பது அர்த்தம். ஹோமோன்கள் நம் உடலின் ரசாயனத் தூதுவர்கள் (Hormones are the Body's Chemical Messengers).



மனிதன் உணர்வுபூர்வமானவனாக இருப்பதற்கு ஹோமோன்களே அடிப்படைக் காரணியாகும். உணர்ச்சிகள் மட்டுமின்றி இளமை முதல் முதுமைவரை, பிறப்பு முதல் இறப்பு வரை நடைபெறும் மன உடல் வளர்ச்சிகள் (Mind and Body Development), வளர்சிதை மாற்றங்கள் (Regeneration & Degenaration) மற்றும் எண்ணற்ற நோய்கள் எல்லாமே ஹோமோன்களின் திருவிளையாடல்களே!

நம் உடலில் தலை தொடக்கம் இடுப்புப் பகுதிவரை பல்வேறுவிதமான ஹோமோன் சுரப்பிகள் (Hormone Glands) பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இந்த சுரப்பிகள் அனைத்துமே ஒன்றோடொன்று இணைந்து ஒரு சிறப்பான - வெற்றியீட்டக்கூடிய உதைபந்தாட்டக் குழு போல் - உடலும் மனமும் ஆரோக்கியமாகச் செயல்பட பின்புலமாய் விளங்குகின்றன. உதைபந்தாட்டக் குழுவினர் பந்தை எவ்வாறு நேர்த்தியாக கையாண்டு சக வீரர்களுடன் முன்னும் பின்னும் கடத்தி ஒரு குழு மனப்பான்மையுடன் (Teamsprit) வெற்றியை நோக்கி நகர்வதுபோல், ஹோமோன்சுரப்பிகளும் ஒன்றோடொன்று இணைந்து குழுவாகச் செயல்பட்டு நம் உடல் இயக்கத்தினை வாழ்நாள் முழுவதும் சிரமமின்றி நகர்த்திக் கொண்டு செல்கின்றன.

மூளையின் அடிப்பகுதியில் சிகப்பு நிறத்தில் ஒரு சிறிய நிலக்கடலை (Peanut Size) அளவில் காணப்படும்- ஒரு கிராமைவிட குறைவான எடையுள்ள, Master Gland என்று மகுடம் சூட்டப்பட்ட பிட்டியூட்டறி சுரப்பி (Pituitary Gland) அமைந்துள்ளது. எண்ணற்ற செயல்திறனை உள்ளடக்கிய பிட்டியூட்டறி சுரப்பி, குழுத் தலைவனை (Team Captin) போலச் செயல்பட்டு, ஏனைய சுரப்பிகளின் செயல்பாட்டினையும் சிறப்பாக ஒருங்கிணைக்கும் தலைவனாகப் பரிணமிக்கின்றது. இதிலிருந்து சுரக்கும் உடல் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான Growth Hormone, மற்றும் அட்றினலீனின் சுரப்பியை (Adrenal Gland) தூண்டும் ACTH, தைராயிட் சுரப்பியை (Thyroid Gland) தூண்டும் TSH, பெண்களின் கருமுட்டை உற்பத்திக்கு துணை புரியும் FSH, சுகப்பிரசவத்தைத் தூண்டும் Oxytocin, குழந்தை பிறந்தபின் தாயிடமிருந்து தேவையான பால் சுரக்க உதவும் Prolaction போன்ற எண்ணற்ற ஹோமோன் செயல்பாடுகளின் தலைமைச் செயலகமாக அமைந்துள்ளது.



தொண்டையின் முன்புறத்தில் வண்ணத்துப்பூச்சி வடிவில் அமைந்துள்ள தைராயிட் சுரப்பி (Thyroid Gland) உற்பத்தி செய்யும் T3, T4, Calcitonin ஹோமோன்கள் நம் உடல் ஆற்றல் சக்தியின் கட்டுப்பாட்டு மையமாக (Body Energy Controle System) இயங்கி, நம் உடல் கலன்களை (Body Cells) தேவைக்கு ஏற்றாற்போல் விரைவாகவோ அல்லது மெதுவாகவோ செயல்பட துணைபுரிகின்றன. தைராயிட் சுரப்பி (Thyroid Gland) அதிகமாகச் சுரப்பதால் ஏற்படும் Hyper -Thyroidism, குறைவாகச் சுரப்பதால் ஏற்படும் Hypo, Thyroidism, தைராயிட் சுரப்பி வீக்கமடைவதால் ஏற்படும் Goiter போன்ற சிக்கல்களால், ஏராளமானோர் உலகெங்கும் பாதிக்கப்பட்டுள்ளது கண்கூடு. தைராயிட் சுரப்பி BMR-Basal Metabolic Rate எனப்படும் நம் உடலின் வளர்சிதை மாற்றத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்தும் கருவியாகும். 2019 ஜனவரி மாதம் முழுவதும் உலக சுகாதார நிறுவனத்தினால் (WHO) தைராயிட் விழிப்புணர்வு மாதம்-(January-2019 Thyroid Awarness Month) எனப் பிரகடனப்படுத்தப்பட்டு அனுஷ்டிக்கப்பட்டதிலிருந்தே தைராயிட் குறைபாட்டின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளலாம்.





வயிற்றுப் பகுதியில் அமைந்துள்ள பங்கிரியாஸ் சுரப்பி (Pancreas Gland) யிலிருந்து வரும் இன்சுலின் மற்றும் குளுக்காகான் (Insulin And Glucagon) ஹோமோன்களின் குளறுபடிகள் தற்கால மனித குலத்தையும், மருத்துவ உலகத்தையும் ’டயபட்டிஸ்’ (Diabetes) சுனாமியாக சுழற்றி அடிக்கின்றது; வயது வித்தியாசமின்றி வாட்டி வதைக்கின்றது. எத்தைத் தின்றால் பித்தம் தெளியும், என்ன செய்தால் டயபட்டிஸ் கட்டுப்படும் என்று அறியாமல் அல்லாடிக் கொண்டிருப்பதன் மூலமே பங்கிரியாஸின் இன்சுலின் மகாத்மியத்தை நாம் விளங்கிக் கொள்ளலாம்.

இரத்தத்தில் குளுக்கோஸின் அளவை (Blood Glucos Level) குறைக்க இன்சுலினும், தேவையானபோது குளுக்கோஸின் அளவைக்கூட்ட Glucagon ஹோமோனும், பங்கிரியாஸ் சுரப்பியும் உபயமாகும்.

இருபுறமும் சிறுநீரகங்களின் (Kidney) உச்சந்தலையில் அமைந்துள்ள Adrenal Gland சுரக்கும் Adrenaline And No-Adrenline ஹோமோன்கள் நாம் உணர்ச்சி வசப்படும்போதும், மன அழுத்தத்துக்கு உள்ளாகும்போதும், பய உணர்ச்சிக்கு உள்ளாகும்போதும் (Stressful or Exciting Moments) நமது இதயத் துடிப்பையும். சுவாசத்தையும் (Heart Rate And Breathing Rate) அதிகரித்து, நம் உடலை போரிடும் திறனுக்கு (Fighting Mode) உயர்த்துகின்றது. Adrenaling ஹோமோன் நமக்குள்ளே மறைந்திருக்கும் போராளியை தேவையானபோது கிளர்ந்து எழச் செய்யும் மந்திரகேந்திரமாகும். ஆண்-பெண் பருவ மாற்றங்களுக்கு பெரும் உதவி செய்யும் Androgen, Oestrogen, Progeterone ஹோமோன்களும், ஆண்களின் உயிரணு உற்பத்திக்கு உதவும் Testosterone ஹோமோனும், பெண்களின் மாதவிடாய் சுழற்சிக்கு தேவையான FSH & LH ஹோமோன்களும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. பெண்களின் உடலில் அமைந்துள்ள கருப்பை (Uterus) மற்றும் சினைப்பை (Overies) போன்ற உறுப்புகள் ஹோமோன்களின் கட்டுப்பாட்டு கேந்திரங்களாக (Hormones Regulative Centres) செயலாற்றுகின்றன. இதன் காரணமாகவே பெண்கள் மாதவிடாய் ஏற்படும் முன்பும் (Premenses Time), பிரசவத்துக்குப் பின்பும் (After Child Birth), மாதவிடாய் சுழற்சி நின்ற பின்பும் (Menopause) கடுமையான மன அழுத்தத்துக்கு (Stress & Angry) உள்ளாகின்றனர்.

சரியான முறையில் ஹோமோன்களை கையாளுவதன் மூலமும், சுரப்பிகளை ஒத்திசைந்து செயல்பட மறுசீரமைப்பதன் மூலமும் நம் மனதிலும் உடலிலும் உண்டாகும் எண்ணற்ற பிரச்சினைகளிலிருந்து சுகம் பெறலாம். ஹோமோன் குறைபாட்டை ஹோமோன் மருந்துகள் மூலம் HRT-Hormone Replacement Therapy தற்காலிகமாக மட்டுமே கட்டுப்படுத்த முடியும். ஒட்டுமொத்த ஹோமோன் மண்டலத்தை (Endocrine System) கட்டுப்படுத்தும் ஒருங்கிணைந்த செயல்பாட்டு உயிர்சக்தியை (Co-ordinating Life Force) மறுசீரமைப்பதன் மூலம் டயபட்டிஸ், தைராயிட், குழந்தையின்மை போன்ற எண்ணற்ற பிரச்சினைகளுக்கு நிரந்தர விடை கொடுக்கலாம். ஹோமியோபதி மருத்துவம் பக்க விளைவுகளற்ற முறையில் நமது உயிர்சக்தியை மறுசீரமைக்கும் (Recharge Life Force) மகத்துவம் மிக்கது. அனைத்துவிதமான ஹோமோன் குறைபாடுகளையும் நிவர்த்தி செய்யும் ஆற்றல் மிக்கது.

**மேலதிக ஆலோசனைகளுக்கு**
**020 8144 1553**

# மாதவிடாய் சீரமைப்பு சிகிச்சை

## MRT

**Menstrual Regulation Treatment**



ஒழுங்கற்ற மாதவிடாய்
Irregular Menstruation





ஹார்மோன் குறைபாடுகள்
Hormone Defects



அதீத ரத்தப்போக்கு
Over Bleeding



கர்ப்பமாவதில் சிக்கல்
Infertility




PCOD
சினைப்பை நீர் கட்டி

பி.சி.ஓ.எஸ்.–ஆல் பாதிக்கப்பட்டு மன அழுத்தத்துக்குத் தள்ளப்படுபவர்கள் **34%**

**70%** பி.சி.ஓ.எஸ். பாதிப்பு ஏற்பட்டதே தெரியாமல் வாழும் பெண்கள்

## சிறப்பு சிகிச்சைகள்

- **உயர் இரத்த அழுத்தம்** (B.P/Hyper Tension)
- **கொலஸ்ட்ரால்** (Cholesterol)
- **சிறுநீரக கோளாறுகள்** (Kidney Diseases)
- **மூட்டு வலி** (Arthritis)
- **தோல் வியாதிகள்** (Skin Diseases)
- **ஹார்மோன் பிரச்சனைகள்** (Hormone Disorders)
- **மாதவிடாய் கோளாறுகள்** (Menses Disorders)
- **செக்ஸ் பிரச்சனைகள்** (Sex Disorders)
- **குழந்தையின்மை** (Infertility)
- **டயபட்டிஸ்** (Diabetes)



உடல் எடை அதிகரித்தல்
Obesity



முகப்பரு
Pimples



தலைவலி
Headache



சரியான தூக்கமின்மை
Sleepless



முடிகொட்டுதல்
Hair Fall

உயர்தர மருத்துவம் → பாதுகாப்பான மருந்துகள் → விரைவான சேவை

# HOMOEO CARE

**இலவச மருத்துவ ஆலோசனைக்கு**
**0208 144 1553**

30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்

0044 7833341693 homoeocare www.homoeocare.com homoeocare@rediffmail.com

## ***Sainica Travels*** வழங்கும்

# *3 வாரத்தில் முழுத்தமிழகமும் சுற்றிவர ஓர் அரிய வாய்ப்பு!*



**விசேட விலைக் கழிவுடன்கூடிய**
**மிகக் குறைந்த கட்டணம்.**

**~~2200~~ 1700*** (விமானச் சீட்டு, மூன்று நேர உணவு, தரமான தங்குமிடம் மற்றும் சொகுசு வாகனம் உட்பட)



- **பயணத்திகதி 19/03/2019 முதல் 09/04/2019 வரை. (21 நாள்)**
- தரமான தங்குமிட வசதிகள் மூன்று நேர உணவு (சைவ உணவு) மற்றும் தொலைக்காட்சி பொருத்திய குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனம்.
- ஐம்பூத ஸ்தலங்கள், ஆறுபடை வீடு, நவக்கிரக ஸ்தலங்கள் ,புனித தீர்த்தங்கள் உட்பட நாற்பதுக்கும் மேற்பட்ட பிரசித்தி பெற்ற தலங்கள்.
- திருப்பதியில் சிறப்புத் தரிசன ஒழுங்குகள்.
- முதியவர்களுக்கும், பிரயாணத்தில் உதவி தேவைப் படுபவர்களுக்கும் உரிய வசதிகள் செய்து தரப்படும்.
- தமிழ் நாடு, பாண்டிச்சேரி, கர்நாடகா மற்றும் ஆந்திரா ஆகிய நான்கு மாநிலங்கள் அடங்கலான பயண ஒழுங்குகள்.
- உங்கள் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்ய எமது நிறுவன முகவர் ஒருவர் **UK** இல் இருந்தே முழு சுற்றுலாவிலும் உங்களுடன் பயணிப்பார்.
- இந்தியன் விசா பெற சிரமப்படுபவர்களுக்கு விசா வசதிகள் செய்து தரப்படும்.
- Shopping செய்ய, உறவினர் நண்பர்களைச் சந்திக்க இரண்டு நாட்கள்.

### **தரிசிக்கும் ஆலயங்கள்**

1. மைலாப்பூர் கபாலீஸ்வரர் கோவில்.
2. பார்த்தசாரதி ஆலயம் - சென்னை.
3. வடபழனி முருகன்.
4. திருவேற்காடு கருமாரி அம்மன்.
5. காஞ்சிபுரம் காமாட்சி அம்மன்.
6. காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் ஆலயம்.
7. மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி.
8. திருவண்ணாமலை.
9. மனகுல விநாயகர் பாண்டிசேரி.
10. நவக்கிரக கோவில்கள்.
11. சுவாமிமலை.
12. சமயபுரம் மாரி அம்மன் ஆலயம்.
13. உச்சிபிள்ளையார் ஆலயம்.
14. ஸ்ரீரங்கம்.
15. திருவானைக்காவல்.
16. குறிஞ்சி ஆண்டவர் கோவில் - கொடைக்கானல்
17. பழனி முருகன்.
18. மருதமலை முருகன்.
19. பிள்ளையார் பட்டி.
20. சிதம்பரம் தில்லை நடராசர் கோவில்.
21. சீர்காழி தோணியப்பர் கோவில்.
22. வைதீஸ்வரர் ஆலயம்.
23. அன்னை வேளாங்கன்னி.
24. ராமேஸ்வரம் புனித தீர்த்தங்கள்.
25. திருச்செந்தூர் முருகன்.
26. கன்னியாகுமரி பகவதி அம்மன்.
27. சுசிந்திரம்.
28. ஸ்ரீவில்லிப் புத்தூர் ஆண்டாள்.
29. மதுரை மீனாட்சிஅம்மன் கோவில்.
30. திருப்பரம் குன்றம்.
31. பழமுதிர்ச்சோலை.
32. அழகர் கோவில்.
33. ராக்காயி அம்மன் தீர்த்தம்.
34. திருப்பதி வெங்கடாசலபதி.
35. பத்மாவதி கோவில் - திருப்பதி.
36. திருத்தணி.
37. திருவாலங்காடு.
38. திருக்காளகஷ்த்தி - ஆந்திரா.
39. அஷ்டலக்ஷ்மி கோவில் - பெசன்நகர்.

**பயணிக்கும் ஏனைய இடங்கள்**

- முள்ளிவாய்க்கால் முற்றம் - தஞ்சாவூர்.
- கன்னியாகுமரி விவேகானந்தர் பாறை.
- குற்றாலம் அருவி.
- கொடைக்கானல் - படகு பயணம்.
- ஊட்டி - பூங்கா.
- மைசூர் பலஸ் – கர்நாடகா.
- மாமல்லபுரம்.
- தொட்ட பெட்டா.
- மரீனா கடற்கரை.
- ஒரு நாள் புது சினிமாவிற்கும் அழைத்துச்செல்லப்படும்.

தொடர்புகளுக்கு:
**Sainica Travels**
**07957597024 / 07342150501**
e-mail: info@sainicatravels.com
www.sainicatravels.com

# திருக்கைலாய யாத்திரை 2019

**வாழும் போதே திருக்கைலாயம் சென்று வர! புனித மானசரோவர் ஏரியில் நீராட ஓர் அரிய வாய்ப்பை வழங்குகிறது**

## Sainica Travels





- **பயணத் திகதி 04.06.2019 முதல் 22.06.2019 வரை**
- தரமான தங்குமிட வசதிகள் மூன்று நேர சைவ உணவு மற்றும் தொலைக்காட்சி பொருத்திய குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனம்.
- புனித மானசரோவர் ஏரி மற்றும் திருக்கைலாய மலையில் பூஜை, யாகம் மற்றும் ஆராத்தி செய்வதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.
- திருக்கைலாய மலையை வலம்வர (பரிக்ரமா) விரும்புபவர்களுக்கு உரிய வசதிகள் யாக் (Yak), குதிரைகள் (Horses/Pony) மற்றும் சுமை தூக்குபவர்கள் (Porters) ஒழுங்கு செய்துதரப்படும்.
- Nepal Visa மற்றும் Tibet Permit இலவசமாக பெற்றுத்தரப்படும்.
- உங்கள் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்ய எமது நிறுவன முகவர் ஒருவர் UK இல் இருந்தே முழு சுற்றுலாவிலும் உங்களுடன் பயணிப்பார்.

தொடர்புகளுக்கு : **Sainica Travels**
தொலைபேசி : 07342150501/07957597024
Email: info@sainicatravels.com
www.sainicatravels.com
Facebook.com/Sainicatravels

<u>பயணிக்கும் இடங்கள்</u>

**(1) நேபால் – காத்மண்டு (Nepal – Kathmandu)**

- பசுபதிநாத் ஆலயம்.
- சுயம்புநாத் ஆலயம்.
- போதநாத் பௌத்த கோவில்.
- Bhaktapur Durbar Square.
- காத்மண்டு Sightseeing.
- Shopping at தமெழ் மார்க்கெட் (Thamel market).

**(2) திபெத் – சீனா (Tibet – China)**

- திருக்கைலாய பர்வதம்.
- பிரம்மபுத்ரா நதி.
- இராவணன் தவம் செய்த இடம்.
- கௌரிகுண்ட் - பார்வதி சரோவர்.
- Tibet – Saga City (சகா நகரம்)
- கைலாஷ் பரிக்ரமா அல்லது கோரா (திருக்கைலாய மலையை வலம்வருதல்).
- புராணங்களில் கடவுளர் மற்றும் தேவர்கள் வந்து நீராடுவதாக போற்றப்படும் புனித மானசரோவர் ஏரி.

**3 விமானச்சீட்டுக்கள், மூன்று நேர உணவு, தங்குமிடம், Tibet permit மற்றும் Nepal visa உட்பட**
**கட்டணம் £3650**

**Frequently Asked Questions:**

1. **எனக்கு 75 வயது. நான் இந்த யாத்திரையில் பயணிக்கலாமா?**
   ஆம். 80 வயது வரை இந்த யாத்திரையில் அனுமதிக்கப் படுவர்.

2. **எனக்கு உயர் இரத்த அழுத்தம் (High Blood Pressure), Diabetes, இதய நோய் (Heart Disease) மற்றும் High cholesterol உள்ளது. நான் இந்த பயணத்தில் பங்குகொள்ளலாமா?**
   மேல் குறிப்பிட்ட Medical conditions உள்ளவர்கள் பலர் எமது Tibet முகவர் மூலம் (Tibet Agent) முன்னர் திருக்கைலாய யாத்திரையை மேற்கொண்டு வெற்றிகரமாக திரும்பியுள்ளனர் மேலும் இந்த யாத்திரையில் பங்குகொள்ளும் பலருக்கு மேல் குறிப்பிட்ட Medical conditions இருப்பதால் இந்த யாத்திரை மருத்துவ உதவி முன் ஏற்படுகளோடு (Oxygen Cylinders, Medicines for High Altitude Sickness and Emergency Medical Attention) மிகவும் சிரத்தையுடன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. Your Health Conditions will be monitored continuously during yatra. இருப்பினும் உங்களுடைய குடும்ப வைத்தியரிடம் (GP) ஆலோசனையை பெறுவது மிகவும் முக்கியம்.

3. **என்னால் நீண்ட தூரம் நடக்க இயலாது. நான் இந்த யாத்திரையில் பயணிக்கலாமா?**
   ஆம். நாம் ஒழுங்கு செய்துள்ள இந்த யாத்திரையில் பயணிப்பவர்கள் புனித மானசரோவர் ஏரி மற்றும் திருக்கைலாய மலையின் அடிவரை வாகனத்திலேயே செல்லலாம். மேலும் அதிக நடை இல்லாமல் திருக்கைலாய மலையை அருகில் இருந்து தரிசிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

4. **என்ன வகையான உடற்பயிற்சி தேவை?**
   இந்த யாத்திரைக்கு முன்னர் **உடல், மன ரீதியான தயார் படுத்தல்** மிகவும் அவசியம். உங்கள் மருத்துவரின் (GP) ஆலோசனையுடன் உடல் பரிசோதனை செய்வது நல்லது. இது தவிர நடைபயிற்சி, உடற்பயிற்சி, யோகாசனம் (Yoga) மற்றும் மூச்சு பயிற்சி (Breathing Exercise) செய்வது நல்லது. இதற்கான பயிற்சி பட்டறைகள் எங்களால் (Sainica Travels) இலவசமாக ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

5. **இந்த யாத்திரை தொடர்பான நேரடி அனுபவம் உங்கள் நிறுவனத்திற்கு உண்டா?**
   ஆம். எமது நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட 2018 க் கான திருக்கைலாய யாத்திரை 25 பேருக்கும் மேற்பட்டவர்களை கொண்ட குழுவுடன் மிக சிறப்புற நடை பெற்று முடிந்தது. இது தொடர்பான photos ஐ எமது Facebook மற்றும் website ல் காணலாம்.



ஏ.ஜே.ஞானேந்திரன்

## கொள்ளுப் பாட்டியின் கொண்டாட்டம்



**வயது 102..** 4300 அடியிலிருந்து குதிக்கிறார் இந்தக் கொள்ளுப்பாட்டி. ஐம்பதுகளைக் கடந்தாலே நம் ஊர்ப் பெண்களை மூதாட்டிகள் என்று பத்திரிகைகள் அழைக்க ஆரம்பித்து விடுகின்றன. அறுபது எழுபதுகளில், இங்குள்ள ஆணோ பெண்ணோ உடல் ஆரோக்கியத்தில் அவ்வளவாக ஜொலிப்பதில்லை என்பதும் உண்மைதான். இந்த 102 வயதுப் பாட்டியோ, வானத்திலிருந்து, பரசூட் அணிந்து குதிக்கும் "ஸ்கைடைவிங்கை" இரண்டாவது தடவையாகச் செய்திருக்கிறார். 2016இல் தனது 100வது பிறந்த தினத்தின்போது, முதற் தடவையாக "ஸ்கைடைவிங்" செய்திருந்தார். அவுஸ்திரேலியரான ஐரின் ஓஷியா என்பவர்! 102 வருடங்களும் 194 நாட்களும் என்ற வயதுக் கணக்கில், மணிக்கு 140 கி.மீற்றர் வேகத்தில், காற்றைக் கிழித்துக் கொண்டு ஆகாயத்திலிருந்து குதித்து சாதனையாளராகி இருக்கிறார் கொள்ளுப்பாட்டி. எப்படி இருந்தது அனுபவம் என்று கேட்டபோது, குப்பென்ற குளிர் காற்று முகத்தில் ஓங்கி அறைந்தாற்போன்று இருந்தது என்று கூலாகச் சொல்கிறார் இவரின் மகளின் உயிரைப் பறித்த பொல்லாத வியாதியால் பீடிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உதவும் நோக்கில் பணம் சேகரிக்கப் போகிறாராம்.

மனதில் தில் இருந்தால் எதில்தான் சாதனை படைக்க முடியாது?

## இன்னொரு பட்டாம்பூச்சி




**ஆ**ண்டுக்கு ஆண்டு "மிஸ் வேர்ல்ட்" என்று போட்டி வைத்து பல நாடுகளின் வண்ணத்துப் பூச்சிகளை நமக்கு அறிமுகப்படுத்தி வருகிறார்கள். "அறுபது கிலோ தாஜ்மஹால்" ஐஸ்வர்யா இப்படித்தான் அறிமுகமாகினார். இந்த ஆண்டு தெரிவாகி இருப்பவர் 26 வயதான மெக்ஸிக்கோ நாட்டு அழகி!. இவர் பெயர் வனெஸ்ஸா! 118 அழகிகள் பங்குபற்றிய இந்தப் போட்டியில் இரண்டாவது இடம் மிஸ் தாய்லாந்தாக தெரிவாகிய அழகி லிம்சுனுக்கான் என்பவர் பெற்றுள்ளார். மூன்றாவது இடம் உகாண்டா அழகியான அபெனாக்கியோவுக்கு போயிருக்கின்றது. பன்னாட்டு வர்த்தகத்தில் பட்டம் பெற்றவர், விளையாட்டுத் துறைகளில் ஆர்வமாக பங்கேற்பவர், சமூக சேவையாளர் என்கிற முறையில், வெறும் உடல் அழகுக்காக மாத்திரம் வனெஸ்ஸ தெரிவாகவில்லை என்பது தெரிகின்றது. முதற்தடவையாக தன் தாய் நாடான மெக்ஸிக்கோவிற்கு ஓர் உலக அழகியைப் பெற்றுக் கொடுத்த பெருமை இவரைச் சார்கின்றது. இந்தப் போட்டிகளில் வருடா வருடம் நடப்பதுபோல, 2017இன் அழகியான மனுஷி சிலார் (இந்தியர்) நடப்பு ஆண்டு அழகிக்கு தன் முடியை அணிவித்திருக்கிறார். இந்த ஆண்டு சீனாவின் சன்வா என்னும் இடத்திலேயே இந்த அழகித் தெரிவுப் போட்டி இடம்பெற்றிருக்கின்றது.

அழகியல் பூங்காவில் ஓர் எழில் மலர்!

## நூறு வயதில் ஒரு சிறப்பான பரிசு

**1917**இல் அன்றைய சோவியத் ஒன்றியத்தின் ஆளுகைக்குள் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டது பின்லாந்து. அதற்கு முன்பு ஆறு நூற்றாண்டு காலம் இந்த நாடு சுவீடனின் ஆளுகைக்குள் இருந்திருக்கின்றது. இந்தச் சுதந்திரக் காற்றைச் சுவாசித்து, 100 வருடங்களை நிறைவு செய்து விட்ட இந்த நாடு, அதன் ஞாபகார்த்தமாக தனக்குத்தானே ஒரு பரிசளிக்க முடிவெடுத்தது. அது என்ன தெரியுமா? ஒரு நவீன நூலகம். 20 வருட காலமாகத் திட்டமிட்டு கட்டியெழுப்பிய இந்த நவீன நூலகத்தை பொது மக்களுக்காக டிசம்பர் 5இல் திறந்து வைத்துள்ளார்கள்



மரப் பலகைகளும், கண்ணாடிகளும் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்த அழகிய நூலகம், நகரின் மத்தியில் பாராளுமன்றத்திற்கு முன்பாக அமைந்திருக்கின்றது. இங்கு 100,000 நூல்கள் வரையில் வைத்திருக்கிறார்கள். ஒரு சினிமா மண்டபம், இசைக்கூடம், முப்பரிமாண அச்சியந்திரங்கள் என்று பல்வேறு இலவசங்கள் பொதுமக்களின் பாவனைக்காகவும், பார்வைக்காகவும் இருக்கின்றன.

கல்வியில் முன்னணி வகிக்கும் உலக நாடு என்று 2016இல் கணிக்கப்பட்டது இந்த நாடு. வாசகர்களால் திருப்பிக் கொண்டு வரப்படும் புத்தகங்களைச் சேகரித்து, லிப்ட்களில் ஏறி இறங்கும் றோபோக்களை இங்கே காணலாம். மனித ஊழியர்களும் இங்கு பணிக்கமர்த்தப்பட்டுள்ளார்கள். ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையுடன், ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகள் 28 பற்றிய தகவல் திரட்டுகள், அவர்கள் வாழ்க்கை முறைகள் இங்குள்ள விருந்தாளிகள் நிலையத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. "ஓடி" என்று அழைக்கப்படும் இந்த நூலகத்திற்கு தினமும் 10,000 வரையிலானவர்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள். பொதுவாக நூலகங்களில் அமைதி காக்க வேண்டும். இங்கு அது அவசியமில்லை. சந்திப்பு நிலையந்தானே? வருடமொன்றிற்கு இங்குள்ள 5.5 மில்லியன் மக்களால் 48 மில்லியன் நூல்கள் இரவல் எடுக்கப்படுகின்றதாம்.

வாசிப்பை நேசிப்பவர்கள் இவர்கள்.





## 28 வருடக் கூந்தல் அழகி

**5** வயதில் தலைமுடி கத்தரிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அடுத்த 28 வருடங்கள் அவளது கூந்தல் எந்த விதத்திலும் கத்தரிக்கப்படவில்லை. இன்று 33 வயதாகி விட்ட உக்ரெயின் அழகி அலேனா கிராவச்செங்கோவின் கதைதான் இது. தன் தலைமுடியின் நீளம் இப்பொழுது சுமாராக 2 மீற்றர் வரை வந்துவிட்டது. தான் நடக்கும்போது, சில சமயங்களில், கால் கூந்தலை மிதிக்க, இடறிவிழும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் இவர் குறிப்பிடுகிறார்.

இரட்டைப் பிள்ளைகளுக்கு தாயான இவர், வர்த்தகத் துறையில் ஒரு பிரமுகர். 3 வாரங்களுக்கு ஒரு தடவை தலையைக் கழுவுவதுதான், கூந்தலைச் சீராக வைத்திருப்பதின் இரகசியம் என்கிறார் இந்தக் கூந்தலழகி. இருபதுகளில் இடுப்பு வரை நீண்டிருந்த கூந்தல், முப்பதுகளின் ஆரம்பத்தில், முழந்தாளைக் கடந்து, தரையைத் தொட ஆரம்பித்து விட்டதாம். தனது கூந்தலே தனது அடையாளமாகி விட்டதால், நீண்ட கூந்தல் இல்லாத அலீனாவை நினைத்துப் பார்க்க முடியாமல் இருக்கின்றது என்கிறார்.

அடையாளம் தரும் அழகிய கூந்தல்.



டாக்டர் ஸ்ரீதரன்

# சோதிடம்



ஆட்டமும் பாட்டமுமாக தொடங்கி - குதிப்பும் கும்மாளமுமாக தொடர்ந்து- இப்பொழுது அல்லலும் தொல்லையுமாக இழுத்துப் பறித்துக்கொண்டிருக்கிறது, நாற்பது வயதுடைய பிரதம கணக்காளர் விமலின் வாழ்க்கை.

வாழ்க்கை போட்ட தழும்புகளால் தானோ என்னவோ கடந்த சில மாதங்களாகவே சோதிடக் கலை பற்றியும் சோதிடர்கள் உபயோகிக்கும் சில பொதுவான சொற்களைப் பற்றியும் அறிவதில் விமல் வெகு ஆவலாக உள்ளார்.

சென்ற வாரம் எதிர்பாராது சந்தித்த தன் பால்ய நண்பன் பார்த்திபனிடம் இது விடயமாக சில கேள்விகளைக் கேட்டார். குதர்க்க பேர்வழி பார்த்திபனுக்கு எதற்குமே நேரடியாக பதில் கூற தெரியாது. சனிபகவானை பற்றிய விமலின் கேள்வியொன்றுக்கு பார்த்திபனின் பதில்:

சிறு வயதில் படிப்பில் அதி புத்திசாலியான நீ- படித்து-பட்டம் பெற்று- பதவியில் அமர்ந்து- கை நிறைய சம்பாதித்து- வாலிப முறுக்கு உடலில் பளிச்சிட- நவநாகரீக உடை அணிந்து- ஆகா- ஓகோ- இதுவல்லவோ வாழ்க்கை- என்று வாழ்ந்திருந்த போது- உனது அலுவலகத்தில் பணியாற்றும் டைபிஸ்ட் கமலாவின் கவனம் ஒரு நாள் உன் மீது திரும்பியதே-அதுதான் சனி பார்வை.

உனது வாலிப உடலுக்குள் சுரக்கும் சில ஹார்மோன்களின் இரசாயனம் புரியாது- கலாச்சாரம் கூறும் சில அர்த்தமற்ற வெறும் வார்த்தைகளான- தெய்வீக காதல்- பூர்வ ஜென்ம பந்தம்-போன்ற சொற்களை உண்மை என நம்பி- சினிமா- கடற்கரை-ஓட்டல்-என்று கமலாவை தினமும் அழைத்துச் சென்று-எதுவுமில்லாத அவளின் அறிவற்ற கண்களுக்குள் காவியம் தெரிவதாக பிதற்றித் திரிந்தாயே- அந்த நேரம் தான் உனக்கு ஏழரை சனி.

உன்னைச் சுற்றியிருக்கும் சில மடையர்களுக்கு சமூகம் என்ற ஒரு பெயரை கொடுத்து- அந்த மடையர்களுக்கு சமூகம் என்ற ஒரு பெயரை கொடுத்து- அந்த மடையர்கள் மத்தியில் கௌரவமாக வாழ வேண்டும் என்று இல்லாத ஒன்றை கற்பனை செய்து கொண்டு- என்ன செய்கிறோம்- எதற்காக செய்கிறோம் என்று சிந்திக்காமல்- காவியக் கமலாவின் பெற்றோர்களுடன் நீயே சென்று வலிய பேசி- உனது திருமணம் நடைபெற்றதே- அன்று பிடித்தது தான் உனக்கு ஜன்மத்து சனி.

இவ்வளவும் நடந்த பின்பும் கூட- வாழ்க்கைக்கு ஒரு தனிப்பட்ட அர்த்தம் கிடையாது- அதற்கு அர்த்தம் கொடுப்பவர்களே நாங்கள் தான் என்ற உண்மை புரியாது- யாரோ மடையர்கள் உருவாக்கிய அளவு கோல்களால் உனது வாழ்க்கையை அளந்து பார்த்து- நான் வாழ்க்கையில் தோல்வி அடைந்த ஒரு மனிதன் என்று கூறிக்கொண்டு- அந்த விரக்தியிலிருந்து விடுபடுவதற்காக மதுவின் துணையையும் சிகரட்டின் சிநேகிதத்தையும் நாடினாயே- அன்று பிடித்தது தான் உனக்கு மரண சனி.

நீ என்ன தான் கூறுகிறாய்? இது விமலின் கேள்வி.

சனி வெளியில் இல்லை- உனது தலைக்குள் தான் இருக்கிறது.

# அமைதி



தினமும் கடலுக்கு செல்லும் மீனவன் கந்தன். குயிலி அவனுக்கு வாய்த்த மனைவி. கடலருகே உள்ளது அவர்களது சிறிய குடிசை. பெரிதான ஆசைகள் எதுவுமே இல்லாத- பிக்கல் பிடுங்கல் அற்ற அமைதியான வாழ்க்கை. கடின உழைப்பு அன்றாடம். அதை தொடரும் நிம்மதியான தூக்கம். படைத்தவனே பார்த்துப் பொறாமைப்படும் ஒருவருக்கொருவர் துணையான இன்பமான குடும்பம்.

கந்தன் வாழும் கிராமம் ஒரு பின் தங்கிய கிராமம்- அங்கு வாழும் மீனவர்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் கேவலமானதாம்- இவ்வாறு கூறுகிறது உலக வங்கி.

இந்த கிராமத்தையும் அங்கு வாழ்பவர்களின் வாழ்க்கைத்தரத்தையும் முன்னேற்றும் திட்டத்தின் முதல் படியாக குடும்பத்திற்கொரு டி.வி. இலவசமாக வழங்கப்படுகிறது உலக வங்கியால். கிராமத்தவர்களுக்கு ஒரே கொண்டாட்டம்.

கந்தனும் குயிலியும் இப்பொழுது தவறாது மணிக்கணக்கில் டி.வி. பார்க்கிறார்கள்.

இதுவரை அவர்களுக்கு தெரியாத- புரியாத விடயங்கள்- தோன்றாத ஆசைகள்- இல்லாத சபலங்கள்- கந்தன், குயிலி வாழ்வில் இப்பொழுது முளைக்கின்றன.

இதன் விளைவு: ஆசைகள்- தேவைகள்- இலட்சியங்கள்- கனவுகள்- பிக்கல்கள்- பிடுங்கல்கள்.

ஒரு வருடத்தின் பின் கந்தன் துபாய் செல்கிறான் பணம் தேடுவதற்காக.

கடலோர குடிசை மாளிகை ஆகிறது- வீட்டில் ஆடம்பர பொருட்கள்- வித வித உணவுகள்- புதிய நண்பர்கள்- ஆட்டம்- கொண்டாட்டம்- குயிலியின் ஆடைகளில் மாற்றம்- உடலில் ஒரு மினுமினுப்பு- மத மதப்பு- இரத்தத்தில் ஒரு கத கதப்பு.

விளைவு- நகை வியாபாரி சண்முகத்தின் உறவு- புடவை வியாபாரி ஆறுமுகத்தின் நேசம்.

கந்தன் துபாயில் கடின உழைப்பு- தனிமையை மறக்க மது- புகையிலை.

இரண்டு வருடங்களின் பின் விடுமுறையில் கந்தன் வீட்டுக்கு வருகிறான்.

குயிலியின் லீலைகள் தெரிந்து விடுகின்றன.

கோபம்- ஆத்திரம்- மது- போதை- கத்தி- கொலை.

மனைவியைக் கொன்ற குற்றத்திற்காக கந்தன் இப்பொழுது ஒரு ஆயுட்கைதி.

வளர்முக நாடுகளில் வசிக்கும் ஒவ்வொரு குடிமகனுக்கும் *Internet* வசதி வழங்கப்பட வேண்டும் என்று சமீபத்திய உலக வங்கி அறிக்கை ஒன்று கூறுகிறது.

நாராயண!

# சோழியர்கள்



அமெரிக்காவில் இயங்கும்- அகில உலக ரீதியில் மிகப் பிரபலமான ஸ்தாபனமொன்றில்- மிக உயர்ந்த பதவி வகிக்கும் வரதன்- எத்தனையோ வருடங்களுக்குப் பின் தன் பெற்றோர்களைப் பார்ப்பதற்காக- தாயகத்திலுள்ள ஒரு சிறிய கிராமத்திற்கு வந்திருக்கிறார்.

சில வருடங்களுக்கு முன்னர்- அமெரிக்காவிலிருந்து தனது தாயாருக்கு அவர் பரிசாக அனுப்பிய துணி துவைக்கும் இயந்திரம்- கவனிப்பாரற்று- ஒரு மூலையில் தூசு படிந்து இருப்பதை பார்த்ததும்- கோபத்துடன் அதற்குரிய காரணத்தை தன் தந்தையிடம் வினவுகிறார்.

தந்தை சிதம்பரம் கூறுகிறார்:

இந்தக் கிராமத்தில் ஒழுங்கான- தொடர்ச்சியான- மின்சார வசதி இல்லை. தண்ணீர் குழாய்களில் எந்த நேரமும் தண்ணீர் வருவதில்லை. வந்தாலும் சொட்டு சொட்டாகவே வருகிறது. இங்கு எமக்கு தரமான சோப் பவுடர் கிடைப்பதில்லை. அப்படிக் கிடைத்தாலும்- இங்கு வாங்கும் சில உடைகளை இந்த இயந்திரத்தில் போடும் போது- அவை வெவ்வேறு ரூபத்தில்- நிறங்களில்- வெளிவருகின்றன. ஒரு முறை இதில் ஒரு சிறு பிழை ஏற்பட்டபோது இங்குள்ள எவராலும் அதைச் சரி செய்ய முடியவில்லை.

அம்மாவிற்கு தனது துணிகளை தானே துவைப்பதற்கு எவ்வளவோ நேரம் இருக்கிறது. அப்படி முடியாவிட்டால் கூட இந்தக் கிராமத்தில் எத்தனையோ வண்ணார்கள் இருக்கிறார்கள். அப்புறம் எதற்காக அம்மாவிற்கு இந்தக் கிராமத்தில் இந்த இயந்திரம்?

இவ்வளவற்றையும் அருகே இருந்து கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த சிதம்பரத்தின் நண்பர் சிதம்பரத்திடம் கேட்கிறார்:

உனது மகன் அமெரிக்காவில் என்ன தொழில் பார்க்கிறான்?

சிதம்பரம் மிக பெருமையுடன் கூறுகிறார்:

உலக வங்கியில் - வறிய வளர்முக நாடுகளுக்கு தொழில்நுட்ப உதவி வழங்கி அவற்றை முன்னேற்றும் பிரிவின் தலைவராக இருக்கிறான்!

நண்பருக்கு ஒரு பழமொழி ஞாபகத்திற்கு வந்தது.

சும்மா இருந்த எத்தனை சங்குகளை ஊதிக் கெடுத்திருக்கிறார்கள் இந்த ஆண்டிகள்!





## லண்டனில் உணர்வுபூர்வமான

# கேணல் கிட்டு வீரவணக்க நிகழ்வு





தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதி கேணல் கிட்டு, மற்றும் பத்து வீரவேங்கைகளின் 26வது ஆண்டு வீர வணக்க நிகழ்வு, தென் மேற்கு லண்டன் *SUTTON* நகரில் *THOMAS WALL HALL CENTRE* இல் உணர்வுபூர்வமாக நடைபெற்றது. இதில் பொதுச் சுடரை 'நாட்டியாலயா' ராகினி ராஜகோபால் ஏற்றி வைக்க, அதனைத் தொடர்ந்து இப்போது அவுஸ்திரேலியாவில் வாழும் கிட்டுவின் உடன்பிறப்பு காந்திதாசன் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து ஈகைச் சுடரினை கிருஷ்ணகுமார் கணேசரட்ணம் ஏற்றிவைக்க, கிட்டு மற்றும் வீரர்கள் உருவப்படங்களுக்கு சிவா பொன்னம்பலம் மலர்மாலை அணிவித்தார். அடுத்து மண்டபம் நிறைந்த மக்கள் வரிசையாக நின்று மலர் வணக்கம் செய்தனர்.

மாவீரர் கிட்டுவின் சகோதரர் காந்திதாசன், தனது தம்பியுடனான நினைவுகளை சபையோருடன் பகிர்ந்து கொண்டார். கிட்டுவைப் போன்றே தர்க்கரீதியான, தமிழீழ கோட்பாடுகளை இருதயபூர்வமாக கொண்டிருந்தவர் என்பதை இவரது உரை வெளிப்படுத்தியது. "சிறு சந்தேகம் என்றாலும் அதற்கு இடம் கொடுக்காத கிட்டு, எப்படி கப்பலில் ஏறினார் என்பது இன்றுவரை புரியாத புதிராகவே இருக்கிறது. தலைவர் பிரபாகரன் 'வரவேண்டாம் வரவேண்டாம்' என்று சொன்னபோதும் அவர் கேட்கவில்லை. இது இந்தியாவின் திட்டமிட்ட சதி. கிட்டு மானசீகமாக, இஸ்ரேலில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த 'ஒற்றைக்கண்' மோஸிடயானின் போர்த்தந்திரங்களைப் பின்பற்றினார். போர் என்றால் தனது தம்பிகளுக்கு முன்னால் அவர் போய் நிற்பார். ஒருமுறை தலைவருடன் நான் பேசிக் கொண்டிருந்தபோது, கிட்டுவிடம் அடிவாங்கிய பொடியன்கள் அவருக்கு ஒன்றென்றால் அவங்கள் உயிரைக் கொடுக்கிறேன் என்று முன்னுக்குப் போய் நிற்கிறாங்கள் என்று ஆச்சரியத்துடன் கூறினார். அன்பாக நேசித்து, பண்பாக பழகுவார். மிகவும் மென்மையானவர்" என்று காந்திதாசன் தனது பேச்சில் குறிப்பிட்டார். காப்டன் பிறைசூடியின் நினைவுகளையும் பகிர்ந்தார்.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவைச் சேர்ந்த நியூட்டன் பேசுகையில், லண்டனிலுள்ள ஸ்ரீலங்கா தூதரகத்துக்கு முன் பெப்ரவரி 4ம் திகதி, சுதந்திர தினத்துக்கு எதிராக தமிழர் ஒருங்கிணைப்புக் குழு ஆர்ப்பாட்டம் நடாத்துவதன் காரணத்தை மிகத் தெளிவாக விளக்கினார்.

தமிழீழ விடுதலை உணர்வுள்ள பாடல்களும், நடன நிகழ்வுகளும், கவிதா அஞ்சலிகளும் அரங்கேறின. 'நாட்டியாலயா' அதிபர் ராகினி ராஜகோபால், 'நாட்டியாலயா' நடன ஆசிரியை ஷர்மினி கண்ணன், 'ராஜா கலைப்பள்ளி' நடன ஆசிரியை விஜயராணி கிருஷ்ணராஜா, 'வல்வை கலைக்கோயில்' நடன ஆசிரியை சுஜிதா ஆனந்த் ஆகியோரின் மாணவிகளின் நடனங்கள் உணர்வுபூர்வமானதாக இடம் பெற்றன. பிரவினா, மிதுலாயினி, மயூரன், பவித்திரா ஆகியோரின் விடுதலைக் கானங்கள், தாஸின் கவிதா அஞ்சலியும், கிட்டு பற்றிய வாசுகியின் உரைச் சித்திரமும் அனைவரையும் கவர்ந்தது. நிகழ்ச்சிகளைத் தொகுதித்து அளித்தார் கிருபா.

நிறைவாக, தேசியக் கொடி கையேந்தப்பட்டு, நம்புங்கள் தமிழீழம் நாளை பிடிக்கும் என்ற பாடலுடன், வீர வணக்க நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது. ●





























# மன அலை(ச்சல்)கள்

## மன அலை(ச்சல்)கள் ஓய்வு அடைய முடியுமா?



டாக்டர். என்.ஜெகநாதன்

கடல் அலைகளுக்கு ஓய்வில்லை. அவை சீற்றுவிட்டால் கடல் கொந்தளிப்பதாகக் கூறுவார்கள். இதற்கான சக்தி காற்றுவீச்சுடன், பூகம்பம், எரிமலைக் குமுறல் எனவும் ஆகலாம். இவை புனிதத்தன்மையான (*Sacred*) பஞ்சபூதங்களின் நிகழ்வு என முன்னையோர்கள் விபரித்தனர்.

அடுத்தடுத்து எழும் எண்ணங்களை அலைகளாகக் கருதுகிறோம். அவை நிலைகுலையும்போது மனக்குமுறல், மனதில் புயல் வீசுகிறது என உவமை கூறுகிறோம். மனதில் எண்ணங்கள் எழுதற்கான சக்தி புனிதத்தன்மையானது என்று சொல்வதற்கில்லை. நினைவுணர்வு (*Conscious*) நிலைத்திருக்க வேண்டிய சக்தியை போசனம் மூலம் மூளை தருவிக்கிறது. அது தடைப்பட்டால் நினைவிழந்து (மயக்கமடைந்து) விடுவோம். அது நிலைநாட்டப்படும்போது எண்ணங்களுக்கு ஓய்வில்லை. நினைவுணர்வு தடுமாறும்போது எண்ணங்களும் தடுமாறுகின்றன.

மனிதவர்க்கத்தைப் பொறுத்தவரையில் எமது நினைவில் (அறிவாக) பதிந்துள்ள தகவல்களின் அடிப்படையில் நினைவுணர்வு அமைகிறது எனலாம். தூக்கத்திலிருந்து காலையில் விழித்ததும் அன்றைய கிழமை, திகதி என்பன முன்னையதை நினைவு கூருவதால் பெற முடிவதே, நேற்றைய ஊகிக்கக் கூடியதும், சூரியனின் பிரகாசம், நிலைகளற்ற மணிக்கணக்கிற்கேற்ப எவ்வாறு அமையுமென்ற அறிவு எமக்குள்ளதால்தான்.

ஐம்புலன்கள் எதுவினது இயக்கத்தின்போது இத்தகைய நினைவூட்டல் இடம்பெறுகிறது, அவற்றை ஒருமித்து, பகுத்து, தெளிவடைவது அறிவுணர்வாக (*Awarness*) மனதிற்கு எட்டுகிறது. நினைவுணர்வு முழுமையாகவும், எண்ணங்கள் சீராகவும் அமைவது இதற்கு அவசியமாகிறது. மதுபோதை, மருந்துகள் பாவனை மூலம் நினைவுணர்வு குன்றி விடலாம். மனவுணர்ச்சிகள் (*Emotion*) மிகையானால் எண்ணங்கள் சீற்றுவிடுகின்றன.

சூழலுக்கு ஏற்ப செயற்பட இவை அவசியமாகின்றன. சூழலில் எமது பாதுகாப்பிற்கான ஐம்புலன்கள் இயங்கும்போது மன அலைகளுக்கு ஓய்வில்லை என்றே கூறலாம். புலன்களை அடக்குவது இச்சையாக (*Willing*) நிகழ்வதில் மனம் பங்கேற்பதும் எண்ணங்கள் மூலம் என்றே ஆகிறது.

நினைவிழந்த நிலையில் மனஅலைகள் ஓய்வடையலாம். நினைவு திரும்பியதும் எழும் கேள்விகள், நாம் எங்கிருக்கிறோம், எந்நேரம் இது என்பனவாகவே அமையும். நினைவுணர்வுள்ளபோது எண்ணங்களை முற்றாக நிறுத்துவது சாத்தியமாகி விட்டால் இடம், நேரம் எனும் இத்தகவல்கள் அறிவுணர்வுக்கு எட்டுமா என்பது சந்தேகமே.

காதல் மோகம் அல்லது பக்திப் பரவசம் என உணர்ச்சிவசப்பட்டவர்களின் மன அலைகள் மடைதிறந்து பெருகும் வெள்ளம் போல ஆகிவிடலாம். இதற்கான அணை அமைவதற்கென மனவளம் பெறுவது அவசியமாகிறது.

**பய, பக்தியுடன் தியானம் செய்வதை 'தன்னை தானம் செய்தல்' அல்லது இறைவனிடம் சரணடைதல் என்பதாக இன்னொரு சிந்தனையாளர் குறிப்பிட்டுள்ளார். சரணடையும் எண்ணம் தன்னை அர்ப்பணிப்பதாகவேயன்றி சலுகைகளை எதிர்பார்ப்பதாக அல்ல.**

தூக்கம் உடலுக்கு ஓய்வு தருவது. மனமும் அதை அடைவதாகத் தோன்றினாலும், நினைவுணர்க்கில்லாத (*Sub-Conscious*)தாக அப்போது மனம் இயங்குவதானால் எண்ண அலைகளுக்கு ஓய்வு ஏது? தூக்கம் கலைந்ததும் உஷாராகும் நினைவுணர்வை விழிப்புணர்வு (*Awakefull*) நிலையிலானது எனலாம். சோம்பல் அல்லது சலிப்பு (*Buredom*) அடையும் வேளைகளில் அது உஷாரற்று விடுகிறது. எதைத் தவிர்க்கவென உந்தும் (*Motivation*) உத்தேசம் மனம் அடைவதற்கு எமது கவனம் உன்னிப்பாக வேண்டும்.

கண்ணும் கருத்துமாக எதையும் மேற்கொள்ள வேண்டும் என்றவாறு இதைச் சொல்வார்கள். கருத்துமாக என்பது எண்ணங்கள் ஒருமுகமாக, சீரானதாக லயித்திருப்பதைக் குறிப்பது. சொற்பொழிவைக் கேட்பவர்கள் செவிகளைத் 'தீட்டி'விட வேண்டும் என்பதும் இது பற்றியே உரையில் பேசப்படுவது எமது அறிவில் உள்ளதுதான் அல்லது முரணாகிறது என எண்ணுவதால் கவனம் இழக்கப்படலாம். அதைத் தவிர்க்க, எமது அறிவிலுள்ளதை அப்போது செல்லாததாகக் (*Negate*) கருத வேண்டுமென சிந்தனையாளர் J.கிருஷ்ணமூர்த்தி வலியுறுத்தியுள்ளார்.

பய, பக்தியுடன் தியானம் செய்வதை 'தன்னை தானம் செய்தல்' அல்லது இறைவனிடம் சரணடைதல் என்பதாக இன்னொரு சிந்தனையாளர் குறிப்பிட்டுள்ளார். சரணடையும் எண்ணம் தன்னை அர்ப்பணிப்பதாகவேயன்றி சலுகைகளை எதிர்பார்ப்பதாக அல்ல. நல்வாழ்வு, சொர்க்கவாசம் என்று எதிர்பார்ப்பது உடன்படிக்கை நோக்கமாகிறது.

எண்ணங்களை ஒருநிலைப்படுத்துவதான தியானம் தரும் மனஅமைதி 24x7 மணி நேரமும் நிலைத்துவிட முடியுமா? எண்ணங்களை நிறுத்துவதான மௌன விரதம் அனுஷ்டிப்பவர்களின் மனஉறுதிக்கான இச்சையும், அதை நிலைநாட்டும் உத்தேசமும் எண்ணங்களாக அமைவனவே.



ஆழ்ந்த சுவாசம் மூலம் மனம் அமைதியடைவது எண்ணங்கள். அதில் ஒருமுகமாக, சீராக லயித்திருப்பதால் எண்ணங்கள் தாவிக்கொண்டு போனால் மன அலைகள் சீர்குலைகின்றன. ஒருமுகமான எண்ணங்கள் மிகையானாலும் மனஅலைகளின் தாக்கம் பெருமூச்சுவிடச் செய்கிறது. மனஅலைகள் சுழல்படுவதை தவிர்க்க, மனச்சுமை குறையென இது உதவுவதாக தெரிகிறது.

இந்தவிதமாகப் பெறும் மனஅமைதி தற்காலிகமானதே, நிரந்தரமான மனஅமைதி பெற மனவளம் முன்னேற்றமடைய வேண்டும். நோயைத் தடுப்பது, குணப்படுத்துவதிலும் மேலானது. மனவெண்ணங்கள் ஏன் சீர்குலைகின்றன என்பது பற்றி அறியாது சீர்திருத்த எத்தனிப்பதும் இவ்வாறுதான் அமையும். மனவளம் பாதுகாக்கப்பட வேண்டிய அறிவைப் பெறுவது இதற்கு அவசியமே.

நினைவுணர்வு நிலைகள் மூளையில் பிறக்கும் மின்னலைகள் (*EEG*) மூலம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. மனமறிய (நினைவுணர்வுக்குள்ளான) பொய்யுரைக்கும்போது, இவ்வலைகள் சீற்று விடுவதையும் காணலாம். இது அப்பட்டமாக நிகழ்வதில்லை என்பதால், பொய் பேசுவதை நிரூபிக்கவென நீதி வழக்குகளில் ஏற்பதற்கில்லை.

எண்ணங்கள் எழுவது மூளைக்கலங்கள் இரசாயனத் தாக்கங்களின் ஈடுபாடு என்றவாறும், அவை குளறுபடியடைந்தால் எண்ணங்கள் சீற்றுவிடும் எனவும் மனநோய் வாய்ப்பட்டவர்களில் உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

எண்ணங்களை மனஅலைகளாகக் கருதுவது ஒரு உவமையாகவே. அமைதியான நதியில் ஓடும் ஓடம் அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும் என்பதைப்போல, மனம் ஆட்டம் கொள்வது மன அலைகள் சீர்குலைந்து வெள்ளமாவதால் என்றாகிறது.

குரல் எழுவது ஒலி எண் (*Vocal Cord*) அதிர்வுகள் மூலமே. அவை ஒவ்வொருவருக்கும் வித்தியாசப்படுவதால் குரலில் வேற்றுமை ஏற்படுகிறது. எண்ணங்கள் அதிர்வுகளைத் தருவதாக கருதுவது நம்பிக்கையளவில்தான். அவை யதார்த்தமாயின் (எண்ணமாக) உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும்பொழுது அதிர்வுகளாக ஏற்பது எவையாகும்?

மனவுணர்ச்சிகளும் எண்ணங்களை உள்ளடக்குவனவே. இருநபர்களுக்கிடையில் எழும் எண்ணங்களின் இணக்கம் திருப்தியும், முரண்பாடு அதிருப்தியும் சாதகமாக / பாதகமாக விளைவதே, நேர்/எதிர் சக்தி வெளியேற்றம் எனக்குறிப்பிடுவதும் உவமைகளாகவே. திருப்தியடைதல் மனஅலைகளை சீராகவும், அதிருப்தியடைதல் அவற்றை சீர்குலைக்கவும் வழிவிடும் எனவும் கூறலாம்.

எண்ணங்களில் தெளிவு காண்பது ஒரு சவாலாக அமையலாம். ஐயமாகவுள்ள எண்ணங்கள் மனதில் ஊசலாடும்போது மனஅலைச்சலுக்குள்ளாகிறோம். இதைத் தவிர்க்குமுகமாக நம்பிக்கை அமைவது நதியின் அலைவீச்சை தணிக்கவோ அணை கட்டுவது போலாகும்.

நம்பிக்கைகளின் விளைவு இருவிதமாகலாம். அவை சௌகரியம் தரவுள்ளதால் புத்துணர்ச்சியும், அசௌகரியம் தரக்கூடியதாயின் வெறுப்புணர்ச்சியும் அளிப்பதை நேர்/எதிர்விளைவுகளாக உவமை கூறலாம். நம்பிக்கை வீண்போனால் விளையும் உணர்ச்சிப் பெருக்கம் அணை மீறிய வெள்ளப்பெருக்கைப்போல் ஆகிவிடலாம்.

நதியை திசை திருப்ப, அதன்வேகம் தணிய, அதன் சக்தியை மின்சக்தியாக மாற்றவென பலவிதங்களில் அணை கட்டப்படுகிறது. அணைக்கட்டு இல்லாவிடில் நதி கரைபுரண்டு விடலாம். தரமாக அமையாத அணைக்கட்டை நதி மீறியும்/ தகர்த்து விடலாம். மனஅலைகளின் கட்டுக்கோப்பிற்கு மனவளம் தரமாக அமைவது அவசியம். அதுவே நிரந்தர மனஅமைதிக்கான தீர்வு.

மனஅலைச்சலுக்கே ஓய்வு தேடலாம், மனஅலைகளுக்கல்ல.

கந்தசாமி மனோகரன்



சென்ற இதழ் தொடர்ச்சி

கடமைகளை முடித்தபின்னர், உற்றார் உறவினர் சொத்து சுகம் யாவற்றையும் துறந்து காசி நகருக்கு பயணம் செய்து வந்து தமது அந்திம காலத்தினைக் கழிக்கும் வழக்கம் இன்றும் இருக்கின்றது.

உலகின் பல பாகங்களில் வாழும் மக்கள், தாம் வாழும் காலத்தில் ஒரு தடவையேனும் காசிக்குச் செல்வதும், அங்கு நீத்தார் கடன் செய்வதும் பெரும் பேறு என எண்ணும் புண்ணிய பூமி இதுவாகும். இங்கு தினமும் ஐநூறில் இருந்து ஆயிரம் வரையில் இறந்தோரின் பூதவுடல்கள் தகனம் செய்யப் படுவதாகக் கூறப்படுகின்றது. தினமும் இலட்சக்கணக்கானோர் பல சிரமங்களையும் பொருட்படுத்தாது சென்று தரிசிக்கும் இந்த நகரம் பல ஆச்சரியமான வரலாற்றுச் சம்பவங்களைக் கொண்டது. இந்த நகரத்தில்,

**'காக்கை கத்தாது ; கருடன் பறக்காது: பூ மணக்காது; பிணம் வீசாது; பல்லி சொல்லாது; மாடு முட்டாது.'**

-என்பது போன்ற பல விநோதமானதும், விசித்திரமானதுமான கதைகள் செவிவழிச் செய்தியாக வழங்கி வருகின்றன. இதனை ஒட்டிய புராதன வரலாறுகளுடன் கூடிய செய்திகளும் மேலதிகமான விபரங்களும் காசிபுராணத்தில் கூறப்படுவதை நாம் அறிவோம்.

# ஆச்சரியமான வரலாற்றுச் சம்பவங்கள் நிறைந்த புண்ணிய பூமி காசி!

வழிபாடுகள் முடிந்து நாம் புறப்பட்ட போது திடீரென வருணபகவான் கருணை பொழிந்தார். மழைக்கு ஒதுங்கியபின் நீண்ட நேரம் உழைத்த கால்கள் கெஞ்ச, மகிழுந்துகள் மூலம் ஜாகைக்குச் செல்லச் சிறிது தாமதமாயிற்று. எமது விடுதியில் சாயிபகவான் பற்றிய நூல்களையும், சாயி நினைவுச் சின்னங்களையும் வாங்கமுடிந்தது. ஒரு பெண்மணி தாம் வாங்கியது மட்டும் அன்றி மற்றவர்களும் சாயி பற்றிய நூல்களை வாங்கிப் படிக்க வழிசெய்தமை அவரது பரந்த மனத்தைப் பாராட்ட வைத்தது. எம்மில் சில தீவிர சாயி பக்தர்கள் அதி காலையில் எழுந்து மீண்டும் ஸ்ரீ சாயி தரிசனம் செய்து திரும்பிய பின்னர் யாவரும் திரும்பவும் பேருந்து மூலம் மும்பாய் சென்று, போஜனத்தின் பின்னர் விமானம் மூலம் 1590 கி.மீ. கிழக்கே, உத்தரப் பிரதேசத்தில் உள்ள புனித ஸ்தலமான காசிக்குப் பயணமானோம்.

காசி எனவும் வாரணாசி எனவும் பெயர் கொண்ட பனாரஸ் நகரம் பாரத நாட்டு மக்கள் போற்றும் முக்தித் தலங்கள் ஏழில் ஒன்றாகப் போற்றப்படுகின்றது. காசி என்றால் ஒளிமயம் - வெளிச்சக்குவியல் என்று பொருள் கூறப்படும். ஐம்பத்து நான்கு சிவன் கோவில்களும், ஐம்பத்து நான்கு சக்தி கோவில்களும் இங்கு அமைந்திருந்ததாகவும், பெரும் சக்தி வாய்ந்த எந்திரங்களால் ஸ்தாபனமான பெரும் வெளிச்சத் தூண், சிவபிரானின் அடி முடி தேடியபோது உருவாக்கப்பட்டதாகவும் புராணங்களில் கூறப்படுகின்றது. காசிக்கு வடக்கே வரணாசி ஆறும், தெற்கே அசி என்ற ஆறும் கங்கையில் சங்கமம் ஆவதால் வாரணாசி என்றும் பெயர் பூண்டுள்ளது. பண்டு ஒரு காலம் பனாரன் எனும் அரசனால் புதுப்பிக்கப் பட்டமையால் பனாரஸ் எனவும் பெயர் பெற்றது. மேலும் இந்நகரம் ஆனந்தவனம், பூலோக கைலாயம், மகாமயானம், அவிமுக்தம் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றது. வைணவ மதப்பிரிவினர் காசித்தலத்தை பிந்துமாதவ சேத்திரம் என்று குறிப்பிடும் வழக்கம் உண்டு.

பாரதபூமியில் உள்ள பன்னிரண்டு ஜோதிர்லிங்க

**காக்கை கத்தாது; கருடன் பறக்காது; பூ மணக்காது பிணம் வீசாது; பல்லி சொல்லாது; மாடு முட்டாது**

தலங்களில் காசி விஸ்வநாதர் தலமே முதன்மையானது என்பது ஐதீகம். காலத்துக்குக் காலம் இடம் பெற்ற பல ஆக்கிரமிப்புகளால் உருக்குலைந்திருந்த காசிவிஸ்வநாதர் ஆலயம் இந்தூர் சமஸ்தானத்து அரசி அகல்யாபாய் ஹோல்கர் மூலம் 1777 ஆம் ஆண்டில் புதிதாக எழுப்பப் பட்டது. சிதம்பர நடராஜர் ஆலயத்தில் காணப்படுவது போன்று, பொற்றகடு வேயப்பட்ட கோபுர அமைப்பு மகாராஜா ரஞ்சித் சிங்கால் வேயப்பட்டது. தொடர்ந்து பலராலும் பெருப்பிக்கப்பட்டு, யாத்திரைத்தலமாக விருத்தியடைந்த காசி நகரத்தில் கங்கை நதிக்கு மேற்கே அறுபத்து நான்கு தீர்த்தக் கட்டங்கள் பலரால் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் பக்தர்கள் ஒரே நாளில் ஐந்து கட்டங்களில் நீராடுவதனை பஞ்சதீர்த்த யாத்திரை என்பர். பத்து மூர்த்திகளின் தரிசனம் பெறுவதனை நித்ய யாத்திரை என்பர். மணிகர்ணிகா கட்டத்திலும், ஹரிச்சந்திரா கட்டத்திலும் பிதிர் கடன் செய்பவர்கள் பூத உடல்களுடன் தகனம் செய்ய வரிசையில் காத்திருப்பதனைக் காண முடிந்தது. சைவசமயத்தைச் சார்ந்தவர்கள் காசியில் இறக்க முக்தி எனும் நம்பிக்கையினால் தமது உலகியல்



நீண்ட விமானப் பயணத்தின் பின் இரயில் நிலையத்திற்கு அருகிலமைந்த எமது தங்குமிடம் சென்று சிரமபரிகாரம் செய்த பின்னர், கங்கா தேவிக்கு, மாலையில் செய்யப்படும் தீப ஆராதனையைத் தரிசிக்கும் ஒழுங்கு எமது முகவரால் செய்யப்பட்டிருந்தது. அதன்படியே எமது வழிகாட்டியால் ஏற்கனவே வாடகைக்கு அமர்த்தப்பட்ட இரு சிறிய படகுகளில் அமர்ந்து, யாவரும் கங்கை நதியில் பயணம் செய்தபடி நதிக் கரைக்கு இரு பக்கத்திலுமுள்ள கங்கைநதி தீரத்துக்கே தனித்துவமாக அமைந்த காட்சிகளைக் கண்டு களித்தோம். மாலையில் ஐந்து பெரிய அடுக்குத் தீபங்களைக் கொண்டு நடைபெற்ற கங்கார்த்தியைக் காணக் கண் கோடி வேண்டும்.

**பாரதபூமியில் உள்ள பன்னிரண்டு ஜோதிர்லிங்க தலங்களில் காசி விஸ்வநாதர் தலமே முதன்மையானது என்பது ஐதீகம்.**

யாவரும் கங்காமாதாவுக்கு செய்த ஆரத்தியை மனம் குளிரக் கண்டு கும்பிட்டு வணங்கிய பின் ஏற்பட்ட சாந்த உணர்வுடன் தங்குமிடம் சேர்ந்தோம்.

அடுத்த நாள் எமது குழுவில் பெரும்பாலானோர் பித்ரு பூஜை செய்ய வேண்டி, ஜனசந்தடி அதிகரிக்கும் முன்னர் அதிகாலையில் எழுந்து வழிகாட்டியின் உதவியுடன் வாகனங்களில் கங்கை நதி நோக்கிப் போனார்கள். நீத்தார் கடன் முடிக்க எமது விடுதியில் இருந்து ஏறக்குறைய ஐந்து மைல் தூரம் ஆட்டோவில் போகவேண்டி இருந்தது. வழிகாட்டியின் உதவியுடன் எமது காலணிகளையும் கைத்தொலைபேசி உட்பட மற்றைய உடமைகளையும், தலைக்கு இவ்வளவு கட்டணம் எனக் கொடுத்து, பாதுகாவலாக கட்டணம் வசூலிக்கும் இடத்தில் வைத்துவிட்டு குறுகிய சந்துகளின் வழியாக நதிக்கு நடக்கவேண்டி இருந்தது.

*(23ம் பக்கம் பார்க்க)*

மறவன்புலவு க. சச்சிதானந்தன்

# அடிமைத் தளைகளை அகற்ற உறுதிபூணும் நாள்

இலங்கையில் யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைமை இடமாகக் கொண்டு அமைந்த சைவத்தமிழ் அரசு.

400 ஆண்டுகளாகச் சங்கிலித் தொடர்ச்சியாக அமைந்த அரசு.

தென்மேற்கே வாய்க்கால் ஆறு அதன் எல்லை.

தென் கிழக்கே கொம்புக்கல் ஆறு அதன் எல்லை. சில காலங்களில் மாணிக்கக் கங்கை வரை அதன் எல்லை விரிந்து இருந்ததாம்.

அந்த 400 ஆண்டுகளில் தமிழீழ அரசின் ஆட்சியில் சைவ சமயமும் தமிழ் மொழியும் மட்டுமே பண்பாட்டு நெறிகள்.

புத்த சமயமும் சிங்கள மொழியும் தெற்கே கண்டியைத் தலைநகராகக் கொண்ட ஆட்சியிலும் தென்மேற்கே கோட்டையை தலைநகராக கொண்ட ஆட்சியிலும் சமகாலத்தில் விளங்கின.

மேலை நாட்டு மொழிகள், சமயங்கள், அரபு நாட்டு மொழிகள், சமயங்கள், அக்காலங்களில் இலங்கையில் இல்லை.

நல்லூரைத் தலைநகராகக் கொண்ட சைவத்தமிழ் அரசு 400 ஆண்டுகளுக்கு முன்பு வீழ்ந்தது.

கலியுகம் 4720 சகாப்தம் 1541 திருவள்ளுவராண்டு 1650

விபவ ஆண்டு 27 வைகாசி புதன்கிழமை (05.06.1619) தேய்பிறை எட்டாம் நாள் அட்டமி பூரட்டாதி நட்சத்திரம் அன்று சைவத்தமிழ் அரசு வீழ்ந்தது.

வீழ்த்தியவர்கள் மேலைநாட்டுப் போர்த்துக்கேயர். 1617இல் கோவாவில் தமிழீழ அரசை வீழ்த்துமாறு போர்த்துக்கேய ஆளுநர் ஆணையிட்டார்.

அக்காலத் தமிழீழ அரசன் சங்கிலியன். போர்த்துக்கேயர் திறை கொடுக்குமாறு ஆணைகளை அனுப்பினர். நிறைவேற்றச் சங்கிலியன் மறுத்தான்.

போர்த்துக்கேயரின் படையெடுப்புகளைச் சந்திக்கத் தமிழகப் பழவேற்காட்டில் முகாமிட்டிருந்த ஒல்லாந்தர்களையும் தஞ்சை நாயக்கர் படைகளையும் மலையாளக்குஞ்சலி வீரர்களின் கடற்படையையும் துணைக்கு அழைத்தான். கண்டி அரசுக்கும் செய்தி அனுப்பினான்.

1619 பங்குனியில் பிலிப்பு டி ஒலிவேரா தலைமையில் தெற்கே கொழும்பிலிருந்து நூறு போர்த்துக்கேய வீரரும் சில ஆயிரம் சிங்களக் கூலிப்படைகளும் இணைந்த படை ஒன்று வடக்கு நோக்கிக் கிளம்பியது.

தமிழகம் நாகப்பட்டினத்திலிருந்து போர்த்துக்கேயக் கடற்படை கப்பல்கள் யாழ்ப்பாணம் நோக்கிக் கிளம்பின.

1619 சித்திரையில் பூநகரி வந்த போத்துக்கேயப் படைகள் கோதீவுக் கடலைக் கடக்க மீனவர்களைப் பயன்படுத்தினர்.

1619 சித்திரைக் கடைசியில் குடாநாட்டுக்குள் போத்துக்கேயப் படைகள் நுழைந்தன.

கலியுகம் 4720, சகாப்தம் 1541, திருவள்ளுவராண்டு 1650, விபவ ஆண்டு, வைகாசி 27ஆம் நாள், புதன்கிழமை பூரட்டாதி நாளில் (05.06.1619) வண்ணார்பண்ணையில் நடந்த பெரும் போரில் சங்கிலியன் படை தோற்றது. சைவத் தமிழ்ப் படை தோற்றது.

பிலிப்பு டி ஒலிவேராவின் கத்தோலிக்கப் போர்த்துக்கேயப் படை வென்றது.

நல்லூரைத் தலைமையகமாகக் கொண்ட தமிழீழ அரசு வீழ்ந்தது.





சைவத் தமிழ் அரசன் சங்கிலியனும் பல்லாயிரம் சைவத் தமிழ்ப் படை வீரரும் கத்தோலிக்கப் போர்த்துக்கேயப் படையிடம் தோற்று மாவீரராகிய நாள், அந்த நாள்.

அந்த நாளின் 400ஆவது ஆண்டு நிறைவு நாள், அதே திதி, இந்த ஆண்டு கலியுகம் 5120, சகாப்தம் 1941, திருவள்ளுவராண்டு 2050, விகாரி ஆண்டு, வைகாசி 13, திங்கள்கிழமை, தேய்பிறை எட்டாம் நாள் அட்டமி, சதய நாளன்று (27.05.2019) வருகிறது.

அந்நாள் இலங்கையின் வரலாற்று நாள். சைவத் தமிழரின் இதயத் துடிப்பு நாள்.

மன்னன் சங்கிலியனையும் அவனோடு உயிர்துறந்த தமிழர் படையினரையும் நினைவுகொள்ளும் நாள், 400 ஆவது ஆண்டு நினைவு நாள்.

கீரிமலையில் திரள்வோம், பாலியாற்றில் திரள்வோம். பாலாவியில் திரள்வோம், மோதரகம் ஆற்றில் திரள்வோம். நந்திக் கடலில் திரள்வோம். கொட்டியாற்றில் திரள்வோம். கல்லடியில் திரள்வோம். கொம்புக்கல் ஆற்றில் திரள்வோம். வாய்க்கால் ஆற்றில் திரள்வோம். சங்கிலிய மன்னனுக்கும் படைவீரர்களுக்கும் நீத்தார் கடன் ஆற்றுவோம்.

இந்த ஆனி தொடக்கம் அடுத்த ஆனி வரை ஓராண்டு காலத்துக்குச் சங்கிலியன் 400வது ஆண்டு நினைவு நிகழ்வுகளை இலங்கை முழுவதும் நடத்துவோம். புலம்பெயர் தமிழர்களிடையே நடத்துவோம்.

ஊர்கள் தோறும் சங்கிலியன் சிலைகள் நிறுவுவோம்.

வரலாற்றுப் பாடப் புத்தகத்தில் அனைத்து வகுப்புகளுக்கும் சங்கிலியன் வரலாறு என்ற தலைப்பில் ஒரு பகுதி சேர்ப்போம்.

சங்கிலியன் நாடகம் ஓரங்க நாடகமாக நாடகக் குழுக்களிகளிடையே போட்டி நடத்துவோம்.

சங்கிலியன் கதையில் ஏதாவது ஒரு பகுதியைப் பரதநாட்டியமாக அமைக்கும் போட்டி நடத்துவோம்.

சங்கிலியன் வரலாற்றைத் தமிழிசைப் பாடல்களாக்கி இசைக்கும் போட்டி நடத்துவோம்.

சங்கிலியன் வரலாறு தொடர்பாக மாணவர்களிடையே பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி எனப் போட்டிகள் நடத்துவோம்.

வைகாசித் தேய்பிறை எட்டாம் நாள் மன்னன் சங்கிலியன் மற்றும் தமிழ்ப் படை வீரருக்கு நினைவு நாள். ஆண்டுதோறும் நினைவுகூர்ந்து அடிமைத் தளைகளை அகற்ற உறுதிபூணும் நாள். ●

---

***வட இந்திய சுற்றுப்பயணம்: தொடர்ச்சி....***

முன்பே பேசியபடி தீட்சிதர்களிடம் தட்சணைகொடுத்து நீத்தார் கடன் முடித்துத் தாம் விரும்பியபடியே தானம் கொடுத்து கங்கையில் நீராடும் வாய்ப்பும் கிடைத்தது.

காசி விஸ்வநாதரின் தரிசனமும், காசி விசாலாட்சியின் தரிசனமும் பெற்று எமது பிறவிப்பயன் கிட்டியது போன்ற மனத்திருப்தி கொண்டோம். பின்னர் கால பைரவரின் கோவிலுக்கும் சென்று தரிசித்து, ஆசீர்வாதமும் பெற்ற பின்னர், வந்தது போலவே குறுகிய சந்துகளில் நடந்து தங்குமிடம் சேர்ந்தோம். பார்க்கும் இடம் எல்லாம் துப்பாக்கி ஏந்திய காவலர்கள் நின்றிருந்தார்கள். பாதுகாப்புக் கருதி பிரதானமான பகுதியில் அவ்விதமான ஏற்பாடு அரசினால் செய்யப்பட்டிருகின்றது என அறிந்தோம். வருகை தந்து கொண்டிருக்கும் பக்தர்களின் நெருக்கடியால் எல்லா வழிபாடுகளும் விரைந்து விரைந்து செய்யவேண்டிய நிர்ப்பந்தம், இருப்பினும் காசிப்பதியில் எழுந்தருளியுள்ள எம்பெருமானையும் எம்பிராட்டியையும் நெஞ்சார, மனமுருகி வணங்கும் பேறு பெறுவதற்கு பெரும் தவம் செய்ய வேண்டுமன்றோ...

தேவரும் யாவரும் பூஜித்த விஸ்வநாதரை நான்கு பக்கங்களில் இருந்தும் தரிசிக்கலாம். வெள்ளித் தகடு கொண்ட பள்ளத்தில் தரிசனம் தரும் பழமையும் பெருமையும் வாய்ந்த லிங்கத்தினை பூஜை நேரம் தவிர்ந்த மற்றைய வேளைகளில் பக்தர்கள் தமது கைகளால் தொட்டு வணங்கவும், அபிஷேகம் செய்யவும் புஷ்பம் சாத்தவும் இங்கு சாத்தியப் படும். ஜன நெருக்கத்தின் காரணமாக நடையும் ஓட்டமுமாக வரிசை வரிசையாகச் சென்று வணங்க வேண்டி இருக்கின்றது. அருகே அன்ன பூரணி ஆலயமும் எதிரே சத்தியநாராயணர் ஆலயமும் உண்டு. விஸ்வநாதர் ஆலயத்திற்கும் அன்னபூரணி ஆலயத்திற்கும் நடுவே பழமையான ஆலமரம் உண்டு. அதன் நிழலில் சிறிது அமர்ந்து காண்பதற்கு அரிய இறைவனை மானசீகமாகப் போற்றவும் சிறு பொழுது கிட்டியது. அன்னபூரணி ஆலயத்திற்கு அருகே துண்டிராஜ விநாயகரின் சந்நிதி அமைந்துள்ளது. ஆவலுடன் எதிர்பார்த்திருந்த எமது தரிசனங்கள் நிறைவேறியதும் விபூதி, குங்கும பிரசாதங்களைப் பெற்றுக் கொண்டு மனம் நிறைந்த பெரும் திருப்தியுடன் விடுதி சென்று களைப்பாறினோம்.

ஜனநெருக்கடியான குறுகிய சந்துக்கள் நிறைந்த பனாரஸ் நகர கடைத் தெருக்களில் அவரவர்கள் விரும்பிய பொருட்களை வாங்கும் வாய்ப்பும் அன்றைய தினம் கிடைத்தது. மற்றையோரை விட்டுத் தனியே சென்ற எமக்கு, காலமான கவிஞர் பொன்னண்ணாவின் புதல்வர் வேந்தன் அவர்கள், படகில் சென்று கங்காரத்தியில் கலந்து கொள்ளவும், ஆலயங்களைத் தரிசனம் செய்யவும் பெரும் துணையாக வந்ததமை ஈசன் செயல் என்றுதான் கூற வேண்டும். அவர் பாசத்தை நெஞ்சில் சுமந்து கங்கையின் தீர்த்தம் எடுத்துக் கொண்டு, தமது தந்தையின் பிதிர் கடன் தீர்ப்பதற்கு இராமேசுவரம் செல்ல வந்திருந்தார். இராமேஸ்வரத்தில் மண் எடுத்து வந்து கங்கையில் கரைத்த பின்னர் கங்கா ஜலம் எடுத்துக் கொண்டு திரும்பவும் இராமேஸ்வரம் சென்று பிதிர்கடன் செய்யும் வழக்கமும் உண்டு.

அடுத்த நாள் காலை உணவின் பின்னர் 122 கி.மீ. தொலைவில் உத்தரப் பிரதேசத்திலேயே அமைந்துள்ள அலகாபாத் நகரம் நோக்கி எமது பயணம் தொடர்ந்தது. பயணிக்கும் போது வழியில் மாநிலங்களை இணைக்கும் நெடும் சாலைகள் இந்திய அரசினரின் முயற்சியால் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருவதனைப் பார்க்க முடிந்தது. எமது பேருந்து, கங்கை நதியின் வேகமான பிரவாகத்திற்குப் போட்டியாகச் சென்று திரிவேணி சங்கமத்தின் அருகே நின்றது. கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று நதிகளும் கலக்கும் தலமே திரிவேணி சங்கமம் எனக் கூறப்படும். கங்கை நீர் வெண்மையாகவும், யமுனை நீர் கருமையாகவும் காணப்பட்டது. சரஸ்வதி நதி நிலத்தின் கீழாக ஓடிக் கலப்பதாகக் கூறப்படுகின்றது. வேகமாகப் பாயும் திரிவேணி சங்கமத்தில் பூஜை செய்வதற்கு வசதியான இடத்தில் எமது பேருந்து நிறுத்தப்பட்டது. எப்படி நீராடுவோம், எங்கு நீராடுவோம் என்று மனத்தில் எழுந்த வினாக்களுடன் யாவரும் இறங்கி நதியை நோக்கி நடந்தோம். *(அடுத்த இதழில் பயணம் முடியும்.)*●



தொடரும் தமிழின அழிப்பு!
சிங்கள பௌத்த பேரினவாதத்தின்
(சு)தந்திர தினம்
SRI LANKA'S INDEPENDENCE DAY BLACK DAY FOR TAMILS.
FREE TAMIL EELAM.
ஆர்ப்பாட்டம்
04 Feb 2019
10 AM - 12.AM
Sri Lanka High Commission
13 Hyde Park Gardens, London W2 2LU
Nearest station: Lancaster Gate
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
020 3371 9313, 07496 108 923 www.tccuk.org

VIMBAM (London) Estd: 2004

10TH INTERNATIONAL

# TAMIL SHORT FILM FESTIVAL - 2019

## 10ஆவது சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட விழா–2019

- குறுந்திரைப்படங்கள் யாவும் 20 நிமிடங்களுக்குக் குறைவாக இருத்தல் வரவேற்கத்தக்கது.
- ஒருவர் எத்தனை படங்களும் அனுப்பலாம்.
- விண்ணப்பக் கட்டணம் எதுவும் செலுத்தவேண்டியதில்லை.
- பிரித்தானியாவில் ஒளிபரப்பாகும் எந்தவொரு தொலைக்காட்சிகளிலும் இவை காட்சிப்படுத்தப்பட்டிருக்கக்கூடாது.
- தொடர்பு விபரங்களுடன், மேற்கண்ட நிபந்தனைகளை ஏற்றுக்கொண்ட ஒப்புதல் கடிதத்துடன் விண்ணப்பதாரியின் புகைப்படமும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி 1 மார்ச் 2019 க்கு முன்பாக படைப்புகளை கீழ்க்காணும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவையுங்கள்.**

10 VIMBAM

கவிஞரும், எழுத்தாளரும், திரைப்பட விமர்சகருமான

**திரு. மு. புஷ்பராஜன்**

அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவிருக்கின்றார்.



அநுசரணை

வெற்றிமணி

அரங்கம்

புதினம்

தாய்வீடு

Contact: VIMBAM, 4 Burges Road, East Ham, London E6 2BH, UK
★ E-mail: vimbam@vimbam.co.uk or kkrajah2012@gmail.com
TEL K K Rajah: + (44) 07736 908 421, Santhan: + (44) 07883 573 337
Yamuna Rajendran: + (44) 07479 942 681, Kokularupan: + (44) 07763 006 243

# அன்பான அம்மாவுக்கு அஞ்சலி



தோற்றம்
26.11.1933

மறைவு
06.01.2019

## திருமதி. சறோஜினிதேவி கனகரத்தினம்
### (அரியாலை–லண்டன்)

யாழ்ப்பாணம் அரியாலை ஊரில் பெரிய குடும்பத்தின் மூத்த பிள்ளையாகப் பிறந்த திருமதி.சறோஜினிதேவி அவர்கள் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் கல்வி கற்று பின் தனது 16ஆவது வயதிலேயே டொக்டர். கனகரத்தினம் அவர்களைத் திருமணம் செய்து

பாலேந்திரா (நாடக நெறியாளர்), அமரர் லலிதா, மல்லிகா, ரவீந்திரா, சுரேந்திரா ஆகிய 5 பிள்ளைகளைப் பெற்றெடுத்து, அன்பான, பண்பான பிள்ளைகளாக வளர்த்து ஆளாக்கினார்.

சறோஜினிதேவி அவர்கள் லண்டனுக்கு புலம் பெயர்ந்து கடந்த 21 வருடங்களாக லண்டனில் வசித்து வந்தார்.

லண்டனில் சுதந்திரமான வாழ்க்கையை வாழ்ந்து வந்த இவர் இறை பக்தி மிகுந்தவராகவும் தமிழ் இலக்கியங்களில் நல்ல ஆளுமை உள்ளவராகவும் திகழ்ந்தார். புத்தகங்கள் வாசிப்பதிலும் இசை கேட்பதிலும் நல்ல ஈடுபாடு கொண்டவர். நல்ல ஞாபக சக்தி உள்ளவராகவும் துணிச்சலான பெண்மணியாகவும் இருந்த சறோஜினிதேவி ஜனவரி 6ஆம் திகதி தனது 85ஆவது வயதில் இறைவனடி எய்தினார். அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

# LONDON TAMIL LITERARY ASSOCIATION

No.09-2/1 Nelson Place, Colombo 06. Sri Lanka
TP. 011 2364124, Mob. 0718676482, 0771 877 999, editorthayakaoli@gmail.com

**இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வழங்கும்**

## வவுனியூர் இரா.உதயணன் இலக்கிய விருது - 2018

### விருது பெறுவோர்

| | |
|---|---|
| உயர் இலக்கிய விருது | : அருணா செல்லத்துரை |
| சிறந்த ஊடகவியலாளர் விருது | : பொ.மாணிக்கவாசகம் |
| இனநல்லுறவு இலக்கிய விருது | : உபாலி லீலரத்ன |

### படைப்பிலக்கிய விருதுகள்:

| | |
|---|---|
| நாவல் | : "யாவரும் கேளீர்" சிவ ஆரூரன் |
| சிறுகதை | : "அமேசன் காட்டில் அழகன் பூசாரி" - கலைக்கோட்டன் அ.இருதயநாதன் |
| சிறுவன் இலக்கியம் | : "சிறுவன் கதைகள்" முத்து இராதாக்கிருஸ்ணன் |
| காவியம் | : "விளைச்சல்" (விஷேட விருது) செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன் |
| அயலகப்படைப்பு | : "முத்தன் பள்ளம்" (நாவல்) - அண்டனூர் சுரா "இலங்கையில் தமிழர் இறைமை" (கட்டுரை) - கலாநிதி. சந்திரசேகரன் பரமலிங்கம் |
| தமிழ் வளர்ச்சி இலக்கியம் | : "நூல் தேட்டம்" என் செல்வராஜா |

### வாழ்நாள் சாதனையாளர் விருது

செ. குணரத்தினம் (இலக்கியத்துறை) | செ.அந்தனி ஜீவா (இலக்கியத்துறை)
சு.துரைசிங்கம் (இலக்கியத்துறை) | கலைஞர் கலைச்செல்வன் (நாடகத்துறை)

**குறிப்பு: விருது வழங்கும் விழா பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.**

# ஊழல் ஆட்சி நடத்தும் அதிமுக

# பிரதமர் மோடி கட்சியுடன் கூட்டணி!

அரசுப்பள்ளிகளில், இரண்டு மாணவர்கள் தவறு செய்து விட்டால், இருவரையும் எதிரெதிரே நிற்கவைத்து, ஒருவருடைய காதுகளை மற்றவரைப் பிடிக்க வைத்து, இருவரையும் சேர்ந்து தோப்புக்கரணம் போடச் சொல்வார் ஆசிரியர். இருவரும் 'உன்னால நான் கெட்டேன்; என்னால நீ கெட்டேன்' என்று சொல்லிக் கொண்டே தோப்புக்கரணம் போட வேண்டும்.

தமிழகத்தில், அ.தி.மு.க.வும், பி.ஜே.பி.யும் கூட்டணி வைத்தால், நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்பு, இப்படித்தான் நடக்கும். இது, இரு தரப்புக்கும் நன்கு தெரியும். ஆனால், தெரிந்தே இப்படி ஒரு கூட்டணியை அமைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில்தான், இரண்டு ஆளுங்கட்சிகளும் இருக்கின்றன.

திரும்பிய திசையெல்லாம் தமிழகத்தில் பா.ஜ.க. மீது அதிருப்தி நிலவுகிறது. தமிழகத்தை மத்திய அரசு, எப்படியெல்லாம் புறக்கணிக்கிறது என்பதை பள்ளிக்கூட மாணவன் கூட சொல்லி விடுவான். கஜா புயல் நிவாரணமாகத் தமிழக அரசு கோரியது ரூ. 17,610 கோடி. இணக்கமாக இருப்பதால், நிச்சயமாக அள்ளிக் கொடுக்குமென்று எதிர்பார்த்த தமிழக அரசை எள்ளி நகையாடுவது போல, மோடியின் அரசு கிள்ளிக் கொடுத்தது, ரூ.1146 கோடி.

பிஜேபி அரசு பதவியேற்ற பின், கடந்த 2015லிருந்து 2019 வரை, தமிழகத்தில் ஏற்பட்ட புயல், பெருமழை, வெள்ளம் மற்றும் வறட்சி என இயற்கைப் பேரிடர்களுக்காக மத்திய அரசிடம் தமிழகம் கோரியது, ரூ.97,352 கோடி. கஜா புயல் நிவாரணத்தையும் சேர்த்து, மத்திய அரசு கொடுத்துள்ளது, ரூ.5,383 கோடி மட்டுமே.

எதிர்கால வளர்ச்சிக்குத் தேவை என்று, பாரத்மாலா பரியோஜனா திட்டத்தில், சென்னை-சேலம் எட்டு வழிச்சாலைக்கு 10 ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கத் தயாராகவுள்ள மத்திய அரசு, கஜா புயலால் இன்று வீழ்ந்து கிடக்கும் தமிழகத்தைத் தூக்கி நிறுத்த 1,146 கோடியை மட்டும் ஒதுக்குவது என்ன விதமான தேசியம் என்று சமூகவலைதளங்களில் கேட்கிறார்கள் தமிழக இளைஞர்கள்.


ரஜினியை நம்பியது பலன் தரவில்லை. புதுப்புது படங்களுக்கு பூஜை போடும் அவர், புதுக்கட்சி துவக்குவதில் பூஜ்யத்திலேயே நிற்கிறார்.

கமல், கருப்புச்சட்டைக்காரர். அதனால், 'வாஜ்பாய் காலத்து கூட்டணி; பழைய நண்பர்களுக்கு வரவேற்பு' என்றெல்லாம் தி.மு.க.,வுக்கு மோடி நூல் விட்டுப் பார்த்தார்.

ஆனால், சென்னையில் ராகுலை பிரதமர் வேட்பாளர் என்று அறிவித்தாலும், கொல்கத்தாவில் மம்தா முன்னிலையில், அதைப்பற்றி வாயே திறக்காமல் இருந்தாலும், இரு இடங்களிலும் மோடியை வெளுத்து வாங்குவதில் மு.க.ஸ்டாலின் குறையே வைக்கவில்லை. நேர்மையான ஆட்சி என்று மார் தட்டும் மோடி அரசு, ஊழலில் ஊறித் திளைக்கும் அ.தி.மு.க. ஆட்சியை பல விதங்களிலும் காப்பாற்றியதை எளிதில் மறக்க முடியாது என்கிறார்கள் தி.மு.க.வினர்.

ஓ.பன்னீர் செல்வத்தையும், எடப்பாடி பழனிச்சாமியையும் கவர்னர் கை கோத்து வைத்ததும், அ.தி.மு.க. அமைச்சர்களின் மீதான ஊழல் புகார்களைப் பற்றி, ஒன்றுமே தெரியாதது போல, பிஜேபி அரசு அமைதி காப்பதும் நாடாளுமன்ற கூட்டணிக்காகவே என்பது அவர்களின் ஆணித்தரமான குற்றச்சாட்டு.

உடன் பிறப்புகளும் ஒதுங்கி விட, தமிழகத்தில் பிஜேபிக்குச் சவாரிக்குக் கிடைத்ததில் சிறந்த குதிரையாகத் தெரிவது அ.தி.மு.க. மட்டுமே. ஆனால், தமிழக வாக்காளர்களின் மனநிலையை ஆய்வு செய்துள்ள உளவுத்துறையின் அறிக்கைகளும், சமீபத்திய கருத்துக்கணிப்புகளும், இந்த கூட்டணி ஆசைக்கு வேட்டு வைப்பதாகவே உள்ளன.



நிர்வாகச் சீர்கேடு, அளவற்ற லஞ்சம், மாநிலத்தின் உரிமைகளை தங்களது சுயநலத்துக்காக விட்டுக்கொடுப்பது போன்ற காரணங்களால் அ.தி.மு.க. அரசின் மீதும், பெரும்பான்மை வாக்காளர்கள், கடும் கோபத்தில் இருப்பதையே இந்த கருத்துக் கணிப்புகள் வெளிப்படுத்துகின்றன. பிஜேபியுடன் கரம் கோர்த்தால், அடி பலமாக இருக்குமென்பதை உணர்ந்தே, அ.தி.மு.க.,வின் இரண்டாம் கட்டத் தலைவர்களும் அதை வேண்டாமென்கின்றனர். தம்பிதுரை, பிஜேபியை பிரித்து மேய்வதும், இதனால் தான்.

யார் என்ன சொன்னாலும், கூட்டணிக்குத் தயாரில்லை என்று சொல்லுகிற துணிச்சல், இன்றைய அ.தி.மு.க. தலைமைக்குத் துளியும் கிடையாது. பிஜேபி தலைமையுடன் அதிக நெருக்கத்தை ஏற்படுத்துவதில்தான், ஓ.பன்னீர் செல்வத்துக்கும், எடப்பாடி பழனிச்சாமிக்கும் இடையே போட்டி நடந்துகொண்டிருக்கிறது.

கஜா புயலுக்கு உரிய நிவாரணம் கொடுக்காவிட்டாலும், ஜி.எஸ்.டி. பங்கைத் தராவிட்டாலும், உள்ளாட்சிகளுக்குரிய நிதியை மறுத்தாலும் பிஜேபிக்கு எதிராக, இந்த



இரட்டைக்குழல் துப்பாக்கிகள் எதுவுமே வாய் திறக்க மாட்டார்கள். ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, மாநில அரசின் உரிமைகளையும், அ.தி.மு.க. எனும் மாபெரும் இயக்கத்தின் தன்மானத்தையும் மோடியிடம் மொத்தமாய் அடகு வைத்து விட்டதாக எதிர்க்கட்சியினர் மட்டும் குற்றம்சாட்டவில்லை; ஆளும்கட்சியினரும் அதை அறிந்தே வைத்துள்ளனர்.

சேகர் ரெட்டி டைரி விவகாரம், அமைச்சர் விஜய பாஸ்கரிடம் பலகட்ட விசாரணை, தலைமைச் செயலகத்தில் வருமான வரித்துறை சோதனை என்று அவ்வப்போது பூச்சாண்டி காட்டுவதும், அதன் பின் அப்படியே கிடப்பில் போடுவதும் அ.தி.மு.க., ஆட்சியாளர்களைத் தெளிய வைத்து தெளிய வைத்து அடிக்கும் வித்தைதான். பிஜேபியைக் கழட்டிவிட்டு, பா.ம.க., தே.மு.தி.க., கொ.ம.க., மற்றும் புதிய தமிழகம் போன்ற கட்சிகளைச் சேர்த்துப் போட்டியிட்டால் கூட, அதிக இடங்களைப் பிடிக்கலாம் என்பது அ.தி.மு.க. தலைமைக்குத் தெரிந்தாலும், பிஜேபியைக் கழற்றி விடுகிற தைரியம் இப்போதைக்கு இல்லை.

போதாக்குறைக்கு, கோடநாடு மர்ம மரணங்கள் குறித்த வீடியோவும், எடப்பாடி பழனிச்சாமிக்கு, ஏகப்பட்ட சிக்கலை ஏற்படுத்தி விட்டன. ஆக மொத்தத்தில், பிஜேபியுடனான அ.தி.மு.க., கூட்டணி கிட்டத்தட்ட உறுதியாகி விட்டது. நாற்பதில் பாதியை பிஜேபியிடம் கொடுத்து, கூட்டணிக் கட்சிகளுடன் பகிர்ந்து கொள்ளச் சொல்லி விட்டு, மீதி இடங்களில் போட்டியிட அ.தி.மு.க., ஆட்சியாளர்கள் தயாராகி விட்டதாகவே தெரிகிறது.

ஊழல் எதிர்ப்பையே உறுதிமொழியாகச் சொல்லும் பிஜேபியும், ஊழல் குற்றச்சாட்டுகளில் உழன்று கொண்டிருக்கும் அ.தி.மு.க.வும் இணையும் இந்தக் கூட்டணி, தாமரை-இலைத் தண்ணீர் போலத்தான் இருக்குமென்றே அரசியல் விமர்சகர்கள் கணிக்கின்றனர்.

ஒருவேளை அ.தி.மு.க.,வும் கழற்றி விட்டால் என்ன செய்வதென்று நினைத்தாரோ என்னவோ, தமிழகத்தில் யாருடன் கூட்டணி என்று கேட்ட பிஜேபி நிர்வாகிக்கு, 'மக்களுடன் தான் கூட்டணி' என்று பதில் சொன்னார் மோடி. மக்களுடன் கூட்டணி வைப்பதெல்லாம் இருக்கட்டும். முதலில் தமிழக மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முயற்சியுங்கள் மாண்புமிகு பிரதமரே!. ●

# ஹரோ கவுன்சில்

# தைப் பொங்கல் விழா

## பல்லின மக்கள் கூடி மகிழ்ந்த திருநாள்








ஒன்பதாவது ஆண்டாக லண்டன் ஹரோ தமிழ் அமைப்புகள் ஒன்று கூடி, உழவர் திருநாளான தைப்பொங்கல் விழாவை கடந்த 19ம் திகதி ஹரோ கவுன்சில் சேம்பரில் கொண்டாடி மகிழ்ந்தனர். ஹரோ நகரில் வாழும் தமிழர்களின் கலை பண்பாட்டு விழுமியங்களை எடுத்துக்காட்டும் விழாவாக இருந்தாலும் பல்லின மக்களும் கலந்து சிறப்பித்தனர். ஹரோ நகர மேயர், கவுன்சில் லீடர், கவுன்சிலர்கள், பல்வேறு சமூகங்களின் பிரதிநிதிகள் பங்கு கொண்டனர்.

ஹரோ மேயராக பெருமைப்படுத்தப்பட்டவரும், தொழிற்கட்சி கவுன்சிலரும், கலைஞரும், தாயக விடுதலை உணர்வாளருமான ‘லண்டன் பாபா’ சுரேஷ் கிருஷ்ணா தலைமையில் பொங்கல் விழா நிகழ்வுகள் நடைபெற்றன.

ஹரோ தமிழ் பாடசாலை, ஹரோ தமிழ் விளையாட்டு கழகம், ஹரோ முதியோர் நிலையம், ஹரோவிலுள்ள பரதநாட்டிய நிறுவனங்கள் இந்நிகழ்வுகளில் பங்கு கொண்டனர். நடன நிகழ்ச்சிகள் சபையோரை வெகுவாக கவரும் வகையில் இடம் பெற்றன. ஹரோ கவுன்சில் தலைவர் மற்றும் பலரும் உரையாற்ற, அவர்கள் கௌரவிக்கப்பட்டனர். செம்மொழி பாடலுக்கு நடனமாடியது சிறப்பு. பல்லின மக்களும் ரசித்து மகிழ்ந்தனர். இறுதியாக பொங்கல் விருந்து அனைத்து இன மக்கள் வயிற்றையும் நிறைக்க, இனிதே விழாவும் நிறைவு பெற்றது.

லண்டனிலிருந்து தாயகம் வரை புலம் பெயர் தமிழர்களின் அன்புக்குரியவரான ‘லண்டன் பாபா’, ஹரோவில் உள்ள சமூக அமைப்புகளை ஒன்றிணைத்து, மாபெரும் ஹரோ கவுன்சிலில் இப்படியான தமிழர் திருநாளான தைப்பொங்கல் விழாவை நடாத்துவதில் பெரும் பங்கு வகிக்கிறார் என்பதையும், இவருக்குப் பக்கபலமாக இவரது துணைவியாரும், கவுன்சிலருமான சசிகலா நிற்கிறார் என்பதையும் இங்கு மறந்துவிட முடியாது.


















# கண்ணீர் அஞ்சலி



மண்ணில்
27-02-1960

விண்ணில்
09-01-2019

யாழ். துன்னாலை கரவெட்டியைப் பிறப்பிடமாகவும்,
இங்கிலாந்து New Malden-ஐ வசிப்பிடமாகவும் கொண்ட

## திருமதி.பாலநந்தினி சிவாஜி

விண்ணோடு சென்றதால் மறக்க முடியாத உங்கள் நினைவுகள்
கண்ணின் மணியாக எங்கள் எண்ணக்
கனவுகளில் என்றென்றும் வாழ்ந்திடும்
உங்கள் நினைவுகள் என்றும் அழியாது நெஞ்சத்தில் நிறுத்த
வார்த்தைகள் இன்றி வாயடைத்து நிற்கின்றோம்...
உங்கள் ஆத்மா சாந்தி அடைய உமையவனை
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்**

ஈழ விடுதலை உணர்வாளன்



## ஐயாமுத்து அருணாசலம் சிவானந்தம் (வல்வை-லண்டன்)

தமிழீழ தேசத்தின் விடுதலையை நேசித்து, பிரித்தானிய மண்ணில் தாயக விடுதலைக்காக பணியாற்றிய அற்புத மனிதரை நாம் இழந்துவிட்டோம். அமரர் சிவானந்தம் அவர்கள் சுயநலன்களுக்கு அப்பாற்பட்ட ஒரு தனித்துவமான மனிதர். நேர்மையுடன், நெஞ்சுறுதியுடன் மனித நீதிக்காக குரலெழுப்பி வந்தார். தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தி உலக அரங்கில் குரல்கொடுத்து வந்தார். பிரித்தானிய மண்ணில் இடம்பெறும் தாயக நிகழ்வுகளில் நடிகனாக, பேச்சாளனாக தனது வயோதிபத்தையும் பொருட்படுத்தாது அரும்பணியாற்றியுள்ளார்.

அமரர் சிவானந்தம் ஒரு உயரிய தேசப்பற்றாளர். தமிழீழ தாயகத்தில் ஆழமான பாசம் கொண்டவர். தமிழர் தேசம் தன்னாட்சி உரிமை பெற்று சுதந்திர நாடாக உருவாகவேண்டுமென ஆவல் கொண்டவர். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், இயக்கத்தின் கொள்கைகளையும் ஆதரித்தவர். கனிவான பேச்சுடன் அனைவரையும் அரவணைக்கும் பண்பாளர். அன்னார் தமிழீழ தேசத்திற்காக ஆற்றிய அரும்பணிகள் மிகவும் பாராட்டத்தக்கன.

உன்னத இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களை சாவு அழித்து விடுவதில்லை. புலம்பெயர் தேசத்திலும் தாயக மண்ணிலும் அமரர் சிவானந்தம் அவர்களின் பெயர் நீங்காது நிலைத்திருக்கும். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம்.

**தமிழர் ஒருங்கிணைப்புக் குழு**

# கோணேசச் செல்வி



நீங்கள், இனம்-மொழி-மண் மீது தீராப்பற்றுக் கொண்ட திருக்கோணேசச் செல்வி.

மருத்துவம் தோற்ற போது உமை இழந்தோம்.

இனி மருத்துவம் வெல்லும் போது உங்களைத் தேடுவோம் செல்வி அக்கா.

உங்களின் மாணவ விதைகள், உலகெங்கும் வேரூன்றி விருட்சமாய் வானுயர்ந்து நிற்கின்றன.

அறிவின் ஊற்றுக்கண்ணாய்த் திகழும் கல்விச் செல்வத்தை, மானிடர்க்கு அள்ளி வழங்கும் பெரும் பாக்கியம் பெற்ற மாமனிதர் நீங்கள்.

இனமுரணால், தம்பியை இழந்தீர்கள்.

காலக் கொடுமையால் புலம் பெயர்ந்தீர்கள்.

ஆனாலும் 'தலையாய' கோணேசர் பூமி மீதான தீராக் காதல் மட்டும் இறப்புவரை தணியவில்லை.

மண்இழப்பு பற்றிப் பேசும் போது, வெஞ்சினம் கொண்டெழுவீர்களே அக்கா!.

அதில் வெளிப்படும் ஆத்மாவேசம் சத்தியமானது.

மரணத்தை நோக்கிய வாழ்விலும் சலனமில்லை.

இவர் மரணத்தை எண்ணி கலங்கவுமில்லை.

இயற்கை தனக்கு அளித்த வாழ்வினை சிறப்போடு வாழ்ந்தார்.

ஆயினும் கடந்த சில மாதங்கள் நோயின் வலியோடு வாழ்ந்தார்.

'பலனளிக்காத சிகிச்சை தரும் பெரும்வலியைவிட, இயற்கை மரணத்தை ஏற்றுக் கொள்வேன்' என்கிற திடமான முடிவினை மேற்கொண்டார் செல்வி அக்கா.

நீங்கள் மரணத்துள் வாழ்வீர்கள்.

சென்று வாருங்கள்.

நீங்கள் விட்டுச் சென்ற உங்கள் நினைவுகள் என்றும் எம்மோடு பத்திரமாய் இருக்கும்.

உங்கள் 'மானுடம்' பேசும் சீரிய உணர்வுகள், எம் வரலாற்று வேருக்கு நீரூற்றும்.

*இதயச்சந்திரன்*

# லண்டனில் எழுத்தாளர் முருகபூபதி



அவுஸ்திரேலியா மெல்போர்னில் வாழும் பிரபல எழுத்தாளர் லெ.முருகபூபதி பெப்ரவரி 5ம் திகதி லண்டன் வருகிறார். இங்கு அவர் 6 நாள்கள் தங்கியிருப்பார். அச் சமயத்தில் இங்குள்ள தனது கலை, இலக்கிய நண்பர்களை சந்தித்துப் பேசுவதை தனக்குக் கிடைத்த ஒரு சந்தர்ப்பமாகக் கருதுவதாகத் தெரிவித்துள்ளார். பிரபல ஊடகவியலாளர் இளையதம்பி தயானந்தா ஏற்பாட்டில் 7ம் திகதி 'ஹரோ சந்தி' அமைப்பின் சந்திப்பிலும், பெப்ரவரி 8ம் திகதி IBC தொலைக்காட்சியில் ஒளிபரப்பாளர் எம்.என்.எம் அனஸ் நேர்காணல் மற்றும் பெப்ரவரி 9ம் திகதி எழுத்தாளர் பௌசர் ஏற்பாட்டில் ஈஸ்ற்ஹாம் இலக்கிய கூட்டத்திலும் கலந்து கொள்ளவுள்ளார். பாரிஸில் பெப்ரவரி 3ம் திகதி இவரது 'சொல்லத்தவறிய கதைகள்' நூல் அறிமுக விழாவிலும் கலந்து கொள்வார். எழுத்தாளர் வாசுதேவன் தலைமையில், அங்கிருந்து வெளியாகும் 'நடு' இணைய இதழின் ஆசிரியர் கோமகன் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளார். பாரிஸில் ஜனவரி 27ம் திகதி தனது ஆசான் பண்டிதர் மயில்வாகனாரின் நூற்றாண்டு விழாவிலும் கலந்து கொண்டார்.

# டொமினிக் ஜீவாவின் துணைவியார் காலமானார்



இலங்கையின் பழம்பெரும் எழுத்தாளரும், 'மல்லிகை' சஞ்சிகை ஆசிரியருமான டொமினிக் ஜீவாவின் துணைவியார் திருமதி புஸ்பராணி டொமினிக் ஜீவா கடந்த 18.01.2019 அன்று யாழ்ப்பாணத்தில் காலமானார். யாழ்ப்பாணம் St.Konchachi Matha Cemeteryயில் 20.01.2019 அன்று அன்னாரின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. இத்தகவலை மகன் திலீபன் டொமினிக் ஜீவா தெரிவித்துள்ளார்.





# லண்டனில் சிறப்பாக நடந்த 3 அமைப்புகளின் வெள்ளி விழாக்கள்

தமிழினி பிரசுரம், குலேந்திரன் குடிவரவு சம்மேளனம், வாழும்போதே வாழ்த்துவோம் என்ற மூன்று அமைப்புக்களின் ஒன்றிணைந்த வெள்ளி விழாக்கள் 12.01.2019 மாலை லண்டன் Collyers wood சனசமூக நிலைய மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. Merton நகர மேயர் மேரி கேட்டின் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். Mitcham தொகுதி எம்.பி. மக்டொனாவும் விழாவில் கலந்து சிறப்பித்தார்.

தமிழினி குலேந்திரன் நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தி, ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை தொய்வின்றி நகர்த்திச் சென்றதுடன், ஆங்கிலத்திலும் தொகுத்து அளித்தார். 'ஆதவன்' டிவி ஒளிபரப்பாளர் எஸ்.கே.குணா தமிழில் நிகழ்ச்சிகளை அழகாக தொகுத்து வழங்கினார். பிரபல எழுத்தாளர் வவுனியூர் இரா. உதயணன் முன்னிலையாளராகவும், சிறப்பு விருந்தினராகவும் செயல்பட்டார். தமிழ்த்தாய் வாழ்த்து பாலாமிர்தம் வெங்கடேசன் பாடினார். வரவேற்பு நடனம்: சாரங்கி மகரசிங்கம்.



வ.மா.குலேந்திரன் எழுதிய 'தமிழகத்தை ஆண்ட முதல்வர்கள்' நூல் வெளியீடு, விழாவில் முக்கிய அம்சமாக இடம்பெற்றது. யோகவதி செல்லையா நூலை வெளியிட்டு வைத்தார்.

2018ம் ஆண்டுக்கான 'வாழும்போதே வாழ்த்துவோம்' விருதுகளை பிரதம விருந்தினர் வழங்கினார். பின்வருவோர் விருதுகளைப் பெற்றனர்.

சட்டத்துறை: Ms Ursula Miszkail, சிறந்த சமூக சேவை: திருமதி ஜோ மூர்த்தி, சிறந்த சமய சேவை: பா.வசந்தக் குருக்கள், சிறந்த தமிழ் சேவை: சிவா பிள்ளை, சிறந்த தமிழ் உணவு சேவை: தாஷினி உதயகுமார்.

முதியோர் இல்லத்தைச் சேர்ந்த கலைவாணி தியாகராஜா, சாரதா, சிவக்கொழுந்து கிருஷ்ணசாமி, சந்திரா ஸ்ரீனிவாசன், தயாநிதி கருணாநிதி, ராணி உருத்திரன் ஆகியோரின் கோலாட்ட நடனம் சபையோரின் நிறைந்த கரகோஷத்தைப் பெற்றது.

குலேந்திரன் குடிவரவு சம்மேளனத்தில் 25 வருடமாக பணிபுரியும் டில்லிராணி தெய்வேந்திரராஜா, பாரிஸ்டர் உர்சுலா மிஸ்கெயிலுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

மேடை, மண்டபம், சபையோருக்கு உணவு ஆகியவற்றை ராஜேஸ்வரி கருணானந்தம், தயாளன் நவரத்தினம், டில்லிராணி தெய்வேந்திரராஜா, சரோஜினி குலேந்திரன் ஆகியோர் நிர்வகித்தனர்.

சரண்யா தெய்வேந்திரராஜா நன்றி உரை கூறினார். ●











# லண்டன் பல்கலைக் கழகத்தில் தமிழ்மொழி பட்டப்படிப்பு: கருத்தரங்கு

பிரித்தானியாவில் தமிழ் மொழி பட்டப்படிப்பு கற்றல் சம்பந்தமாக எதிர்வரும் *10-02-2019*ம் திகதி ஞாயிற்றுக் கிழமை, பிற்பகல் *2* மணி தொடக்கம் மாலை *5* மணி வரை இலண்டன் உயர் வாசல் குன்று முருகன் ஆலயத்தில் *(200A, Archway Road, Highgate, London. N6 5BA)* நடைபெறவுள்ளது.

*Tamil Chair SOAS* தமிழ் இருக்கை இணைப்பாளர் திரு செலின் ஜோர்ஜூம் அவரது குழுவினரும் வருகை தர இருக்கின்றனர்.

இந்நிகழ்வில் தமிழ் ஆர்வலர்கள் அனைவரும், குறிப்பாக, தமிழ் பாடசாலை நிர்வாகிகள், ஆசிரியர்கள் , ஆலய அறங்காவலர்கள், பெற்றோர்கள் என அனைவரும் கலந்து கொண்டு, தமது கருத்துக்களை தெரிவிப்பதுடன், ஒவ்வருவருக்கும் இருக்கும் தத்தமது சந்தேகங்களையும் தெளிவுபடுத்திக் கொள்ள இது ஒரு அரிய வாய்ப்பாக இருக்கும் என்பதனால், அனைவரும் எமது இளைய தலைமுறையினரின் எதிர்காலச் சுபீட்சம் கருதி, மிகுந்த ஊக்கம் எடுத்து கலந்து கொள்வது ஒவ்வொரு புலம்பெயர் தமிழரதும் தலையாய கடமையாகும்.

இந்நிகழ்வு இலண்டன் பல்கலைகழக தமழ் இருக்கை இணைப்பாளர் திரு செலின் ஜோர்ஜ் அவர்களினதும், குழுவினரதும் வேண்டுகோளுக்கிணங்க, இலங்கை கல்வி அபிவிருத்தி அரங்கம் இக்கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளது. நிகழ்வு குறிப்பிட்ட நேரத்திற்கு நடாத்தி முடிக்கப்படும். மேலதிக விபரங்கட்கு ந. சச்சிதானந்தன் தொலைபேசி *07788196426* செலின் ஜோர்ஜ் *07758204747.*

**UNIVERSITY OF LONDON**
**(SOAS) – TAMIL CHAIR LONDON**

பெரிய பிரித்தானியாவில் *300,000*க்கும் அதிகமான தமிழர்கள், இலங்கை (தமிழீழம்), இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்து இருந்து காலத்திற்கு காலம் பல்வேறு காரணங்களுக்காக, இங்கு குடியேறி வாழ்ந்து வருகின்றனர், இவர்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் உள்ளவர்கள் அரை நூற்றாண்டுகாலமாக வாழ்பவர்களும் உள்ளனர் என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். இவர்களது வழிவந்த இரண்டாம், மூன்றாம் இளைய தலைமுறையினர் தமது அடையாளம் என்ன என்ற கேள்விக்கு, விடையோ அல்லது விளக்கமோ, தெரியாதவர்களாக மொழியை சைவசமய மதநம்பிக்கையை கலைகலாசார பாரம்பரியங்களை புறம்தள்ளி, வெறுமேனே, பிறந்தோம் வளர்ந்தோம் வாழ்ந்தோம், என ஒரு மனநலம் குன்றிய ஏனைய சில சமூகத்தினரின் இளைய தலைமுறை யினரைப் போல, நோக்கமற்ற சிந்தனைத் தெளிவற்ற வாரிசுகளை உருவாக்குகினின்ற இன்றைய மூத்த தலைமுறையினர் தற்சமயம் சமகாலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம், எனும் உண்மை மிகவும் வேதனையானதும் விரைந்து ஆவன செய்ய வேண்டிய விடயமுமாகும். ஒரு மொழியானது தொடர்பாடலுக்கு மட்டும்தான் தேவை வாதிடுபவர்கள் எம்மத்தியிலும், இருக்கின்றார்கள். மூத்த முதன்மையான தாய் மொழி தமிழ் மொழி, வெறுமனே ஒரு ஊரையாடல் மொழிமட்டுமல்ல, தமிழ் மொழியில் இருக்கின்ற சிறப்பு வேற எந்த மொழிகளுக்கும் இல்லை என்பது மட்டுமே, ஏன் இச்செம்மொழி எம் வருங்காலாச் சந்ததியினருக்கு, பெற்றோராகிய நாம் தவறாது தாய்ப்பால் ஊட்டுவது போல், ஊட்ட வேண்டியது, நம் ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும். ஆழமான மொழி அறிவு இருக்குமாயின், மற்றவை அனைத்தும் இயல்பாகவே வந்து சேர்ந்துவிடும்.

இலண்டன் பல்கலைக்கழகம் தமிழுக்கு ஒரு பீடத்தினை அமைத்து, தமிழ் மொழிக்கல்வியை மேற்படிப்புக்காக தேர்ந்தெடுப்பவர்களுக்கு பட்டப் படிப்பினை மேற்கொளவதற்கும் நவீன காலத்திற்கேற்ப தமிழை ஆராய்ச்சி செய்வதற்கும் தமிழ் இருக்கையை ஏற்படுத்துவதற்கு, பல சமூக ஆர்வலர்கள் பெருமுயற்சி எடுத்து வருகின்றனர். இம்முயற்சிக்கு பெருமளவு பணம் தேவைப்படுவதன் காரணமாக அத்தொகையை பெற்றுக் கொள்வதற்கு எவ்வகையான வளிமுறைகளை பின்பற்றலாம் என ஆராய்வதுடன், இப்படியான தமிழ் பீடம் அல்லது இருக்கையை நமது இளைய தலைமுறையினர் பயன்படத்தி தமக்கும் தமிழ் மொழிக்கும் சிறப்புச் சேர்க்க வேண்டுமாயின், புலம்பெயர் குழந்தைகளை எவ்வாறு தயார் நிலைக்கு கொண்டுவருவது என்பதும் இம் முயற்சியில் உள்ள சாதகபாதகங்கள் என்ன என்பது பற்றியும் சமூகத்தின் சகல தரப்பினரதும் கருத்துக்கள் கண்டறியப்பட வேண்டியது மிக முக்கிய அம்சமாகும். ●

5ம்பக்க தொடர்ச்சி....

# விமலின் பக்கம்



இந்தக் காப்பகத்தில் தலைமை மருத்துவராகப் பணியாற்றுகிறார் டாக்டர் அர்ச்சனா. அழகே உருவான நடிகை இந்துஜா டாக்டர் அர்ச்சனாவாக நடிக்கிறார்.

காப்பகத்தில் இருந்து வெளியேறும் பிரகாஷ்ராஜ் திரும்பி வர வழி தெரியாமல் - தான் யார் என்று சொல்லவும் முடியாமல் சமுத்திரக்கனி உட்பட்ட சில கொலைஞர்களின் கையில் சிக்குண்டு தவிக்கும் காட்சிகள் சிறப்பு.

‘அல்சைமர்’ நோயாளிகளின் மூளையில் சில சம்பவங்கள் அழித்து எழுதாத ஓவியங்களாக நிரந்தரமாகப் பதிந்து விடுகின்றன. தான் காதல் வசப்பட்டு தன் காதலியைப் பின்தொடர்ந்த காலம் பிரகாஷ்ராஜின் மனதில் இருந்து விபரிக்கப்படுவது சுவையாக இருக்கிறது. தனது காப்பகத்தின் மருத்துவர் டாக்டர் அர்ச்சனாவிடம் தனது காதல் நினைவுகளை ரசித்து விபரிக்கும் கட்டம் உள்ளத்தைத் தொடுகிறது.



“ஏய் செல்லம்” என்று வழக்கமான தமிழ் படங்களில் மிரட்டலான வில்லன் பாத்திரத்தில் நடிக்கும் பிரகாஷ்ராஜ், இதில் ஒரு குணசித்திர நடிகராக உயர்ந்து நிற்கிறார்.

மொத்தத்தில் ‘அல்சைமர்’ நோயினால் ஏற்படும் ‘டிமென்சியா’ - மூளை தேய்வு (மறதி நோய்) பற்றிய அற்புதமான படம் “60 வயது மாநிறம்”. ஒருவரைக் காணவில்லை என்று ஒட்டப்படும் போஸ்டர்களில் எழுதப்படும் வாசகம்தான் தலைப்பு!

இந்த நோய்க்கு, மேற்குலக மருத்துவ உலகில் இன்னமும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. அதுவரை ‘அல்சைமர்’ நோயாளிகளுக்கு இன்று தேவைப்படுவது:- அன்பான கவனிப்புத்தான்.

பிரிட்டனில் உள்ள ‘அல்சைமர் கழகம்’ டிமென்சியா, ‘அல்சைமர்’ நோயாளிகளுக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குகிறது.

உங்களுக்கோ, உங்கள் குடும்பத்தினருக்கோ இது குறித்த மேலதிக தகவல்கள் தேவைப்பட்டால் அல்லது நோய் பற்றி ஏதாவது கேள்வி இருந்தால் அதற்கு மனமுவந்து பதில் அளிக்க மருத்துவ நிபுணர்கள் தயாராகக் காத்திருக்கிறார்கள்.

**பிரிட்டனில் தொலைபேசி இலக்கம்: 0 300 222 11 22.**

wimalsockanathan@gmail.com



கவிஞர் சிவசிவா அழகன்ராஜ்

# தமிழே உன் மகளுமாய்!

நாணமே முகத்தில்
பாவமாய்
நடையில் அன்னத்தின்
நயமுமாய்,

நெற்றிப் பிறையில்
திலகமுமாய்
பற்றிப் படர்ந்தவள்
குணமுடையாய்,

ஜாடையே விழிகளின்
பேச்சுமாய்
கன்னக் குழிகளில் வழிவது
தேனுமாய்,

கவர்ந் திழுக்கும் இதழ்கள்
இருபாதியாய்
சங்கைக் கழுத்தாக செதுக்கிய
பாவையாய்,

பல்லின் வெண்மை மனதுடன்
போட்டியாய்
சிகையின் கருமை இருளுக்கு
விளக்கமாய்,

இடையே இல்லை எனும்படி
காட்சியாய்
இடைவிடாது என்மனதைத் திருடும்
ஆட்சியாய்,

கலையை வெல்லும் முன்னழகு
மார்பிலாய்
கவிழ்ந்தேன் அவள் பின்னழகை
சிலைவடிவாய்,



அழகேநீயே குறைவு என்பாய்
அவளே முதலுமாய்
அவளை வேறுயார் என்பாய்
தமிழே அவளே உன் மகளுமாய்!

# வாசகர் கடிதம்

## ‘புதினம்’ கருத்து சரியானதே!

‘ஒன்றுமே நடக்கப் போவதில்லை’ என்ற முதல்பக்க ‘2019 அரசியல்’ கருத்து சரியானதே. பார்வை அற்புதம். அது கிடைக்கும், இது வரும் என்ற உறுதிமொழிகள் எல்லாம் கேட்டுக் கேட்டு புளித்துப் போய்விட்டதை அமைதியாகச் சொல்லியிருக்கிறீர்கள்.

**-ஆர்.கே.குலசிங்கம்**

## கிழிக்கிறது

டாக்டர் ஸ்ரீதரனின் ‘சிதம்பர-சக்கரம்’ சிந்திக்க மட்டுமல்ல, போலித்தனத்தை கிழித்து எறிகிறது. முன்னர் ‘நிர்வாணம்’ படித்த போதும் இதே உணர்வைத்தான் அனுபவித்தேன். ‘புதினம்’ இதழில் அவரது எழுத்துக்களைத் தொடர்ந்து வெளியிடுங்கள்.

**ந.கனகதாயகம்.**

## போலிகள்

லண்டன் புதினத்தில் உங்களது கலாநிதிகளும் கல்லாநிதிகளும் கதை படித்தேன். மிக யதார்த்தமான கதை. சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்டிருந்தது. இப்படியான சமூகப் பிரக்ஞையுடன் கூடிய கதைகள் காலத்தை வென்று வாழும் இலக்கியப்போலிகள் பலர் இலங்கையிலும் இருக்கிறார்கள். உங்களது கதை அவர்களை எனக்கு நினைவூட்டியது-வாழ்த்துகள்.

**தி.ஞா.**




## விமலின் பக்கம் அருமை

‘புதினம்’ டிசம்பர் இதழ் விமலின் பக்கம் அருமையான அலசல். தமிழகத்தின் மாபெரும் பிரச்சினை, தமிழ்நாட்டை உலுப்பிக் கொண்டிருக்கும் இந்த கொடிய வழக்கம் ஒழியுமா? இந்தக் கேள்விக்கு விடை கிடைக்குமா? பிள்ளையைக் கொன்றுவிட்டு சமூகத்திலே இவர்கள் என்ன மரியாதையைப் பெறுகிறார்கள்?

பரியேறும் பெருமாளின் விமர்சனத்துடன் முடித்திருப்பது பொருத்தம். நல்லவேளை எமது நாட்டிலே வோட்டு அரசியலோடு இது கலக்கவில்லை என்று ஆறுதலடைவோம்.

**-பராசக்தி சுந்தரலிங்கம்**

## கோடானுகோடி நன்றிகள்

‘புதினம்’ தை மாத இதழில் கந்தசாமி மனேகரனின் வட இந்தியச் சுற்றுப் பயணக் கட்டுரையை, அப்பயணத்தில் நானும் பங்கேற்றவன் என்பதால் மிகவும் ஆவலுடன் படிக்க ஆரம்பித்தேன். முதலில் இக் கட்டுரைக்கு ‘ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரோ கூட்டுவித்தால் யாரோருவர் கூடாதாரோ!’ என்று தலைப்பிட்டதன் காரணம் புரியவில்லை. படிக்கப் படிக்கத்தான் புரிந்தது, ஆசிரியரின் சிந்தனைத் திறனும் சொல் ஆளுமையும். உண்மையில் முன் பின் அறிமுகமற்றவர்கள் பலர் ஒன்று சேர்ந்து, யாத்திரையில் பங்கு பற்றியமையையும், பின் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிய பொழுது- ஒரு சிலர் ஒருவரையொருவர் அறியாதவர்களாயினும்- ஏதோ ஒருவகையில் முன்பே தொடர்புடையவர்களாயிருந்தமையையும் நினைத்துப் பார்க்கையில் இக் கட்டுரைக்கு இதனைவிட பொருத்தமான தலைப்பு வேறெதுவும் இருக்க முடியாதென்பது புரிந்தது. தொடர்ந்து படித்தேன். யாத்திரையின்போது நாம் தரிசித்த இயற்கைக் காட்சிகளை திரும்பவும் என் கண்முன்னே கொண்டு வந்த மனோகரனுக்கும் இக் கட்டுரையை பிரசுரித்த புதினம் பத்திரிகை ஆசிரியருக்கும் கோடானுகோடி நன்றிகள்.

**-பி.தர்மகுலசிங்கம்.**

## காத்திருக்கிறோம்

வட இந்திய சுற்றுப்பயணம் மிக அருமையாக- ஆவலை தூண்டும் வண்ணம் எழுதப்பட்டுள்ளது. நல்ல தமிழ், சிறந்த வசன நடை, உயிர் துடிப்புடன் இருக்கிறது கட்டுரை.

நானும் எனது துணைவியாரும் அந்த பயணத்தில் கலந்து கொண்டாலும், இக் கட்டுரை எம்மை புல்லரிக்க வைக்கிறது. கட்டுரை தொடரை படிக்க விருப்புடன் காத்திருக்கிறோம்.

**-தியாகலிங்கம்.**






## தமிழை அழிய விட மாட்டோம்!

# பிரித்தானிய பாராளுமன்ற பொங்கல் விழாவில் இளைய தலைமுறை உறுதி!











தொன்மையான தமிழர் பாரம்பரியத்தின் செழுமையை பிரித்தானியா பாராளுமன்றிலும் உலகளாவியரீதியிலும் எடுத்துச் செல்லும் நிகழ்வாக சனவரி 15 அன்று தை பொங்கல் விழா தமிழ் இளையோரின் சிறப்புமிகு பங்களிப்புடன் இடம்பெற்றது.

தமிழ்த் தாய் வாழ்த்துடன் ஆரம்பித்த பொங்கல் சிறப்பு நிகழ்ச்சி தமிழர் கலைகளான நாட்டார் பாடல், கரகாட்டம், வீணை, பரதநாட்டியம், கர்நாடக சங்கீதம் என்பனவற்றுடன் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பாக பங்களித்த மில்டன் கீய்ன்ஸ் தமிழ் பாடசாலை, வோல்தம்ஸ்டோவ் தமிழ் பாடசாலை, தமிழ் மொழிக் கலைக் கழகம் ( *Tamil Academy of Language & Arts*), நிகழ்ச்சிகளை தயார்படுத்தி வழங்கிய ஆசிரியர்கள், ஈலிங் அம்மன் கோயில் மற்றும் இந்து, கத்தோலிக்க மதகுருக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் பிரித்தானிய தமிழர் பேரவை நன்றியை தெரிவித்துக் கொள்கின்றது. நெருக்கடியான பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலின் மத்தியிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

தமிழ் இளையோரின் அரங்க நிகழ்வில் "உலகில் மிக தொன்மையான மொழி தமிழ், எம் மொழி மீது எமக்கு மதிப்பும் பெருமையும் அன்புமுண்டு, தமிழ் வெறும் மொழி மட்டுமல்ல, அது எம் பண்பாடு, கலாச்சாரம், எம் வாழ்வு, எம் மூச்சு. தமிழ் பல நாடுகளிலும் பேசப்பட்டாலும் தமிழுக்கென்று ஒரு நாடில்லை. நாங்கள் ஒரு நாளும் தமிழ் மொழியை அழிய விட மாட்டோம்." எனப் பதிவு செய்யப்பட்டது. அத்துடன் அவர்கள் தமிழ் வளர்த்த சான்றோர்களை பார்வையாளர்களின் நினைவிற்கு மீளக் கொண்டு வந்தனர்.

“தமிழ் இளையோர் தம் செழுமையான பாரம்பரியத்தை ஆராதிக்கின்றனர்” என்பதே இவ் வருட தை திருநாள் விழாவின் கருப்பொருளாகும். இன்றும் வாழுகின்ற செம்மொழியாகிய தமிழ் மொழிக்குச் சொந்தமான தமிழர்கள் தொன்மையான நாகரீகம், அறிவியல், கலை, பண்பாடு, விருந்தோம்பல், சிற்பம், கட்டிடக் கலை, கடலோடும் திறன், பன்னாட்டு வர்த்தகம் என்பனவற்றை பல நூறு வருடங்களாக உலகிற்கு வழங்கியுள்ளார்கள். தமிழர்கள் எங்கு சென்றாலும் அவர்கள் கடினமாக உழைக்கிறார்கள், கல்வியைத் தேடுவதில் அதீத நாட்டமுடையவர்கள், தாம் வாழும் நாடுகளிற்கு வளமூட்டுபவர்கள், இது தமிழர் கலாச்சாரத்தில் ஆழமாக



வேரூன்றி உள்ளது. ஆனால், தமிழ் இனத்தின் நிலம், அடையாளம் உட்பட அதன் இருப்பையே அழிக்கும் போக்கு இலங்கையில் தொடர்கின்றது. ஆதலால் வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் ஒற்றுமையுடன் தமிழ் அடையாளத்தையும் மொழியையும் உயிர்ப்புடன் வைத்திருக்க வேண்டும் என்ற கருத்தினை பிரித்தானிய தமிழர் பேரவையின் இளையோர் முன்வைத்தனர்.

வெஸ் ஸ்ட்ரீட்டிங் *MP (Wes Streeting MP)* "நல்ல அறுவடைக்கு நன்றி செலுத்தும் பொங்கல் திருநாளிற்காக பாராளுமன்றத்திற்கு வருகை தந்திருக்கும் அனைவருக்கும் வாழ்த்துக்கள். தலைமுறைகளாக இந்த நாட்டுக்கு தமிழ் மக்கள் வழங்கிய அரசியல், பொருளாதார, கலாச்சார பங்களிப்புகளை பாராட்டுகிறேன். பிரெக்ஸிட் (*BREXIT*) தொடர்பான மிகவும் பாரதூரமான விடயங்கள் குறித்து இந்த நாடே வேறுபட்ட அரசியல் கருத்துக்களுடன் விவாதித்து வரும் இவ் வேளையிலும் கூட பிரதம மந்திரி தெரசா மே அவர்களும் எதிர்க் கட்சித் தலைவர் ஜெரமி கோர்பின் அவர்களும் நன்றியுடன் வாழ்த்துவதற்கு காரணம் தமிழ் மக்கள் இந்த நாட்டிற்கு அளித்த பங்களிப்பு அளப்பரியதாகும். முக்கிய விவகாரங்கள் மிக விரைவாக மாறிக் கொண்டிருக்கும் இவ் வேளையில் சனநாயகத்தின் மையமாகவுள்ள வெஸ்ட்மினிஸ்டரில் இந்த முக்கியமான திருவிழாவைக் கொண்டு வந்ததற்கு நன்றி" எனக் கூறினார்.

ஸ்டீபன் டிம்ஸ் *MP (Rt Hon Stephen Timms MP)*" ஒரு நேர்த்தியான விழாவில் பங்களிக்க நாம் அனைவரும் இங்கு வந்துள்ளோம். அதேவேளை 10 வருடங்களுக்கு முன்னர் சிறிலங்காவில் நடந்த மிக மோசமான சம்பவங்கள் நினைவில் வருகின்றது. அளப்பரிய உயிர்கள் இழக்கப்பட்டன, காணாமல் ஆக்கப்பட்ட பலருக்கு என்ன நடந்தது என்பதை இன்னமும் அறிந்து கொள்ள முடியாத அவர்களின் அன்புக்குரியவர்கள் தேடிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதுடன் அவர்களின் ஆழமான துயரத்தை இவ் வருடம் நினைவுபடுத்துகிறது. சித்திரவதைகள் உட்பட பல விடயங்கள் அங்கே தொடர்கின்றன. கடந்த செப்டம்பரில் ஜெனீவாவிலுள்ள ஐ.நா மனித உரிமைக் கழக (*UNHRC*) கூட்டத் தொடரில் இங்கிருப்பவர்களுடன் இணைந்து நானும் கலந்து கொண்டேன். அடுத்த மாதம் தொடங்கவுள்ள கூட்டத் தொடரில் நாம் கவனம் செலுத்த வேண்டும். கடந்த காலத்தில் பல சரியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் பிரித்தானியாவிற்கு விசேட பங்குண்டு. எனவே பொறுப்புக் கூறல் தொடர்பான விடயங்களை நிறைவேற்றுவதில் பிரித்தானியாவிலுள்ள நாம் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் ஜான் ரையன் *MP*, ஷிவோன் மக்டொன்னா *MP* உட்பட பல *MP*க்கள் தவிர்க்க முடியாத காரணத்தின் நிமித்தம் இங்கு கலந்து கொள்ள முடியாவிடினும் தம் வாழ்த்துக்களை தெரிவிக்குமாறு கூறியுள்ளார்கள்”.

தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் (*APPGT*) அமைப்பின் தலைவரான போல் ஸ்கல்லி (*Paul Scully MP*) பொங்கல் திருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன் நெருக்கடி நிறைந்த பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலின் மத்தியில் இன்றைய தினத்தில் முழுமையாக பங்கெடுக்க முடியாததற்கு வருத்தம் தெரிவித்தார். தமிழ் மக்களின் நீதிக்கும் பொறுப்புக் கோரல் தொடர்பான விடயங்களில் தானும் அனைத்து கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் தொடர்ந்து பங்கெடுப்போம் என உறுதியளித்தார்.

"தை பொங்கல் வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் சர்வதேச நீதியைத் தேடும் உங்கள் முயற்சிகளுக்கு என் தொடர்ச்சியான ஆதரவினை உறுதிப்படுத்துகின்றேன். எதிர்காலத்தில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்த ஒவ்வொரு மட்டத்திலும் உங்களுடன் வேலை செய்ய ஆர்வமாக இருக்கிறோம், மனித உரிமைகளுக்காக மனித உரிமை கவுன்சிலுக்கு உங்களை பிரதிநிதித்துவப்படுத்தி பல முறை சென்றுள்ளேன், இனியும் செல்வேன்" என ஜோன் மான் *MP (John Mann MP)* குறிப்பிட்டார்.

சவால் நிறைந்த புதிய வருடத்தில், அதிகரித்து வரும் இளையோர் பங்களிப்பு நம்பிக்கை அளிக்கின்றது. ●



"Ammanai Saran Addinthal Athika Varam Peralam"

**SRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**

Founded on 10.08.1991 Charity No. 1014409

5 Chapel Road London W13 9AE,

Tel: 020 8810 0835/ 020 8840 0485

www.ammanealing.org Email: info@ammanealing.org

# தியான மண்டபம்



## அம்பிகைக்கு ஓர் மண்டபம் அமைத்திடுவோம் வாரீர் !

**6000 சதுர அடியில் மூன்று தளங்களைக் கொண்டு அமையும் தியான மண்டபம் ஒவ்வொருவரும் இணைந்திட ஒரு சதுர அடிக்கு £180 பவுண்களே. அம்பிகையின் அருட்கடாட்சத்திற்கு ஆளாகுங்கள்.**

கடந்த 14.07.2018 அன்று அழகுற அமையப் போகும் தியான மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. கட்டட வேலைகள் துரிதமாக நடைபெற துர்கை அடியார்கள் அனைவரும் தங்களால் முடிந்த நன்கொடையை வழங்கி உதவுங்கள்!

சிறுதுளி பெரு வெள்ளம்

**தியான மண்டப கட்டட நிர்மாண வேலைகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரருக்கான TENDER கேள்விப் பத்திரங்கள் எதிர்வரும் மார்ச் மாத இறுதியில் கோருவதற்கான ஒழுங்குகள் நடைபெறுகின்றன.**

Bank Details: SKTA Temple Trust

LLOYDS Bank, Sort Code: 30-98-91 | Account No: 02717646

**அன்னையின் பணியில் இணைந்திடுங்கள் அவள் அருளைப் பெற்றிடுங்கள்!**

*Please Donate as much as you can!*